பறப்பதற்கு முன்
கொஞ்சம்
இந்துமதி

பறப்பதற்குமுன் கொஞ்சம்...

1

''ஸ்ரீராம்...''

பதில் வரவில்லை.

''எம். எஸ். ஸ்ரீராம்...''

அதற்கும் 'எஸ். மிஸ்ஸேஸ், பிரஸண்ட் மிஸ்ஸேஸ்' இல்லை.

வகுப்பாசிரியை வில்லிசாமுவேல் தலையை உயர்த்தி கண்ணாடிக்குள்ளிருந்து ஸ்ரீராமின் இடத்தைப் பார்த்தாள். அவன் உட்கார்ந்திருந்தான். தன் ஞாபகமற்றவனாக வெளியில் தூரத்தில் எங்கோ வெறித்துக் கொண்டிருந்தான். வில்லிசாமுவேலின் குரல் காதில் விழாதவனாக இருந்தான்.

ஸ்ரீராம் இப்படி இருப்பது இது முதல் முறை இல்லை. எத்தனையோ தடவை வில்லி சாமுவேலே கண்டித்திருக்கிறாள்.

''ஸ்ரீராம் இப்படி இருப்பதானால் நீ வகுப்பைவிட்டு வெளியே போகலாம்'' என்று கடித்து கொண்டிருக்கிறாள். வகுப்பை விட்டு வெளியிலும் நிற்க வைத்திருக்கிறாள். ஆனால் வகுப்பால் நாற்பது நிமிடங்களும் வெளி

யில் நின்று விட்டு மணியடித்ததும் வில்லிசாமுவேல் வெளியில் போகிறபோது பின்னாலேயே ஸ்டாஃப் ரூம் வரை போவான்.

''ஸாரி மிஸ், இனிமேல் இப்படிச் செய்ய மாட்டேன் மிஸ்... என்று கெஞ்சுவான்.

''தோ, இதோடு எத்தனை தரம் நீ இப்படி ஸாரி கேட்டிருக்கேன்னு நினைச்சுப் பாரு ஸ்ரீராம். ஆனால் ஒரு தடவையாவது திரும்பச் செய்யாமல் இருந்திருக்கிறாயா?... ஸாரி என்கிற வார்த்தை வெறுமனே சொல்லி விட்டுப் போவதில்லை. அர்த்தமில்லாதது இல்லை. உதட்டிலிருந்து வருவதில்லை. மனசின் அடித்தளத்திலிருந்து வரணும். நிஜமாக 'நாம் செய்தது தவறு' என்று உணரணும். அப்படி உணருகிற மனுஷன் திரும்ப அதே தவற்றைச் செய்ய மாட்டான். செய்யக் கூடாது என்பதற்காகத்தான் ஸாரியே தவிர சும்மா உதிர்த்துவிட்டுப் போவதற்கில்லை...''

ஸ்ரீராம் தலைகுனிந்து சட்டை நுனியை விரலால் முறுக்கியபடி பேசாமல் இருப்பான். அந்த நிலைமையில் அவனைப் பார்க்க வில்லிசாமுவேலுக்குப் பரிதாபமாக இருக்கும். ஏதோ ஒரு இரக்கம் நெஞ்சைச் சூழ்ந்து கொள்ளும். தன் எட்டு வயதுப் பையன் பீட்டர்சாமுவேலின் நினைவு வரும். ஆனால் பீட்டர் இப்படி இருக்க மாட்டான். நிதானமாகப் பேசமாட்டான். படபடவென்று பொரிந்து கொட்டுவான். நுறுநுறுவென்றிருப்பான். நிறைய சண்டை போடுவான். சைக்கிளை அதி வேகமாக மிதிப்பான். விளையாடுவான். மரமேதிக் குதிப்பான். பெரியதாய் சிரிப்பான். சக பையன்களை கலாட்டா பண்ணுவான். எட்டு வயதுப் பையன் எப்படித் துடிப்பாக இருக்க வேண்டுமோ அப்படி இருப்பான். அப்படித்தான் இருக்க வேண்டும். அது மாதிரி இருப்பதுதான் இயல்பு. சகஜமானது. அப்படித்தான் எல்லாப் பையன்களும் இருந்தார்கள்...

ஆனால் அப்படியில்லாமல் இந்த ஸ்ரீராம் மிகவும் மிகவும் வித்தியாசமானவனாக இருந்தான். யாரோடும் பேசாமல் ஒதுங்கி நின்றான். எல்லாச் சிறுவர்களும் விளையாடப் போகும்போது இவன் மட்டும் தனித்துக் காணப்பட்டான். பகல் சாப்பாட்டைக்கூடத் தனியாக ஓர் ஓரமாக உட்கார்ந்தே சாப்பிட்டான். வகுப்பிலும் கலகலப்பாகப் பழகுவதில்லை. பேசுவதில்லை. எது கேட்டாலும் எழுந்து சட்டை நுனியைச் சுருட்டி தலைகுனிந்தே நின்றிருப்பான்.

''ம்...சொல்லு ஸ்ரீராம். இந்தப் பொயட்ரியை அன்னிக்கே நடத்தியிருக்கேன். இன்னிக்குப் படிச்சிட்டு வரச் சொல்லியிருக்கேன். முதல் வரி கூடவா உனக்குத் தெரியலை?...''

''.....''

''இப்படி வாயைத் திறக்காமல் என் கழுத்தறுக்கிறாய். படிச்சிட்டு வரலையா...?''

''.....''

''படிக்கலைன்னா படிக்கலைன்னு சொல்லேன்...?''

''.....''

''சரி இதற்கும் பதில் சொல்லலைன்னா வெளியே போய் நில்லு...''

அதற்கு மட்டும் உடனடியாகக் கீழ்ப்படிந்து வெளியில் போய்விடுவான். வகுப்பில் மற்ற பையன்களுடன் உட்கார்ந்திருப்பதைவிட இப்படி வெளியில் போய் நிற்பது அவனுக்குச் சுலபமான விஷயமாக இருப்பதாகப் பட்டது. ஒரு மணி நேரமானாலும் அப்படி நின்று கொண்டிருப்பதில் எந்தக் கஷ்டமும் இல்லாததாகத் தெரிய அதன் பின்னரே வில்லிசாமுவேல் அவனை வெளியில் அனுப்புவதைக் குறைத்துக்கொண்டு, இவன் இப்படி எதிலும் சுவாரஸ்யமற்று இருக்க என்ன காரணம், என்பதைக் கண்டுபிடிக்க முனைந்தாள். மற்ற ஆசிரியை

ணிடம் ஒரு வருப்பாசிரியையின் பொறுப்பில் விசாரிக்க வரனாள்.

"ஏன், சகுந்தலா, டீச்சர், நீங்க ஃபைவ் 'ஏ'க்கு கணக்கு எ[illegible]க்கறீங்க இல்லை...? ஸ்ரீராம் எப்படி பிஹேவ் பண்றான்...?"

ஆசிரியைகளுக்கென்று ஒதுக்கப்பட்டிருந்த ஸ்டாஃப் அறையில் தோட்டுப் புஸ்தகங்களைத் திருத்திக் கொண்டிருந்த சகுந்தலா தலை உயர்த்திச் சட்டென்று பிடிபடாமல் கேட்டாள்.

"எந்த ஸ்ரீராம்...?"

"இந்த வருஷம் புதுசா சேர்ந்தானே, அந்தப் பையன்..."

"யாரு? வெள்ளையா, ரோகை பிடிச்சா மாதிரி, ஒல்லியா, முகத்தை எப்போதும் சோகமா வச்சிட்டிருப்பானே, அந்தப் பையனா...?"

"அவனேதான்..."

"வெரி புவர் இன் மாத்தமடிக்ஸ்..."

"படிப்பைப் பற்றி நான் கேட்கலீங்க. வகுப்பில் எப்படி இருக்கான்...?"

"வகுப்பில் அவனைத் தேடிக் கண்டுபிடிக்கணும். அத்தனை அமைதி..."

தான் கேட்ட கேள்விக்கு ஏற்ற வகையில் பதில் வராததால் லில்லிசாமுவேல் அதற்கு மேல் சகுந்தலாவைக் கேள்வி கேட்பதை நிறுத்திக் கொண்டாள். சகுந்தலா சின்னப் பெண் இன்னமும் கல்யாணமாகாதவள். பொழுது போக வேலையில் சேர்ந்திருக்கும் ரகம். இன்னும் சிறுவர்களை அவர்களது மனோதத்துவ ரீதியில் ஊடுருவிப் பார்க்க இயலாத முதிர்ச்சியின்மை. அதனால் சகுந்தலாவை விட்டு விஞ்ஞான ஆசிரியை கபத்ராவிடம், சரித்திர ஆசிரியை பார்வதியிடம், பூகோள

ஆசிரியை கனகவல்லியிடம், தமிழ் ஆசிரியை சீதாலக்ஷ்மியிடம் என்று தனித்தனியாக விசாரித்தாள்.

"ஓ—ஸ்ரீராம், எம். எஸ். ஸ்ரீராம். அந்தப் பையன் தானே— அவனுக்கு ஏதோ சைக்காலஜிகல் பிராப்ளம் இருக்கணும்னு தோண்றது. இல்லாதுபோனால் அப்படி இருக்க மாட்டான்..."

"எப்பவும் சோர்ந்தா மாதிரி சுரத்தே இல்லாமல் இருக்கான். கேட்ட கேள்விக்குக் கூட பதில் சொல்ல மாட்டேன்றான்..."

"பழைய ஸ்டூடன்ட் என்றாலும் ஓரளவு அவனது பின்னணி புரியும். இவன் புதுசு. இந்த வருஷம்தான் சேர்ந்திருக்கான். ஸ்கூல் திறந்து இன்னும் மூன்று மாசம் கூட ஆகலை. அதற்குள் என்ன சொல்ல முடியும்...? ஒரு வேளை அவன் படித்த பழைய பள்ளிக்கூடச் சூழ்நிலை வேறு மாதிரி இருந்ததோ என்னவோ...? அந்த நண்பர்களை மறக்க முடியாமல் சங்கடப்படுகிறானோ என்று நினைக்கிறேன்."

"முன்னால் எங்கே படிச்சானாம்...?"

"பெங்களூரில் ஏதோ 'கிறிஸ்துவ மிஷன் கான்வெண்ட்னு சொன்னதாக ஞாபகம்..."

"எதுவாக இருந்தாலும் பையன் ஏன் இப்படிக்கூட்டுக்குள் ஒடுங்கும் நத்தையாக இருக்கான்னு புரியலை? இவனை இப்படியே விடக்கூடாது கபத்ரா. ஏதனாலோ அதிகம் பாதிக்கப்பட்டிருக்கான்னு தெரிவுது. அது என்னன்னு கண்டுபிடிச்சு, அவன் ஒடுங்கும் கூட்டை உடைச்சு வெளியில் கொண்டு வரணும். முதல்ல அவன் கிட்டே பேசிப் பார்க்கணும்..."

ஒரு வினாடி யோசித்த தமிழ் ஆசிரியை சீதாலக்ஷ்மி சொன்னாள்:

"இவன் கிட்டே பேசறதை விட இவளது அம்மா அப்பாவைக் கூப்பிட்டுப் பேசறது நல்லதுன்னு நினைக்கிறேன்..."

"அப்படியா...?" என்று தயங்கிய மிஸ்டர் சாமுவேல் "அவனுக்கு அம்மா இருக்காங்களா தெரியுமா உங்களுக்கு? பொதுவாக அம்மா இல்லாத பசங்களுக்குத்தான், இந்த மாதிரி ஒரு காம்ப்ளெக்ஸ் வரும். கூட்டில் ஒடுங்குகிற பறவையாக இருப்பாங்க, சிறகு முறித்த மாதிரி சங்கடப்படுவாங்க..."

"நீங்க நினைக்கறதும் சரி. ஆனால் இவனுக்கு அம்மா இல்லைன்னதை கன்ஃபர்ம் பண்ணிக்கிட்டு கேட்கலாம்..."

"இல்லை, இந்த மூன்று மாசத்துல கிட்டத்தட்ட எல்லாக் குழந்தைகளுடைய அம்மாவும் ஸ்கூலுக்கு வந்து தங்கள் பையன்கள் எப்படிப் படிக்கிறாங்கன்னு விசாரிச்சிட்டுப் போயிட்டாங்க. ஒரே ஒருவது இருந்தால் சொல்லிட நிர்வாகி செய்திட்டாங்க. ஆனால் இந்த ஸ்ரீராம் வீட்டிலிருந்து மட்டும் இதுவரை யாரும் வரலை. புதுப் பள்ளிக்கூடமாயிற்றே எப்படி இருக்கு? எந்த மாதிரி பாடம் நடத்தறாங்க, பையன் எப்படிப் பழகறான், கிளாஸ் டீச்சர்களாவது தெரிந்துக்கக்கூட யாரும் வரக் காணோமே...?"

"ஒ... அதை வைத்து இவனுக்கு அம்மா இல்லைன்னு முடிவு பண்ணிட முடியாது. சில பெற்றோர்கள் இந்த ஈடுபாடெல்லாம் இல்லாமலே இருப்பார்கள்..."

"ஹூம், அதெல்லாம் நம்ம காலம் தான் என்ன படிக்கிறோன்னு தெரிஞ்சுக்காமல்கூட எங்கம்மா இருந்து இருக்கிறான். ப்ராக்ரஸ் ரிப்போர்ட் வந்த அன்னிக்கு மட்டும்தான் அப்பாவுக்கு நான் எப்படிப் படிக்கிறோன்னு தெரியும். ஒன்று ஒரு கற்றல் கத்திட்டு கையொழுத்து போட மாட்டோன்ற அடம் பிடிச்ச, என்னை அழ வைச்ச இரண்டு நாளுக்கு அப்புறம் போட்டுத் தருவார். அதற்கும் புறம் ஒரு தடவை கூட பக்கத்துல வந்து என்ன

படிக்கிறோன், என்ன நடத்தி இருக்காங்கன்னு கேட்க மாட்டார். எதாவது புரியலைன்னாலும் கிட்டே போய்க் கேட்க முடியாது. எரிந்து விழுவார். இப்போபெற்றோர்கள் அப்படியா இருக்காங்க...? எதற்கும் பள்ளிக்கூடத்திற்கு ஓடி வந்துடறாங்க. கேள்வி மேல் கேள்வி கேட்கறாங்க, எல்லாவற்றையும் விசாரிக்கிறாங்க, ஒரு பொறுப்பு உணர்ச்சியோடு நடந்துக்கறாங்க. அதனால் அப்படிச் சொல்லவே முடியாது."

"நீங்கச் சொல்றது சரிதான். அதனால்தான் என் ஸ்ரீராமின் அம்மாவோ, அப்பாவோ ஒருமுறைகூட அப்படி வந்து விசாரிக்கலைன்னுதான் கேட்கிறேன்..."

"முதல் தாள் ஸ்கூல் திறந்த அன்று அவன் யாருடன் வந்தான்?"

"ம்..." என்று யோசித்தார் மிஸ்டர் சாமுவேல். "தனியாகத்தான் வந்தான்னு நினைக்கிறேன். யாரும் கொண்டு வந்து விட்டதாக ஞாபகம் இல்லை."

"அப்போ ஒன்று செய்யலாம். நாளைக்கு அவனுடைய அம்மாவை வந்து பார்க்கச் சொல்லி அவன் கிட்டேயே சொல்லி அனுப்பலாம்..."

"வேண்டாம், அவசரப்படாதீங்க மிஸ்டர். இந்த மாதக் கடைசியில் எப்படியும் பேரண்ட்ஸ்—டீச்சர்ஸ் மீட்டிங் இருக்கு. எல்லாக் குழந்தைகள் கிட்டேயும் அவங்களுக்கு பெற்றோரை வந்து சந்திக்கச் சொல்லி சர்க்குலர் தயார் பண்ணி அனுப்புவோம். ஸ்ரீராமும் அந்தக் கடிதத்தைக் கொண்டு போய் வீட்டில் கொடுப்பான். அப்போது யார் வந்து அவன் சார்பில் நம்மைச் சந்திக்கிறார்கள் என்று பார்ப்போம். அதன்பின் முடிவு செய்வோம், என்ன...?"

"சரி..." எனது சம்மதித்திருந்தாள் மிஸ்டர் சாமுவேல். அந்த சார்த்தலர் கடிதங்கள் அவளது கையிலில் இருந்தன. தைப் செய்யப்பட்ட ஒவ்வொரு கடிதத்தின் மீதும் பையன்களின் பெயர்கள் எழுதப்பட்டிருந்தன. பெயர்ப் பட்டியலைப் படித்து முடித்தபின் அவற்றை

விவியோகித்து ஸ்ரீராமிடம் அவனது பெற்றோரை வரச் சொல்லி அழுத்தமாகச் சொல்லலாம் என்று நினைத்துக் கொண்டே அட்டன்டன்ஸ் எடுத்த போதுதான் அவனிடம் இருந்து பதில் வரவில்லை. பேனாவை மூடி மேஜை மீது வைத்துவிட்டு, வழக்கப்படி நூறாம் பார்வையில் எதோ வெறித்தவாறு உட்கார்ந்திருந்த ஸ்ரீராமின் அருகில் போய் மெதுவாகத் தோளைத் தொட்டாள் வில்லிசாமுவேல். சடாரென்று திடுக்கிட்ட மாதிரி திரும்பிப் பார்த்த அவன், பக்கத்தில் வில்லிசாமுவேல் நிற்பதைக் கண்டு பயந்து எழுந்து நின்றான். வில்லி முகத்தில் கோபத்தைக் காட்டாமல் நிதானமாகக் கேட்டாள்.

"அட்டன்டன்ஸ் எடுக்கிறபோது உன் பெயரைக் கூப்பிட்டேனே ஸ்ரீராம், காதுல விழலை..?"

"——" மீண்டும் தலை குனிவு. அதே சட்டைத் திருகல்.

"அப்படி வெளியில் என்ன சமாசாரமான விஷயம் ஸ்ரீராம்...?"

"ஒண்ணுமில்லே மிஸ்..."

"ஒண்ணுமில்லாததையா அப்படிப் பார்த்துட்டிருக்கே? சரி, இந்தா, இந்த லெட்டரைக் கொண்டு போய் அம்மா கிட்டே கொடு. நாளை மறுநாள் ஸ்கூல்ல பேரண்ட்ஸ் மீட்டிங் இருக்கு. ஸ்கூல் விட்டதும் தவறாம வரிக்கு ஆரம்பமாகும். ஒரு மணி நேரத்துல முடிஞ்சிடும். எல்லாருடைய அம்மா அப்பாவும் வரணும்க, உங்கம்மா, அப்பாவால வர முடியாது போனால் அப்பா இரண்டு பேரில் ஒருத்தரைக் கட்டாயம் வரச் சொல்லு. என்ன...?"

அவள் ஒன்றுமே சொல்லாமல் கடிதத்தை மாங்கிப் புத்தக பையினுள் வைத்துக்கொண்ட வில்லிசாமுவேல் சற்று திருப்தியடைந்தாள். அதிலிருந்து தான் நினைத்த மாதிரி அவனுக்கு அம்மா இல்லாமல் இயலை என்கிற சந்தோஷம் ஏற்பட மற்ற சிறுவர்களுக்குக் கடிதங்களைக் கொடுத்துக்கொண்டே வந்தாள்...

2

அன்று தான் பெற்றோர்கள் வகுப்பாசிரியைகளை சந்திக்கும் தினம். பாட்டு வகுப்பு நடக்கும் பெரிய ஷெட்டில் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. தனித்தனியாக சின்ன பெஞ்ச் போட்டு ஆசிரியைகள் அமர்ந்துகொள்ள ஒவ்வொருவராக அம்மாக்களும் அப்பாக்களும் வந்து அறிமுகப்படுத்திக் கொண்டு விசாரித்தார்கள்.

"நான் சித்தார்த்தின் அம்மா..."

"ஓ...நான்தான் க்ளாஸ் டீச்சர். சித்தார்த் ரொம்பப் பேசறான்..."

"அப்படியா...நான் கண்டுக்கிறேன். மற்றபடி படிப்பில் எப்படி இருக்கான்...?"

"என் ஸப்ஜக்ட்டில் தேவலை. பட், கையெழுத்து மோசம். அதைக் கவனியுங்க. நிறம் ஒரு பக்கம் ஹாண்ட் ரைட்டிங் எழுத வையுங்க...அதோ மற்ற டீச்சர்ஸ் உட்கார்ந்திட்டிருக்காங்க. அவங்களையும் விசாரிங்க..."

"ஐ'ம் வினய்ஸ் மதர்..."

"வினய் கணக்கு ரொம்ப நன்னா பண்றான்."

"தான் பாரத்தின் அப்பா."

"ஹி ஹேஸ் காட் டு பீக் அப் இன் ஜியாகரஃபி. கொஞ்சம் வீட்டுலயும் கேர் அப் பண்ணுங்க..."

"தான் கிருபா சங்கரனுடைய அம்மா..."

"தான் கல்காதரன் அம்மா..."

"தான் ஸ்ரீதர்'ஸ் மதர்..."

"தான் ரமேஷோட ஃபாதர்..."

"நான் தீபக்'ஸ் மதர்..."

இப்படி அறிமுகப்படுத்திக் கொண்ட குரல்களில் 'ஐ'ம் ஸ்ரீராம்ஸ் மதர்' என்ற குரலையோ, அல்லது 'ஸ்ரீராம்ஸ் ஃபாதர்...' என்ற குரலையோ, எதிர்பார்த்து ஏமாந்து போனாள் வில்லீசாமுவேல். கடைசி மகனது அம்மா வுடன் பேசி அனுப்பிவிட்டுத் திரும்பி மற்ற ஆரிரியை களைப் பார்த்தாள். அவர்கள் ஸ்ரீராமின் நினைவே இல்லாதவர்களாக விட்டிற்குக் கிளம்பிக் கொண்டிருக்க மெதுவாகச் சொன்னாள்.

"நான் அன்னைக்கே சொல்லலை, இன்னிக்கும் அவனுடைய அம்மா வரவேயில்லை பாருங்கள்..."

"தொடர்பற்று வந்த வில்லீசாமுவேலின பேச்சில் தங்களின் பேச்சை நிறுத்திவிட்டுக் கேட்டார்கள்.

"யாருடைய அம்மா...?"

"அதான, அந்த ஸ்ரீராமின் அம்மா..."

ஓ...ஆமாம், நாங்கள் மறந்தே போய் விட்டோம். எல்லோரும் வந்தபோது அவன் வீட்டினிருந்து மட்டும் என் ஒருவரும் வரவில்லை...?"

"இவன் கொண்டு போய் சர்க்குலரைக் காண்பித் தானோ, இல்லையோ?"

"லீலி, நீங்கள் நாளைக்கு வகுப்பில் அவனை விசாரியுங்கள். சர்க்குலரைக் காட்டினாரா என்று கேளுங்கள். 'நாளைக்கு நீ ஸ்கூலுக்கு வரும்போது நிச் சயம் உங்க அம்மாவைக் கூட்டிக்கிட்டு வாணும்!' என் பதை அடித்துச் சொல்லுங்கள். அவன் என்ன செய்கி றான் என்று பார்ப்போம். அதற்கும் அவனது அம்மா வராது போனால், நாம் எல்லோரும் சேர்ந்து அவனது வீட்டுக்குப் போவோம், என்ன...?"

"சரி..." என்று வில்லீசாமுவேலும் விட்டிற்குக் கிளம்பினாள்.

மறு நாள் காலை பிரார்த்தனை மண்டபத்திற்குப் போக மாணவர்களை நிற்க வைத்தபோது ஸ்ரீராம் இல்லாததைக் கவனித்தாள். 'ஏன், வரவில்லை அந்தப் பையன்...?' என்ற கேள்வியின் தொடர்வில் பிரார்த்த னைக் கூட்டத்திற்குப் போனாள். மைக்கில் சமஸ்கிருத பண்டிட் தன் கனிரென்ற குரலில் 'ஸன்னோ மித்ர ஸம்பருணகா' என்று ஆரம்பித்து 'ஒம் சாந்தி, சாந்தி சாந்திஹி' என்று முடிக்கிற வரை அமைதியாய் வெறு மனே கண்களை மூடியபடி நின்றிருந்தாள். வில்லீசாமு வேலுக்கு அந்தத் தோத்திரம் இந்த மூன்று மாதங்களில் கேட்டுக் கேட்டு நன்றாக மனப்பாடமாகியிருந்தது. ஆனா லும் அவள் சொல்லுவதில்லை. கடைசி 'சாந்தி, சாந்தி, சாந்திஹி' மட்டும் சொல்லி சிலுவைக் குறியிட்டு ஆமென் என்று முடித்துக் கொள்வாள்.

பிரார்த்தனை முடித்து மாணவர்களோடு மீண்டும் வகுப்பிற்கு வந்தபோது அங்கு ஸ்ரீராம் அவனது இடத் தில் உட்கார்ந்திருப்பதை கவனித்தாள். 'பிரார்த்தனை யில் கலந்து கொள்ளாமல் எத்தனைத் தைரியமாக இவன் இங்கே உட்கார்ந்திருக்கிறான்?' மனதில் கோபம் குமி ழென்று வெளிக் கிளம்ப, தன் மேஜையில் உட்கார்ந்து,

"ஸ்ரீராம், கம் ஹியர்..." என்று அழுத்தமாகக் கூப் பிட்டாள்.

அவன் தயங்கித் தயங்கி எழுந்து நின்று மெதுவாக நடந்து அவளது மேஜைக்குப் பக்கத்தில் தலை குனிந்து நின்றதில் லீலி மிகவும் வெறுப்படைந்து கேட்டாள்.

"இன்னிக்கு ஏன் நீ பிரேயருக்கு வரலை...?"

"—"

"ம்... பதில் சொல்லப் போறியா இல்லையா...? எப்ப வும் இப்படி அழுத்தமா தின்னுட்டிருந்தால் விட்டுடுவாங் கன்ற நினைப்பா...? இப்போ நீ பதில் சொல்லலை,

நேராகக் கூட்டிக்கிட்டு போய் ஹெட்மிஸ்ட்ரஸ் ரூமுல விட்டுடுவேன், ம்... சொல்லு, ஏன் பிரேயருக்கு வரலை...?''

அப்போதும் மௌனமாக நின்று அவளது கோபத்தை இன்னும் அதிகமாக்கினான்.

''சரி...நீ வாயைத் திறந்து பேசப் போறதில்லைன்னு பிடிவாதமாக இருக்கே...இல்லையா...? அப்படின்னா உனக்கு இருக்கிற பிடிவாதம் எனக்கும் இருக்கும். உம்... கிளம்பு. ஆபீஸ் ரூமுல ஹெட்மிஸ்ட்ரஸ் இருப்பாங்க, அங்கப் போய் பதில் சொல்லு...''

பயந்து, மருண்ட பார்வையில் அவன் தலை நிமிர அந்த மிரட்சியில் லில்லிக்குள் வழக்கமாக ஏற்படுகிற பரிதாபத்தை ஏற்படுத்தினாலும் அவள் வலுக்கட்டாய மாகப் பிடிவாதத்தை வரவழைத்துக் கொண்டாள். இனி மேலும் இவனை இப்படியே விட்டுவிடக் கூடாது என்று முடிவு செய்தாள். இவன் இப்படி மந்தமானவனாக, தன்னை ஒடுக்கிக் கொள்கிறவனாக இருப்பதற்கு மிக வலிமையான காரணம் ஏதாவது இருக்கவேண்டும். அது என்ன என்று கண்டுபிடித்து, இவன் அடைபட்டிருக்கிற சிறைச்சாலையைத் தகர்த்து இவனைக் கட்டாயம் வெளியே கொண்டு வந்தே ஆக வேண்டும். இதற்கு மேலும் இப்படியே விட்டுவிட்டால் இவனது எதிர்காலம் கேள்விக் குறியாகி விடும். இப்படி தன்னைச் சுறுக்கிச் சுறுக்கியே இன்னமும் சுறுங்கிப் போய் விடுவான். இவனது தன்னம்பிக்கையும், சுய கௌரவமும் தகர்க்கப் பட்டு விடும். யாருடனும் பேசாமல், பழகாமல் கடைசியில் மனோவியாதியில் கொண்டுபோய் தள்ளி விட்டுவிடும். வக்கிர குணங்கள் ஆட்கொள்ளும். ஒரு தல்ல சிறுவனின் எதிர்காலம் நாசமாகி, இந்தியப் பிரஜை ஒருவனது மூளையும், உழைப்பும் யாருக்கும் உபயோகப்படாமல் வீணாகிப் போகும். அப்படியில்லாமல் இவனை சாதாரண நிலைக்குக் கொண்டு வரவேண்டுமானால் இன்று இவனைப் பேச வைக்க வேண்டும். பளீரென்று கன்னத்தில்

ஓங்கி அறைகிற மாதிரி அதிர்ச்சி வைத்தியம் கொடுக்க வேண்டும். முதலில் பேச வைக்க முயற்சி செய்யலாம். அது பலனளிக்காவிடில் அப்புறம் மற்ற விஷயங்களை யோசிக்கலாம்...

அவள் நாற்காலியை விட்டு எழுந்து குச்சி மாதிரி மெலிதாக இருந்த அவன் கையைப் பற்றி சற்று வேக மாகவே இழுத்தாள்.

''வா! வந்து ஹெட்மிஸ்ட்ரஸ்கிட்ட இந்த மாதிரி பேசாமல் நில்லு...''

அதைச் சற்றும் எதிர்பார்க்காத ஸ்ரீராம் குபீரென்று அழ ஆரம்பித்தான். கண்கள் நிறைந்து ஜனும்பி கன்னங் களில் கோடு கோடாக வழிந்தாலும் லில்லிசாமுவேல் எதிர்பார்த்த பலன் கிடைத்தது. காதிலேயே விழாத தொனியில் மிக மெலிதாய் கெஞ்சினான் அவன்.

''இல்லே மிஸ்! இனிமே செய்ய மாட்டேன் மிஸ்...''

''என்ன...என்ன...? எனக்குக் காதுலயே விழலை. கொஞ்சம் கத்திப் பேசு...''

''இனிமே செய்ய மாட்டேன் மிஸ். என்னை ஹெட் மிஸ்ட்ரஸ் ரூமுக்குக் கூட்டிட்டுப் போகாதீங்க மிஸ்...''

''என்ன செய்ய மாட்டே...?''

''பிரேயருக்கு வரா...மல்...இருக்க மாட்டேன்...''

''இன்னிக்கு ஏன் வராமல் இருந்தே...?''

''வந்து...வந்து... லேட்டா ஸ்கூலுக்கு வந்திட்டேன் மிஸ்...''

அவன் விசும்பலும், கேவலுமாகக் கண்ணீர் இன்னமும் நிற்காமல் வழியச் சொன்னதும், லில்லிசாமுவேல் சற்று சமனப்பட்டு பேசினாள்.

''முதல்ல முகத்தைத் துடை; இப்படி அழுதுகிட்டே பேசினால் எனக்குப் பிடிக்காது. ஆண்பிள்ளை அழக் கூடாது...''

ஸ்ரீராம் உடனே மீழ்ப்படித்து சட்டையைத் தூக்கி முகத்தைக் குனிந்து சட்டைத் துணியால் கன்னத்தையும், மூக்கையும் துடைத்துக் கொள்ள லில்லியின் நெற்றி சுருங்கிற்று.

"இப்படித்தான் வெள்ளை யூனிஃபார்ம் சட்டையில முகம் துடைப்பார்களா...? எவ்வளவு அழுக்காயிடுச்சு பார், கைக்குட்டை கொண்டு வரலையா...?"

'இல்லை' என்று தலையாட்டினான்.

"சரி, நாளைக்குக் கொண்டு வந்திடு. ஆமாம் இன்னிக்கு என் நேரம் கழிச்சு வந்தே..."

"....."

"சொல்லு... என் நேரமாச்சு...?"

"அம்மாகூட வெளியில் போயிருந்தேன் மிஸ்..."

"எங்கப் போனே...?"

"தெரியலை மிஸ். யார் வீட்டுக்கோ அம்மா கூட்டிட்டுப் போனாங்க. என்னையும் துணைக்கு வரச் சொன்னாங்க, போனேன் மிஸ்..."

'இதோ இவன் வாயாலே தனக்கு அம்மா இருப்பதைச் சொல்கிறான். அப்படியானால் நேற்று என் வரவில்லை அவன்...?"

"சரி, நேற்று சயந்திரம் பேரண்ட்ஸ், டீச்சர்ஸ் மீட்டிங் இருந்ததில்லே... உன்கிட்டே லெட்டர் கொடுத்து அனுப்பினேன் இல்லை...உங்கம்மா என் லரலை...?"

"....."

"அம்மாக் கிட்டே லெட்டரைக் கொடுத்தியா...?"

"கொடுத்தேன் மிஸ்..."

"என்னச் சொன்னாங்க...?"

"ஒன்னும் சொல்லாமல் வாங்கி வச்சுக்கிட்டாங்க..."

"அப்படியா...? நாளைக்குக் கட்டாயம் உங்கம்மாலை ஸ்கூலுக்குக் வரச் சொன்னேன்னு சொல்லு. வரலைன்னால் மிஸ் வீட்டுக்கு வந்துடுவாங்களாம்னு சொல்லி நீ வரும்போதே கூட்டிட்டு வர... என்ன...?"

"சரி. மிஸ்..."

"நிச்சயமா கூட்டிட்டு வரணும்..."

"வரேன் மிஸ்."

"இல்லைன்னால் நான் வந்துடுவேன்..."

"சரி மிஸ்..."

"ஓ. கே. பாத்ரூம் போய் முகத்தை நல்லா கழுவிக் கிட்டு வந்து உட்காரு. பாடத்தைக் கவனி. வெளியில் வெறிச்சுக்கிட்டு உட்காராதே...போ. போய் சீக்கிரம் திரும்பி வா..."

அவன் ஒரே ஓட்டமாகப் படி இறங்கி வலது பக்கக் கோடியில் இருந்த பாத்ரூமிற்குப் போய் ஐந்து நிமிடங்களில் முகத்தைக் கழுவிக்கொண்டு திரும்பி வந்து தன் இடத்தில் உட்கார,

லில்லிசாமுவேல் ஆங்கிலப் புத்தகத்தைத் திறந்து பாடம் நடத்துவதில் இலயித்துப் போனாள்...

3

ஸ்ரீராம் சிக்னலை விட்டு மிகச் சோர்வாகவே இறங்கினான். சிக்னல்காரன் அவனது புத்தகப் பையையும் தண்ணீர்ப் பையையும் எடுத்துக்கொடுத்து சற்று முறுமுறுத்த குரலில் அழுத்தமாகவே சொன்னான்.

"நாளைக்காவது அம்மாகிட்ட சொல்லி சப்பல் பணம் வாங்கிக் கொடு ஸ்ரீராம். தேதி பத்தாளாகும்

சும்மா இருக்காங்க பாரு. உன்கூட சவாரி வர்ற அத்தனை பேரும் தந்திட்டாங்க... நீ மட்டும் தான் இப்படி பேஜார் பண்ற..."

அதைக் கேட்ட ஸ்ரீராமிற்கு முகம் சிவந்து போயிற்று. கூட வருகிறவர்களுக்கு எதிரில் தன்னை வேண்டுமென்றே ரிக்ஷாக்காரன் அவமானப்படுத்துவதாகத் தோன்றியது. மாதாமாதம் ஐம்பது ரூபாய்கள்தான் - அவனுக்குக் கொடுக்க வேண்டும். அதை இந்த அம்மா கொடுத்துவிடக் கூடாது? எத்தனை பேருக்கு முதல் தேதியானால் பணம் கொடுக்கிறான்...இதை மட்டும் தள்ளிப்போட்டு இவளிடம் என் பேச்சு வாங்க வைக்கிறான். இவளிடம் மட்டும் தானா...? இன்று லில்லி டீச்சர் எப்படிச் சொன்னாள்; எத்தனைக் கேள்விகள் கேட்டாள்.

"சர்க்குலரை அம்மா கிட்டே காட்டினாயா இல்லையா...?"

"அப்படியானால் என் பேரண்ட் டீச்சர்ஸ் மீட்டிங்கிற்கு அம்மா வரவில்லை...?"

"தாளைக்குக் கட்டாயம் கூட்டிக்கிட்டு வா. இல்லைன்னால் தான் வீட்டுக்கு வந்துவிடுவேன்..."

நேற்று அம்மா வந்திருக்கலாம். வந்திருந்தால் இந்தப் பேச்சு இல்லை. தாளைக்கு வராமல் போனால் நிச்சயம் டீச்சர் வீட்டிற்கு வருவாள். வந்தால் தன்னை வரவேற்கிற மாதிரி இதே பூட்டின வீடுதான் டீச்சரையும் வரவேற்கும்...

லிஃப்ட் இல்லாத அந்த ஃபிளாட்டின் மூன்று மாடிப் படிகளையும் ஆசுவாசமாய் கடந்து மேலே போய், பக்கத்துப் போர்ஷன்காரர்களின் கதவைத் தட்டி சாவி கேட்டபோது, உள்ளே அவனது விலையாட்டுத் தோழன் உமேஷ் அடை சாப்பிட்டுக் கொண்டிருப்பது தெரிந்தது. இவனுக்குப் பிடித்தமான டிபன். நாக்கில் நீர் ஊறிற்று. உமேஷ் சாப்பிடுவதைப் பார்த்துக் கொண்டு நிற்க— அவனது அம்மா சாவியை கொண்டு வந்து கொடுத்து

விட்டு "டிபன் சாப்பிடறியாடா ஸ்ரீராம்...?" என்று கேட்டாள்.

இவன் வேண்டாமென்று தலையாட்டிவிட்டு சாவியை எடுத்துக் கொண்டு திரும்பினான். தினமும் இதே கேள்வியைத் தவறாமல் கேட்பாள் அந்த மாமி. ஆனால் ஒரு நாள்கூட தட்டில் டிபனை வைத்துக் கொண்டு வந்து அவளிடம் கொடுத்ததில்லை. சாயந்திர டிபன் மறந்து போய் எத்தனையோ காலமாகி விட்டது. முன்பெல்லாம் அம்மா வேலைக்குப் போகாமல் வீட்டில் இருந்தபோது தினமும் விதம் விதமாக டிபன் பண்ணுவாள். சாலை இட்லி, தோசை என்றால் சாயந்திரத்திற்கு முறுக்கு, வடை, பகோடா என்று தொறுக்குத் தீனியாக ஏதாவது இருக்கும். அப்பா ஆபீஸிலிருந்து வருகிற போது இனிப்புப் பண்டம் வாங்கிக் கொண்டு வருவார். அப்பாவின் ஸ்கூட்டர் சத்தம் தெருக் கோடியில் கேட்கிற போதே இவன் வாசலுக்கு ஓடுவான். கேட் அருகில் நின்று ஸ்கூட்டரின் முன்பக்கம் பறிபின்னால் இருக்கிற இவர்களின் போர்ஷன்வரை சவாரி செய்து கொண்டு வருவான். ஸ்கூட்டரை விட்டு இறங்கி ஸ்டாண்ட் போட்டு நிறுத்தி அப்பா இவனைத் தூக்கி முத்தமிட்டபடி உள்ளே நுழைவார்.

"அப்பா... இன்னிக்கு என்னப்பா வாங்கிட்டு வந்திருக்கே..."

அவர் வேண்டுமென்றே கையை விரிப்பார்.

"ம்ஹூம்... இன்னிக்கு ஒன்னுமே வாங்கிட்டு வரலை..."

இவன் சிணுங்குவான்.

"பொய்வி, பொய்வி. ஒன்னும் வாங்காமல் நீங்க வர மாட்டீங்க?..."

"நிஜம்மா ராமு...அப்பா கைல் பணமேயில்லை. அதனால் இன்னிக்கு உனக்கு ஒன்னுமில்லை..."

"எங்கே...உங்க ப்ரீஃப் கேஸைக் காட்டுங்க...?"

"ப்ரீஃப் கேஸ்ல ஆபீஸ் பேப்பர்ஸ் தான் இருக்கு..."

"அதைத்தான் பார்க்கறேன். காட்டுங்க..."

அவர் ப்ரீஃப் கேஸை இரு கைகளுக்கும் மாற்றி மாற்றி அவன் கைக்கும் கிடைக்க விடாமல் செய்து செல்ல அழுகை அழவைக்க, அதற்குள் மிக நன்றாக அலங்காரம் பண்ணிக் கொண்டு அம்மா வெளிப்பட்டுக் கொஞ்சலாகக் கேட்பாள்.

''என்னங்க...ரெண்டு பேருக்கும் தகராறு...?''

''ப்ரீஃப்கேஸ்ல ஒன்னுமில்லேன்னால் உன் பிள்ளை நம்ப மாட்டேன்றான். நீயே திறந்து பார்த்துச் சொல்லு ரஞ்சனி...''

பெட்டி அம்மா கைக்கு மாற அவள் நடு கூபாய் மீது வைத்துத் திறந்து மல்லிப்பூவையும், திராட்சைப் பொட்டலத்தையும், பாதாம் அல்வாவையும், சின்ன விளையாட்டுக் காரையும் எடுத்து வைத்ததும் ஸ்ரீராம்,

''ஹே...எனக்குத் தெரியுமே...நீங்க வாங்கிட்டு வந்திருப்பீங்கன்னு...? எங்கப்பா வாங்கினீங்க...? கமர்ஷியல் ஸ்ட்ரீட்லயா...?''

''எங்கேயோ வாங்கினேன், உனக்குப் பிடிச்சிருக்கா, இல்லையா...?''

''ஓ—ரொம்பப் பிடிச்சிருக்கு. இதுதாம்ப்பா நான் கேட்டது. கார்க் கதவைத் திறக்க வரும் பாருங்க எம்ப்பா இது இம்போர்டட் தானே...?''

''ஆமாம்ப்பா...மேட் இன் தாய்வான். சரி இதை வச்சிட்டு ஸ்வீட் சாப்பிட்டு வேற டிரஸ் மாற்றிக்க. வெளியில போகணும் பாரு...''

''எங்கப்பா போறோம்...?''

''எங்கேயாவது போகலாம். இடமா முக்கியம்...? மூன்று பேரும் சந்தோஷமா சேர்ந்து போறது தானே முக்கியம். ம்...கிளம்பு...நீ ரெடியா ரஞ்சனி...? எனக்கு வெறும் காபி மட்டும் கொடு. டிபன் மாவல்லியில் சாப்பிட்டுக்கலாம். என்ன, இதோ ஐந்தே நிமிஷத்தில் குளிச்சிட்டு வந்துடறேன்...''

அடுத்த பத்தாவது நிமிடம் வேறு பாண்ட்ணிக் டீ ஷர்ட்டுமாக அழகாக வந்து நிற்பார். தலையை ஸ்வீகப்லாக வாரியிருப்பார். நல்ல உயரம். அதற்கேற்ற ஆகிருதி. முகம் துறுதுறுவென்று இருக்கும். ஸ்ரீராம் ஓடிப் போய் அவரைச் சேர்த்துக் கட்டிக் கொண்டு சொல்லுவான்—

''உன்னைப் பார்த்தால் தர்மேந்திரா மாதிரி இருக்குப்பா...''

அவர் பெருமையாகச் சிரித்தாலும் ''தர்மேந்திரா மாதிரியா இருக்கு...? ஜிதேந்திரா மாதிரி இல்லை...'' என்று குறையாகக் கேட்பார்.

ஆமாம்ப்பா. ஜிதேந்திரான்னு சொல்றதுக்குப் பதிலா தர்மேந்திரான்னு சொல்லிட்டேம்பா, ஸாரிப்பா...''

''போடா ஸோப்பு. என்ன ரஞ்சனி உன் பிள்ளை உன்னை மாதிரியே இருக்கான்...?''

''என்னை மாதிரி ஒண்ணுமில்லே... உங்க மாதிரி தான் இருக்கான். நீங்கதான் கட்டி கட்டியா ஸோப் போட்டு 'தைஸ்' பண்ணுவீங்க...''

''ஐயோ... என்ன இப்படி அபாண்டமா சொல்றே...? நான் எப்போ சோப் போட்டேன்...''

''என், நேற்று ராத்திரி போட்டது என்னவாம்...?''

''அப்பா எதுக்கும்மா உனக்கு நேற்று ராத்திரி சோப் போட்டார்?...''

'கர்மம், கர்மம்' என்று செல்லமாகத் தலையில் அடித்துக் கொள்வாள் அம்மா.

''குழந்தை எதிரில் என்ன பேசணும் என்கிற விவஸ்தையே கிடையாது...''

''இப்போ பேசினது நீயா; நானா...?''

''சரி நேரமாறது, வாங்க போகலாம்...''

அடு பூட்டப்பட்டு மூன்று பேரையும் சுமந்து கொண்டு மாற்றிவாகு நாளும் ஒவ்வொரு இடமாகப் போகும் அந்த அகூட்டர். ஒருநாள் ஓட்டல், மறு நாள் சினிமா, அடுத்த நாள் லால்பாக், அப்புறம் கப்பன் பார்க், இல்லாவிட்டால் ஷாப்பிங்...

அப்போது திரும்பி வந்து பூட்டின வீட்டைத் திறப்பதற்கும், இப்போது திறப்பதற்கும் எத்தனை வித்தியாசம்? மனதில் பாரம் கனிழ வீட்டினுள் போய் முன் அறை, படுக்கும் அறை எல்லாமாக இருந்த அந்த ஒரே அறையின் மூலையில் கிடந்த மேஜை மீது தொபீர் என்று புஸ்தகப் பையை போடுவான். தண்ணீர்ப் பையை வைத்து விட்டு பாத்ரூம் போய் பின்னர் சமையலறைக்குள் துழைந்து மூலையில் மூடி வைக்கப்பட்டிருக்கிற கிண்ணத்தைத் திறப்பான். காலையில் அம்மா கலந்து வைத்து விட்டுப் போயிருக்கும் சாப்பார் சாதம் இறுகிக் கிடக்கும். இல்லாவிட்டால் இட்லி, தோசை, உப்புமா, ஜாம் தடவப்பட்ட ரொட்டித் துண்டுகள்...

எல்லாமே காலையில் செய்து மூடி வைக்கப் படுவது தான். டிபன் செய்யாத நாட்களில் சாம்பார், ரஸம் என்று ஏதாவது பிசைந்து வைக்கப்பட்ட சாதம். பள்ளிக்கூடத்திற்குத் தினமும் பகல் சாப்பாடாகத் தயிர் சாதம் கொண்டு போவதால் அது சாயந்திரத்திற்கு இருக்காது. அன்று அம்மா காலையில் செய்த வற்றல் குழம்பு சாதம் கலந்து வைத்திருந்தாள். எடுத்து வைத்துக் கொண்டு இரண்டு வாய் சாப்பிட்டதும், முன்பு அப்பாவோடு சாப்பிட்ட ஓட்டல் டிபன்களின் ஞாபகம் வர கையை உதறிவிட்டு எழுந்து கொண்டான். கை கழுவிக் கொண்டான். கை கழுவிக் கொண்டு முன் அறைக்கு வந்தபோது துக்கம் தொண்டையை இறுக்கிற்று. சத்தம் போட்டு அழ வேண்டும் போலிருக்க இவன் அழ ஆரம்பித்தபோது வாசலில் அழைப்பு மணி அழுத்தப்பட அவசர அவசரமாக முகத்தைத் துடைத்துக்கொண்டு ஓடிப்போய்க் கதவைத் திறந்தான்.

பக்கத்து வீட்டு உமேஷ் நன்றாக டிரஸ் பண்ணிக் கொண்டு நின்றிருந்தான். எங்கோ வெளியில் போகப் போகிறான்போல் தெரிய இவனுக்கு அவனைப்பார்க்கவே பிடிக்காமற் போயிற்று. சுவாரஸ்யமற்ற குரலில்,

"என்ன...?" என்றான்.

"வரியாடா... கொஞ்ச நேரம் கீழே கிரிக்கெட் விளையாடலாம்..."

"ம்ஹூம், நான் வாலே..."

"ஏண்டா... வழக்கப்படி மனிகை சாமான், ரேஷன்னு எதற்காவது போறியா...?"

இவன் மீண்டும் உள்ளுக்குள் ஒடிந்துபோய் அவனைப் பரிதாபமாகப் பார்த்து மிக மெல்லிய குரலில் சொன்னான்.

"இல்லே..."

"பின்னே வரியேன், கொஞ்ச நேரம்தான் என்னால் விளையாட முடியும். அப்புறம் எங்க அப்பா வந்திடுவாங்க"

அப்பா...! அந்தக் குரல், அதில் தொனித்த பெருமை...!

இதெல்லாம் இவனுக்கும் சொந்தமாக இருந்தவை கள்தான். இவனும் இப்படித்தான் பெருமையும், கர்வமும் பொங்கப் பார்த்தான். குரலில் அலட்சியம் தெரியச் சொன்னான்...

'டேய் நான் வாலேடா... எங்கப்பா வந்திட்டார்...'

'அப்பா வந்தால் என்னடா ஸ்ரீராம். நீ விளையாடேண்டா...'

'ம்ஹூம்... நாங்க வெளியே போறோம்...'

'எங்கப் போறே...?'

'தெரியலை... அப்பா கிட்டதான் கேட்கணும்... மீதியை நாளைக்கு விளையாடலாம்...'

'போடா... தானைக்கும் நீ வெளியில போயிடுவே... தினமும் நானே போறேன்...'

துக்கமாய், ஏக்கமாய், தாபமாய் கோபமாய் உள்ளுக்குள் அலை அலையாக அடிக்க,

''அப்பா வந்தால் என்ன...?'' என்று அன்று தன் சினேகிதர்கள் கேட்ட அதே மாதிரி இவனும் உச்சரித்துக் கேட்டான்.

''அப்பா வந்தால் வெளியில் போயிடுவோம். இன்னிக்கு சர்க்கஸ் போறோம்...''

''சரி போயிட்டு வா, நான் விளையாட வரலை. நிறைய 'நோம் ஒர்க்' இருக்கு... நீ விளையாடிக்க...''

''சி! ப்ளீஸ் மாடா...''

''மாலைன்னா வரலைதான்.''

உமேஷ் முகத்தைத் திருப்பிக்கொண்டு போக இவன் தலை சாந்தித் தாழ்ப்பாள் போட்டுவிட்டு வழக்கமாகக் குளிக்கப் போவது கூட இல்லாமல் அந்த அறையை ஒட்டிய சின்ன பால்கனியில் போய் நின்றான். அழுகை துறுத்திக் கொண்டு வந்தது. கொடியில் காயவைத்திருந்த துணிகளை மொத்தமாக எடுத்து மேஜை மீது போட்டு விட்டு ஓர் ஓரமாக அடுக்கி வைத்திருந்த தலைகாணிகளில் ஒன்றை இழுத்துத் தரையில் போட்டுக்கொண்டு படுத்தபோது கண்ணோரம் கோடாக வழிந்தது. தலை சடாரென்று கவிழ்ந்துபடுத்து விம்மலையும், கேவலையும் தலையணையில் புதைக்க முயற்சி பண்ணி இயலாமல் வாய்விட்டு 'அப்பா... அப்பா...' என்று அரற்றி நீண்ட நேரம் அழுதான். அழ அழ நெஞ்சிலிருந்து ஏதோ படிப்படியாகக் குறைவதாகத் தோன்றிற்று. பின் ஒருநிலையில் தானாக அழுகை நின்றது. அடிவயிற்றுப் பசியும், தூங்கிக் கொண்ட துக்கமும் சேர்ந்து அவனை இன்னமும் வித்தியாசமானவனாக உணரச் செய்தது. அந்த

உணர்வுகளிலிருந்து விடுபட ஆசைப்பட்டவனாகச் சிறிது நேரம் கண்களை இறுக மூடிக்கொண்டு படுத்தவன் அப்படியே தூங்கிப் போனான்...

4

எத்தனை நேரம் தூங்கினானோ தெரியாது. அழைப்பு மணி அலறுவதைக் கேட்டு திடுக்கிட்டு விழித்தான். சட்டென்று ஒன்றும் புரியவில்லை. எங்கே இருக்கிறோம் என்பது கூட அந்த இருட்டில் தெரியவில்லை. பின் சடாரென்று மீட்டில் இருக்கிற ஞாபகம் வர எழுந்து விளக்கைப் போட்டு விட்டுக் கதவைத் திறந்தான்.

சஞ்சனி நின்று கொண்டிருந்தாள். அவன் முகத்திலும் கண்ணிலும், அலுப்பும் தெரிந்தன. சோர்ந்து வாடிப் போய் இருந்தாலும் அதை அவன் எதிரில் காட்டிக் கொள்ள விரும்பாமல் கேட்டாள்.

''இத்தனை நேரம் மணியடிச்சேனே, ஸ்ரீராம், என்ன பண்ணினே...?''

இவன் பதில் சொல்லாமல் நின்றான். சடாரென்று அத்தனைச் சோர்வும் அம்மா மீது திரும்பியது. இத்தனைக்கும் அவளே காரணம் என்கிற கசப்புணர்ச்சி நிரம்பியது. சொல்லத் தெரியாத வெறுப்பு ஏற்பட அவளை அலட்சியப் படுத்துகிற பாவனையில் மௌனமாக இருந்தான்.

அவனது மௌனத்தை லட்சியப் படுத்தாத சஞ்சனி உள்ளே வந்து கதவு மூலையில் செருப்பை விட்டு விட்டு அவனது புத்தகப் பையின் அருகில் தன் கைப்பையை வைத்தவள் தரையில் கிடந்த தலைகாணியைப் பார்த்துக் கேட்டாள்.

''தூங்கினாயா ஸ்ரீராம்...?''

''ம்...''

"இந்த நேரத்துலயா தூங்கினே...?"

"ம்..."

"சாப்பிட்டயா...?"

"ம்"

"இன்னும் தூக்கம் கலையலையா... இப்படிப் பதில் சொல்றே...?"

"ம்"

"சரி. கொஞ்ச நேரம் வேணும்னாலும் படுத்துக்க... நான் காபி இறக்கிட்டு எழுப்பறேன்..."

"எனக்குக் காபி வேணாம்..."

"என்ன ஸ்ரீராம்...? பக்கத்து வீட்டு அம்மா சொடுத்தாங்களா...?"

"பக்கத்து வீட்டு அம்மாதானே...? காபி சாப்பிடறியான்னு வேறமாதிரி ஒப்புக்கு வாயாலே கேட்பாங்க..." என்று சொல்ல நினைத்தவன் அதைச் சொல்லாமல்,

"இல்லை" என்று தலையை மட்டும் ஆட்டினான். "அவுங்க எல்லாம் சர்க்கஸுக்குப் போயிருக்காங்க..."

சட்டென்று அவன் மனது புரிந்தவளாக அவனைத் திரும்பிப் பார்த்தாள் ரஞ்சனி! அந்த முகத்தில் நிறைய எதிர்பார்ப்புகள் மீதமிருப்பதாகப் பட, அவளருகில் வந்து அவனை இழுத்துத் தன்னோடு சேர்த்துக் கொண்டாள். தலையை வருடினாள். கன்னத்தைத் தடவிக் கொடுத்து நெளிந்து முன் நெற்றியில் முத்தமிட்டபடி கேட்டாள்.

"உனக்கும் சர்க்கஸிற்குப் போகணும் போல இருக்கா ஸ்ரீராம், நான் அழைச்சிட்டுப் போறேன்..."

"மறந்தும்..." என்று பலமாக மறுத்துத் தலையாட்டியவன் அவளிடமிருந்து தன்னை வலுக்கட்டாயமாகப் பிரித்துக்கொண்டு ஒதுங்கி நின்று சொன்னான்.

"எனக்கு சர்க்கஸும் வேணாம், ஒண்ணும் வேணாம்..."

ரஞ்சனி அப்போதுதான் அவன் முகத்தைக் கூர்மையாகப் பார்த்தாள், கண்கள் இடுங்கிச் சிவந்திருப்பது தெரிந்தது. எதற்கோ அழுதிருக்கிறான்...வேறு எதற்காக இருக்கும்...? பக்கத்து ஃபிளாட் குழந்தைகள் சர்க்கஸ் போகப் போவதைத் தெரிவிக்க இவனுக்குப் பழைய ஞாபகம் வந்திருக்கும். அந்த ஏக்கம் நெஞ்சில் படரப் படர அழ ஆரம்பித்திருப்பான்.

அவளுக்குள்ளும் மெளிதாய் ஒரு சோகம் படரத் துவங்கிற்று. 'இந்தப் பையனை எப்படிச் சரிப்படுத்துவது' என்கிற கேள்வி பிரம்மாண்டமாக மனதை ஆக்ரமித்துக் கொண்டது. அவன் பழைய ஸ்ரீராமாக இல்லை என்பது அவள் உணர்ந்திருந்ததுதான். உதட்டுச் சிரிப்பு தின்று கண்களின் பிரகாசம் குறைந்து, பேச்சு ஒடுங்கி, உடம்பு இளைத்துக் கொண்டே போய் ஏதோ நோயால் பீடிக்கப் பட்டவனாக...சோகை பிடித்த மாதிரி...

அவள் டாக்டரிடம்கூட அழைத்துப் போய் பரிசோதனை செய்யச் சொன்னாள். ரத்தம், மலம் எல்லாம் பரிசோதித்து ரிப்போர்ட் வாங்கிக் கொண்டு மீண்டும் டாக்டரிடம் அழைத்துப் போனாள். அவற்றையெல்லாம் பார்த்து, பின் டாக்டர் சொன்னார்—

"இவனுக்கு உடம்பில் எந்தக் கோளாறும் இருக்கிற மாதிரி தெரியலையேம்மா..."

"ஆனால் செம்பச் சோர்வா இருக்கான் டாக்டர். எப்பவும் களைத்துப்போன மாதிரி தெரியறான்..."

"இது 'மெண்டல் டிப்ரெஷன்' காரணமாக ஏற்பட்டதாக இருக்கும். நல்லா நாலு குழந்தைகளுடன் விளையாட விடுங்க. சம வயதுப் பையன்களுடன் விளையாடவிடுங்க. கலகலன்னு சிரித்துப் பேசவையுங்க. உள்ளே அடைத்து வைத்துக் கொண்டிருக்கிற அத்தனை உணர்வுகளும் வெளியில் வந்துவிடணும். இதுக்கு மிடக்கிற எல்லாம்

தளர்ந்து சுலபமாக இருக்க ஆரம்பிக்கணும். அதற்கு நீங்கதான் இவனுக்கு உதவி செய்யணும்...."

சுலபமாகச் சொல்லிவிட்டார் டாக்டர். சொல்வதோடு அவர் கடமை தீர்ந்து போய்விட்டது. ஆனால் இவனுக்கு எப்படி உதவுவது என்று புரியவில்லை. உள்ளே, இன்னும் உள்ளே என்று தன்னைச் சுறுக்கிக்கொள்பவனை எப்படி வெளியில் கொண்டுவருவது...? தனக்குள் அழுந்துபவனை எவ்வாறு தூக்கி நிறுத்துவது...?

அதுதான் அவருக்குப் பிடிபடவில்லை. அந்த மர்க்கம் தெரியவில்லை. இவராகப் போய் பேசினாலும் ஒதுங்கி ஒதுங்கிப் போகிறான் அவன். அழுத்தமாகக் கோபப்படுகிற பெரிய மனிதர்களைப் போல் நடந்து கொள்கிறான். நடந்ததெற்கெல்லாம் இவனே காரணம் என்கிற பாவனையில் இருக்கிறான். இதில் தன் தவறு என்ன என்று இவன் யோசித்துப் பார்த்திருக்கிறான். எந்த விதத்தில் தான் காரணம் என்று நினைத்திருக்கிறான். எதற்காக இவன் தன்னிடம் குற்றம் கண்டு பிடித்துத் தன்னை ஒதுக்குகிறான்...?

இதை எவ்வாறு எடுத்துச் சொல்லி இவனுக்குப் புரிய வைக்க முடியும்...? யார் புரிய வைப்பார்கள்...? வேறு யார் இருக்கிறார்கள்...என்ற பதிவில் எழுந்த பெருமூச்சுடன் மீண்டும் அவனைப் பார்த்து மெதுவாகக் கேட்டாள்.

"அப்தாவா ஸ்ரீராம்...?"

"மறந்தும்...இல்லையே..."

"பின் கண்ணெல்லாம் இடுங்கி இருக்கே...?"

"தூங்கினதால் இருக்கும்....."

இதற்குப் பின்பும் என்ன கேட்க முடியும், எப்படிக் கேட்க முடியும் என்பது தெரியாமல், குனிந்து அறைக்குப் போய் முகம், கை, கால் கழுவிக் கொண்டு, மேஜை மீது அவன் கொண்டு வந்து போட்ட துணி மூட்டையிலிருந்து

துவாலையை உருவி முகத்தைத் துடைத்தபடி சமையலறைக்குள் நுழைந்து விளக்கைப் போட்டவன் மீது சாப்பிடப்படாமல் வைக்கப்பட்டிருந்த வற்றல் குழம்புக் கிண்ணத்தைப் பார்த்துப் பதறினாள். 'பள்ளிக்கூடத்திலிருந்து வந்து இந்தப் பிள்ளை ஒன்றும் சாப்பிடாமலா தூங்கியிருக்கு...?'

மடமடவென்று சமையல் அறையிலிருந்து வெளியில் வந்து ஸ்ரீராமைப் பார்த்தாள். பார்வையில் கெஞ்சலும், கொஞ்சலும் இரக்கமும் வெளிப்பட்டன.

"ஏன் ஸ்ரீராம், நீ சாதம் சாப்பிடலே...?"

"ம்ஹூம் இல்லை..."

"எப்படா...என் சாப்பிடாமல்கூட தூங்கியிருக்கே...?"

"பிடிக்கலை..."

"என்ன பிடிக்கலை..."

"எதுவுமே பிடிக்கலை..."

"என்னடா என்னவோ பெரிய மனுஷன் மாதிரி விரக்தியும் வேதனையுமாகப் பேசறே...? என்ன ஆச்சு இன்னிக்கு...?"

"சொல்றேன், நீ வேலையை முடிச்சுட்டு வா..."

அவனது அந்தத் தோரணையை மனதிற்குள் வியந்தபடி மீண்டும் சமையலறைக்குப் போய் அவசர அவசரமாகக் காபி கலந்து கொண்டு வந்தாள்.

"இந்தா ஸ்ரீராம், சாப்பிடு. மத்தியானம் சாப்பிட்ட மோர் சாதம் தானே... இப்படி மனிதனைக் காயப் போட்டால் உடம்பு என்ன ஆகும்... இதைக் குடி. நிம்மதியா சமையல் பண்ணிட்டேன்... காபி டம்ளரைக் கையில் வாங்கிக் கொண்டு "உனக்குமா..." என்றான். தான் சற்று மௌனம் பட்டிருப்பதைக் கவனித்த ரஞ்சனி தனக்குள் சிரித்துக் கொண்டாள். 'பாவம், பசி பையனுக்கு.

என்று நினைத்துக் கொண்டே, "உள்ளே வச்சிருக்கேன், போய் சாப்பிடறேன்..." என்றவள் அவன் குடித்து முடித்த காலி டம்ளரை வாங்கிக்கொண்டு,

"ராத்திரிக்கு சாதம் வடிச்சு ரஸமோ, துவையலோ பண்ணட்டுமா, இல்லே சப்பாத்தி உருளைக்கிழங்கு செய்யட்டுமா ஸ்ரீராம்..."

"ஏதாவது பண்ணும்மா..."

"உனக்கு என்ன வேணும் சொல்லு, அதைப் பண்றேன்..."

"சரி சப்பாத்தியே பண்ணிடு..."

"நீ உட்கார்ந்து படி, அரை மணி நேரத்தில் சப்பாத்தி பண்ணி, குளிச்சிட்டு வந்துடறேன், இரண்டு பேருமா உட்கார்ந்து சாப்பிடலாம்..."

சொன்ன மாதிரி அரைமணி நேரத்தில் சப்பாத்தியும், உருளைக்கிழங்கு வெங்காயமும் செய்து முடித்து; உடல் கசகசப்பு தீர சில்லென்ற தண்ணீரை மொண்டு மொண்டு ஊற்றிக் கொண்டு, மன அழுப்பும், களைப்பும் தீர சாதாரண துவ்வு புடவை ஒன்றைக் கட்டிக் கொண்டு வெளியில் வந்தாள். சமையலறை மூலையில் சின்னமாடத்தில் வைத்திருந்த ஸ்வாமிப் படங்களுக்கு விளக்கேற்றி நமஸ்கரித்தாள். 'என் அப்பா ஸர்வாரா! இந்த ஒரு குழந்தையை நன்றாக வை...' என்று வேண்டிக்கொண்டு ஸ்ரீராமை சாப்பிடக் கூப்பிட்டாள்.

இருவரும் சமையலறைத் தரையில் எதிர் எதிராக உட்கார்ந்து சாப்பிட்டனர். மெத்தென்று சப்பாத்தி நன்றாக இருக்க ஸ்ரீராம் பரிவேகத்திற்கு குசித்துச் சாப்பிட்டான். அவன் சாப்பிடுவதையே களிவாகப் பார்த்துக் கொண்டிருந்த ரஞ்சனி,

"இன்னும் ஒரு சப்பாத்தி போட்டுக்க..." என்றாள்.

"வேணாம்மா, மூணு சாப்பிட்டு விட்டேன்..."

"சீ! இது ஒரு கணக்காடா...வளருகிற பிள்ளை சாப்பிடுகிற லட்சணமா இது...?"

"ம்...இதைப் போட்டுக்க..."

சாப்பிட்டு முடித்தவுடன் ஒரு டம்ளர் மோர் குடிக்கச் செய்து அவனை அனுப்பிவிட்டு, ஒழிந்த பாத்திரங்களைத் தேய்த்து அடுக்கி, நாளைய சமையலுக்கு அரிசியைக் கல் பொறுக்கி குக்கர் பாத்திரத்திலேயே கொட்டி வைத்து காய் என்ன இருக்கிறது என்று பார்த்தாள். நாலு பீன்ஸும் ஒரே ஒரு பெங்களூர் கத்தரிக்காயும் வாடிக் கொண்டு கிடந்தன. பீன்ஸ் சாம்பாரும் பெங்களூர் கத்தரிக்காவை பருப்பு உசிலியாகச் செய்யலாம் என்று முடிவு பண்ணி எடுத்து வைத்து, சமையலறையைக் கழுவி மீதப் பாலில் புரை போட்டு விட்டுக் கதவை மூடித் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டு வந்த போது சுவர்க்கடிகாரம் ஒன்பதடித்தது. உடம்பு படுத்துக் கொள் என்று கெஞ்சியதையும் மீறி மனசு 'ஸ்ரீராம் ஏதோ சொல்கிறேன் என்று சொன்னானே...என்னவாக இருக்கும்...?' என்று எதிர் பார்த்து, மௌனமாக அறையைப் பெருக்கி இரண்டு பேருக்கும் படுக்கை விரித்தாள். தலையணைகளை எடுத்துப் போட்டுக் கொண்டே அவனைப் பார்த்தாள்.

அவன் வீட்டுக் கணக்கைப் போட்டு முடித்து, ஆங்கிலப் பாடம் எழுதி நோட்டுப் புத்தகத்தை மூடி வைத்து விட்டு நிமிர்ந்தான். அம்மா தன்னையே பார்த்தபடி நிற்பதைக் கவனித்து விட்டுக் கேட்டான்.

"என்னம்மா...?"

"படுத்துக்கலாமா ஸ்ரீராம்..."

"ம்...படுத்துக்கலாம்..."

வாசற் கதவை சரியாகத் தாழிட்டு குழல் விளக்கை நிறுத்தி நீலமான ஷட்டாப் சன்னமாய் ஒளி பரப்பும் இரவு

விளக்கைப் போட்டு விட்டுப் படுத்துக் கொண்டாள் தன் பக்கத்தில் கிடந்த மகனை ஒரு கையால் அணைத்துக் கொண்டு ரஞ்சனி.

"என்னவோ சொல்றேன்னு சொன்னியே, என்னப்பா..?" என்று கேட்டாள்.

அவன் ஒரு விநாடி தயங்கி பின் ஆரம்பித்தான்.

"எம்மா...இன்னும் ரிக்வெஸ்ட்காரனுக்கு சம்பளம் தரலை..?"

அவள் பேசாதிருந்தாள்.

"இன்னிக்கு அவன் ரொம்பக் கோபமாகப் பேசினாம்மா. நாளைக்கு சம்பளம் வாங்கி வையின்னு சொன்னான். கூட வர்ற பசங்க எதிரில அப்படிச் சொன்னது எனக்கு ரொம்பக் கஷ்டமா இருந்தது."

"அதனால்தான் என்னவோ போல் இருந்தியா...?"

"அதனால் மட்டுமில்லே..."

"அப்படின்னா இன்னும் கூட விஷயம் இருக்கா...?"

"சொல்றேன். முதல்ல இதற்குப் பதில் சொல்லும்மா... அவன் பணத்தை அவன் கிட்டே கொடுத்துடறது தானே...?"

"கொடுக்கலாம்ப்பா— நாளைக்கு நானே அவன் கிட்டே பேசறேன்..."

"பேசறது இருக்கட்டும்மா. மீதி எலெக்ஷனுக்கும் பணம் கொடுத்துடற நீ அவனுக்கு மட்டும் என் நாமாட்டேன்ற...?"

"நான் மாட்டேன்னு சொல்லலே ஸ்ரீராம். ஒவர் டைம் ஒர்க் பண்ணின பணம் பதினைந்தாம் தேதி வரும். அதுல கொடுத்துடலாம்னுதான் இருந்தேன்..."

"சரி. அவன் சம்பளத்தை இலிருந்து ஒன்னாம் தேதியே கொடுத்துட்டு வேறு எதையாவது அட்ஜெஸ்ட் பண்ணிக்கறேன். நீ கவலைப் படாதே..."

அவள் அதற்குப் பின் சில விநாடிகள் மௌனத்தில் ஆழ்ந்து போகவே தலையை மெல்ல வருடி ரஞ்சனி இதமாகத் தொடங்கினாள்.

"இன்னும் என்னவோ சொல்லணும்னியே...?"

"ம்... வந்து நேற்று நீ எம்மா ஸ்கூலுக்கு வரலே...?"

"ஸ்கூலுக்கா, உங்க ஸ்கூலுக்கா... எதுக்குப்பா...?"

"பேரண்ட்ஸ மீச்சர்ஸ் மீட்டிங். எல்லார் அப்பா, அம்மாவெல்லாம் வந்திருந்தாங்க. எனக்குந்தான் யாரும் வரலை..."

"ஓ அதற்கா...? நான் எப்படிப்பா வர முடியும்? சாயந்திரம் நாதன் மணிக்கு மீட்டிங் வைத்தால் எப்படி வர சௌகரியப்படும்...? அந்த நேரத்திற்கு ஆபீஸ் இருக்கேப்பா..."

"மத்த எத்தனையோ பசங்களுடைய அப்பா வெல்லாம் லீவு போட்டுட்டு வந்திருந்தாங்க, தெரியுமா...?"

"இருக்கலாம்ப்பா..." என்ற போது ரஞ்சனியின் குரல் கம்மிற்று. கழிவிரக்கம் மிகுதியாகப் பேசினாள்.

"எவங்களுக்கெல்லாம் லீவு இருக்கும். ரொம்ப நான் சர்வீஸ்லே இருக்கிறங்களா இருப்பாங்க. அதனால் பர்மிஷன் கேட்டுக் கொண்டு வந்திருப்பாங்க. எனக்கு அந்த வசதியெல்லாம் கிடையாதேப்பா. நான் இப்போ தானே வேலையில் சேர்ந்தேன். இன்னும் கன்பர்ம் கூட ஆகலையே... அதற்குள் பர்மிஷனோ, லீவோ கேட்க முடியாதே..."

"எனக்குத் தெரியாதும்மா. மிஸ்ஸஸ் மிஸ் நாளைக் காலைல ஸ்கூலுக்கு வர்றபோது உன்னைக் கூடவே கூட்டிட்டு வரணும்னு சொல்லியிருக்காங்க..."

"என்னையா... எதுக்கப்பா...?"

''தெரியாது எனக்கு... நேற்று நீ வரலைன்னு ரொம்பக் கோவிச்சுக்கிட்டாங்க. லெட்டரைக் கொடுத்தியா இல்லையான்னு கேட்டாங்க...''

''கோவிச்சுக் கிட்டாங்களா...?'' என்று கால் விளாடி யோசித்த ரஞ்சனி ''ஏம்ப்பா, நீ ஏதாவது நப்பு செய்தியா...?'' என்று வினவ—

''சீச்சீ— கிளாஸ்ல நான் யார் கிட்டேயும் பேசக்கூட மாட்டேம்மா...'' என்றான்.

''...பின் எதற்காக உங்க டீச்சர் என்னை வரச் சொல்லியிருக்காங்க...?''

''தெரியலை...''

''—''

''என்னம்மா, வரியா...?''

''வரேன். ஆனால் உன் கூட வரலை, நீ ஸ்கூலுக்குப் போ, நான் ஆபீஸ் போய் மானேஜர் கிட்ட சொல்லி ஒரு மணி நேரம் பர்மிஷன் கேட்டுகிட்டு பதினோரு மணி வாக்கில் வரேன்...''

''ம்ஹூம், என் கூடவே வாம்மா... இல்லைன்னால் மிஸ் என்னைத் திட்டுவாங்க...''

''உன்கூட எப்படிப்பா வர முடியும்...? சரியா பத்து மணிக்கு நான் ஆபீஸ்ல இருக்கணும், அதனால் நீ போய் மிஸ்கிட்ட சொல்லு, நான் பின்னாலயே வந்து விடுகிறேன்...''

மிஸ் திட்ட மாட்டாங்களே...?''

''மாட்டாங்க...''

''க்ளாஸை விட்டு வெளியில் நிற்க வைக்க மாட்டாங்களே...?''

''ஏன், அப்படிக் கேட்கறே...? அடிக்கடி நீ வெளியில் நிற்கறியா...?''

''இல்லை... கேட்டேன்...''

''மாட்டாங்க...'' என்றான். அவள் யோசனையுடன் இழுத்தபடி.

''நிச்சயம் வருவாய் இல்லே...?''

''நிச்சயமா வருவேன். ஆமாம், உங்க கிளாஸ் டீச்சர் பெயர் என்ன...?''

''வில்லிசாமுவேல்...''

''சரி, நாளைக்கு வந்து பார்க்கிறேன்...''

5

அந்தச் சிடுமூஞ்சி மானேஜரிடம் கெஞ்சி, கெஞ்சி அனுமதி பெறுவதற்குள் ரஞ்சனி மிகுந்த சங்கடத்திற்குள்ளானாள். பஸ் பிடித்துப் போனால் நேரமாகி விடுமென்று பணம் போனால் பரவாயில்லை என்று ஓர் ஆட்டோ பிடித்து நேராக ஸ்ரீராமின் பள்ளிக்கூட வாசலில் இறங்கிக் கொண்டாள். அவள் போனபோது இரண்டு வகுப்புகளுக்கு இடையில் விடுகிற இடைவெளியானதால் குழந்தைகள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். காக்காய் கூட்டம் மாதிரி சத்தம் கேட்டது. ஓடுகிற சிறுவர்களுக்கு இடையில் வழி தேடி 5A எங்கே இருக்கிறது என்று கேட்டு கண்டுபிடித்துப் போனபோது யாருமற்ற வகுப்பில் ஸ்ரீராம் மட்டும் தனியாக உட்கார்ந்திருந்தான். மேஜை மீது தலையைக் கவிழ்ந்து கொண்டிருந்ததால் இவள் வந்ததைக் கவனிக்கவில்லை. ரஞ்சனி அருகில்போய் தலையைத் தடவி முடியைக் கோதிவிட்ட போதுதான் திடுக்கிட்டான். பார்வையை உயர்த்தினான். கண்கள் அகன்று பார்வை பளிச்சிட,

''அம்மா... நீ வந்திட்டியா...?'' என்று சந்தோஷம் காட்டினான்.

''சொன்னால் வராமல் இருப்பேனா...? ஆமாம், நீ ஏன் இப்படி கிளாஸில் தனியா உட்கார்ந்துட்டிருக்கே...? எல்லாரும் விளையாடறாங்களே? நீயேன் விளையாடப் போகலை...?''

''ம்ஹூம்... நான் போகலை...''

''ஏண்டா...?''

''எப்பவுமே நான் விளையாட மாட்டேன்...''

''அதான் ஏன்னு கேட்கறேன்...?''

''எனக்குப் பிடிக்காது...''

''விளையாடப் பிடிக்காதா...?''

''விளையாட இல்லேம்மா. மற்ற பசங்ககூடப் போனால், அவங்கள்ளாம் அவங்கவுங்க அப்பா பெருமை பேசுவாங்க... டேய் எங்கப்பா போலீஸ் இன்ஸ்பெக்டர்டான்னு சொல்லுவான் ஒருத்தன். அரவிந்த் அவங்க அப்பா டாக்டர்னு பெருமையடிச்சுப்பான். ஸ்ரீனிவாசன் அவங்க அப்பா கீபாரின் போனதைச் சொல்லுவான். ஜெயராம் தன் அப்பாகூட மை டியர் குட்டிச்சாத்தான் போனேன்டான்னு சொல்ல ஆரம்பிப்பான். கேட்க கேட்க எனக்குக் கஷ்டமா இருக்கும். அழுகை வரும். அதனால் யார் கூடவும் சேர்ந்தில்லை...''

வாயடைத்துப் போனாள் ரஞ்சனி. மேலே எது கேட்கவும் தோன்றவில்லை. அவன் பாதிக்கப்பட்டிருப்பதன் காரணம் இப்போது புரிந்தது. எதற்கு ஏங்குகிறான் என்பது தெரிந்தது. இத்தனை நாட்களும் இதை மனதில் வைத்துக் கொண்டா இப்படி உள்ளுக்குள் ஒடுங்கி, ஒடுங்கிப் போகிறான். இதனாலா தனித்து நிற்கிறான்...? ஆரம்பத்தில் பெண் குழந்தைகளுக்கு அப்பாவிடமும், ஆண் குழந்தைகளுக்கு அம்மாவிடமும் ஈடுபாடு இருப்பது இயற்கை. அதை இடிபஸ் காம்ப்ளெக்ஸ் என்பார்கள். ஆனால் கடைசிவரை அது அப்படியே இருப்பதில்லை.

சற்று விவரம் புரிகிற வயதில் முற்றிலும் மாறிப்போய் விடுகிறது. பிள்ளைக்கு அப்பாவைத்தான் பிடிக்கிறது. அப்பாவிடம் தான் பாதுகாப்பு உணர்ச்சி ஏற்படுகிறது. அப்பா தான் ஆதாரம் என்றாகிறது. பெண்ணிற்கு அம்மாவின் அண்மை அதி முக்கியமாகிறது. அம்மாவிடம் மட்டுமே எல்லாவற்றையும் பகிர்ந்து கொள்ள முடியும் என்கிற நிலைமை வருகிறது. உடல் மாற்றங்களைச் சொல்ல முடிகிறது. இப்படி ஏற்படுவது இயற்கையான மாற்றம்.

ஆனால் இந்தப் பையனுக்கு சின்ன வயதிலேயே அப்பாவிடம் தான் ஒட்டுதல். அப்பாதான் வேண்டும். அப்பா இருந்தால் எல்லாமே இருக்கிற நிறைவு. சாப்பாடு அப்பாவுடன். தூங்குதல் அப்பாவுடன். அப்பாவைக் கட்டிக்கொண்டு அவர்மீது கால் போட்டுக் கொண்டால் தான் அவனுக்குத் தூக்கம் வரும். அவர் கழுத்தில் கை போட்டு இறுக்கி...

''அப்பா கதை சொல்லுப்பா...''

''கதையா... இப்பவா...?'' என்று ரஞ்சனியைப் பார்ப்பான். ''என்ன உன் பிள்ளை இன்னிக்கு விட மாட்டான் போல இருக்கே...?''

''விடலைன்னால் போகட்டும். கதை கேட்கறானே... சொல்லுங்களேன்...''

''கதை சொல்ல ஆரம்பிச்சா நேரமாகும். கதை முடிந்து இவன் எப்போ தூங்கறது. நாம்—''

''ஐய... போறும்! முதல்ல குழந்தைக்குக் கதை சொல்லுங்க...''

அதற்குமேல் பொறுக்க இயலாமல் ஸ்ரீராம் சிணுங்குவான்.

''போங்கப்பா...அம்மாகிட்ட அப்புறம் பேரிக்கோங்கப்பா... முதல்ல எனக்கு இப்போ கதை சொல்லுங்க...''

கதை சொல்லி, தட்டித் தூங்க வைத்து, கழுத்தைச் சுற்றிக் கொண்டிருக்கும் கைகளை அகற்றி, போத்தி விட்ட அப்புறமே ரஞ்சனியின் பக்கம் திரும்புவாள்.

அம்மாவது தூரம் ஒன்றிப்போன ஒரு குழந்தைக்குத் தற்போது எப்படி இருக்கும்...? மனோநிலை சீரியசாக ஏவ்வளவு அடிபடுவான்...? அடிபடுவான் என்ன...? அடி பட்டதால்தானே இப்படி இருக்கிறான்...? சோகை நோய் பிடித்த குழந்தையாக நிற்கிறான். டாக்டர் சொன்ன மாதிரி உடல வியாதிக்கு மருந்து தந்து குணப் படுத்த முடியும், மனோவியாதிக்கு என்ன செய்ய முடியும்...?

அவள் யோசனையுடன் நின்றுகொண்டிருக்க ஸ்ரீராம் கையைப் பற்றி உலுக்கினான்.

''அம்மா, வாம்மா... கிளாஸ் டீச்சரைப் பார்க்கப் போகலாம்...''

''எங்கே போகணும் ஸ்ரீராம்...?''

''ஸ்டாஃப் ரூமுக்கு...''

''சரி, வா...''

இருவரும் கீழே இறங்கி வந்து, சனுக்கு ம்ரம் மிஸ்ஸா இவற்றையும், பெரிதான மாமர நிழலையும் கடந்து ஸ்டாஃப் ரூம் வாசலில் போய் நின்றதும், பேசிக் கொண் டிருந்த ஜூலியர் காலேஜ் ஆசிரியைகள் சிலர் திரும்பிப் பார்த்தனர்.

''யார் வேண்டும்...?''

அந்தக் கேள்விக்கு பதில் சொல்லாமல் ஸ்ரீராம் ஒடுங்கி சட்டைத் துணியைத் திருகிக் கொண்டு நிற்க, ரஞ்சனியே கேட்டாள்.

''5-A டீச்சரைப் பார்க்கணும்...''

''5-Aக்கு யாரு கிளாஸ் டீச்சர்...?''

''யாரு ஸ்ரீராம், என்ன பெயர் சொன்னே...?''

''மில்லிசாமுவேல், மில்...''

''ஓ! அவங்களா...? உள் அறையில் இருப்பாங்க... அங்க போய்ப் பாருங்க...''

நடுங்கித் தடுமாறி பயந்து மருண்ட முகத்துடன் ஸ்ரீராம் உள்ளே நுழைய அவனும் பின்னாலேயே போனாள். உள் அறையில் ஸ்ரீராமின் வகுப்பிற்குப் பாடம் எடுக்கிற நிறைய ஆசிரியைகள் நீளமான மேசையருகில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்க, ஸ்ரீராம் உள்ளே நுழைந்ததும் சட்டென்று அமைதி ஏற்பட அத்தனை பேர் பார்வையும் ஸ்ரீராமின் மீது பதிந்தது. திருத்திக் கொண் டிருந்த நோட்டுப் புத்தகத்தை மூடி வைத்த மில்லிசாமு வேல் 'இவன் எப்படி இவ்வளவு தைரியமாக ஸ்டாஃப் அறையினுள் நுழைந்தான்' என்கிற ஆச்சரியத்துடன், ''என்ன ஸ்ரீராம்...'' என்று கேட்டான்.

''ஒண்ணுமில்லே மில... அம்மா வந்திருக்காங்க...''

''உன்னுடைய அம்மாவா...?!''— மில்லிசாமு வேலின் குரல் எதிர்பார்ப்பில் தீவிரமடைய அவன் சொன்னான்.

''ஆமா, வெளியே நின்றுட்டிருக்காங்க...''

''உள்ளே கூப்பிடு ஸ்ரீராம், அம்மாவை என அப்படி வெளியில் நிறுத்தினே...?''

அவன் திரும்பி கை காட்ட ரஞ்னி உள்ளே வந்தாள். மென்மையாக, நிதானமாக லேசான புன்சிரிப்புடன் வந்த விதம் அனைவரையும் கவர்ந்தது. வெளளை வெளே சென்று இறுகக் கட்டிய உடல்வாகு, மிதமான உயரம், தரை வரைப் பின்னலிட்டிருந்த அலை ஒடும் கேசம், தன்ன நீர்மையான நாசியும், கண்களும், பளபள வெட்டின மாதிரி 'என்னைத் தொட்டுப் பாரேன்...' என்று கொஞ்சம் குழி விழுந்த முகவாய், கரிக் கருப்பில் அடர்த்தியான கண் இரப்பைகள் பார்வையை இன்னும் சாந்தமாகக் காட்ட

அந்த அழகில் அப்படியே ஆச்சரியப்பட்டு உட்கார்ந் திருந்தாள் மில்லிசாமுவேல். முதலில் முக அழகும் வசீக

சமும் இப்படிக் கூட ஒரு அழகா என்கிற பிரமையை மட்டுமே ஏற்படுத்தின. 'இவளா...இவளா ஸ்ரீராமின் அம்மா! தக தகவென்று எதிரில் நிற்கிற இந்த உருவமா? ஒப்பற்ற நிறமைசாலியான ஓவியன் வரைந்த அற்புத மான ஓவியம் போல் தோன்றுகிற இவளா...?

ஒரு வினாடி பார்த்துக் கொண்டிருந்த பின்புதான் சட்டென்று அந்தப் பழமும் தெற்றி கறுக்கென்ற வலியை ஏற்படுத்தியது. பொட்டற்ற சின்னதால் விபூதிக் கீறலிட்ட நெற்றி...!

''ஜீஸஸ்...! இத்தனை அழகும் இப்படிக்காட்டில் காய் வதற்கா...? இவருக்கு வயது முப்பதிருக்குமா...? அல்லவதான் இருக்கும். பத்து வயதுப் பையன் இருக்கானும் பத்தொன்பது. இருபது வயதில் கல்யாணமாகி யிருக்கக்கூடும். இவர்கள் சமூகத்தில் சீக்கிரமே கல்யாணம் பண்ணி விடுவார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறாள். பார்த்தும் இருக்கிறாள். அதுபோல இவருக்கும் கல்யாண மாகி உடனே ஒரு வருடத்தில் குழந்தை பிறந்திருக்கும். இவளது இருபது வயதில் ஸ்ரீராம் பிறந்திருந்தாலுகூட இப்போது இவருக்கு வயது முப்பதுதான் ஆகும். அல்லது ஒரிரு வருடங்கள் குறைத்தோ, கூடுதலாகவோ இருக்கக்கூடும். எப்படியானாலும் இந்த வயதில் அத்தனை உணர்வுகளையும் அடக்கிக்கொண்டு, நெற்றியில் பொட்டிற்குப் பதிலாக விபூதியைக் கீற்றாக இழுத்து...

இது கொடுமையான விஷயம், கோரமான விஷயம், பரிதாபமான விஷயம்...எப்படித் தாங்கிக்கொண்டு நீ பற்றி எரிற பச்சை மரமாக நிற்கிறாள்...!

மனத்திற்குள் அசாதாரணமானதோர் கருணையும், வருத்தமும் ஏற்பட, உட்கார்ந்திருந்த இடத்தை விட்டு வில்லி எழுந்தபோது ரஞ்சனி பணிவாகக் கை கூப்பி 'நமஸ்காரம்' என்றாள்.

''நான் ஸ்ரீராமோட அம்மா...நீங்க என்னை வரச் சொல்லி ஸ்ரீராமிடம் சொல்லி அனுப்பினீர்களாம்...''

வில்லிசாமுவேல் இதமான புன்சிரிப்பைச் சிந்தினாள்.

''ஆமாம். நீங்கள் இதுவரை ஸ்கூல் பக்கம் வரவே யில்லை. அன்று பேரண்ட்ஸ்—டீச்சர்ஸ் மீட்டிங்கிற்கும் வரவில்லை. அதனால்தான் சொல்லி அனுப்பினேன்...''

'ஐயம் ஸாரி. பேரண்ட்ஸ்-டீச்சர்ஸ் மீட்டிங்கிற்கு வர வில்லை என்பதற்காக ஸ்ரீராம்கூட வருத்தப்பட்டான். வரக்கூடாது என்பதில்லை. வர முடியவில்லை. ஆபீஸில் புதியதாகச் சேர்ந்திருப்பதால் லீவு கிடைப்பதில்லை. இன்னமும் கன்ஃபர்ம் ஆகாததால் பர்மிஷனும் கேட்க முடியாத நிலை...''

''ஓ...நீங்கள் வேலை பார்க்கிறீர்களா...?''

''வேலை இல்லாவிட்டால் எப்படி இரண்டு வயிறும் பசியாற முடியும்?''

''ஐயம் ஸாரி. என் கேள்வி உங்களை எந்த வகை யிலாவது புண்படுத்தியிருந்தால் மன்னித்துக் கொள் ளுங்கள்.''

''அதெல்லாம் ஒன்றுமில்லை. இது எல்லோரும் கேட்கிற சாதாரணக் கேள்விதானே...? இதற்காக என் கோபப்பட வேண்டும்...?''

அப்போது ஆயா தேனீர் தயாரித்து கோப்பைகளில் அடுக்கிக் கொண்டு வர, வில்லி ஒரு கோப்பையை எடுத்து ரஞ்சனியிடம் நீட்டினாள். ரஞ்சனி மறுக்காமல் வாங்கிக் கொள்ள, தானும் ஒரு கோப்பையை எடுத்துக் கொண்ட பின் ஸ்ரீராமைப் பார்த்து, ''நீ கிளாஸுக்குப் போ ஸ்ரீராம். மெல அடிக்கிற தோரணச்ச பார். அம்மாகிட்டே பேசி தான் அனுப்பிடறேன்...''

அவன் போனதும் மற்ற ஆசிரியைகளுக்கு அறிமுகம் படுத்தத் துவங்கினாள்.

''இவங்க கனகவல்லி ஸ்டியாகரஃபி எடுக்கறாங்க. மிஸ் சுருத்லா—மாத்ஸ் டீச்சர், இவங்க—கபதீரா, சயன்ஸ் நடத்தறாங்க...'' என்றவள் அவர்களிடம், ''இவங்கதான் தம் ஸ்ரீராமின் அம்மா...பெயர்...இன்னும் நீங்க உங்கப் பெயரைச் சொல்லவே இல்லையே....?''

''ரஞ்சனி...''

''ரஞ்சனி...'' என்பதைத் தனக்குள் முணுமுணுத்த வில்லீசாமுவேல் ''உங்களை மாதிரியே பெயரும் அழகா இருக்கு...'' என்றான்.

அதைக் கேட்டு வருத்தம் தோய சிரித்தாள் ரஞ்சனி.

''நான் அழகாயிருந்து என்ன பிரயோஜனம்...? தலை விதி அழகாயில்லையே...''

அதற்கு பதில் சொல்லத் தயங்கி எல்லோரும் பேசாமல் இருக்க, மனிவண்ணத்து அடித்த வருப்பைத் துவங்க ஒவ்வொருவராக விடைபெற்றுப் போனதும் வில்லீசாமுவேல் தழைந்த நரலில் பேச ஆரம்பித்தான். தெருவில் வந்து சினேகிதியிடம் பேசுகிற மாதிரி—அக்கா தங்கையிடம் சொல்கிற மாதிரி சொன்னான்.

''உங்கக்கிட்டே ஸ்ரீராமைப் பற்றிக் கொஞ்சம் தனியாகப் பேசணுமே...''

''பேசுங்களேன்...நான் பர்மிஷன் கேட்டுத் கொண்டு தான் வந்திருக்கிறேன்...''

''ஆனால் எனக்கு இப்போது நேரமில்லையே... கிளாஸ் எடுக்கப் போகணுமே...''

''ஓ...அப்படியா..?'' என்று தன் ஏமாற்றத்தை மறைத்துக் கொள்ள முயன்றாள் ரஞ்சனி. ஆனால் அதைக் கவனித்த வில்லீசாமுவேல்,

''ஒன்று செய்யலாமா...? ஞாயிற்றுக்கிழமை உங்கள் வீட்டுக்கு வரட்டுமா...இப்போது ஓய்வாகஇருப்பீர்கள்...''

''ஞாயிற்றுக்கிழமை ஆபீஸ் லீவுதான். பதினோரு மணியளவில் வேலைகளையெல்லாம் முடித்து ப்ரீயாக இருப்பேன். அப்போது வர முடியுமா?''

''ஓ கே. சர்ச்சிலிருந்து நேராக வருகிறேன்...அட்ரஸ் சொல்லுங்கள்...''

விலாசத்தை ரஞ்சனி குறித்துக் கொடுத்து சிறிது தயங்க, அதற்குள் புறப்பட்டுக் கொண்டிருந்த வில்லீசாமுவேல் ''என்ன...'' என்று கேட்டான்.

''ஒன்றுமில்லை. ஸ்ரீராம் பெரிதாய் தவறு ஒன்றும் செய்துவிடவில்லையே...''

''நோ...நோ...அப்படி எதையும் கற்பனை செய்து கொண்டு விடாதீர்கள். தவறு செய்ததற்காக உங்களை வரச்சொல்லவில்லை. நான் நேரில் விவரமாகப் பேசி தேவை...?''

''சரி மேடம்.''

''மேடம் என்றெல்லாம் கூப்பிட்டு என்னை அந்நியப் படுத்தி விடாதீர்கள். நான் உங்களை அப்படி நினைக்க வில்லை. முதல் பார்வையிலேயே மிகவும் நெருங்கி வந்து விட்டீர்கள். மனிதத்துப் பிடித்தும் போய் விட்டீர்கள். உங்களிடம் பேசுகிறபோது என் தங்கையிடம் பேசுகிற மாதிரி இருக்கிறது.''

''ஓ...'' என்று நெகிழ்ந்து வில்லீசாமுவேலை நெருங்கி அவள் கையைப் பற்றி அழுத்த அவள் புன்சிரிப் புடன் ரஞ்சனியை ஏறிட்டாள்.

''சோ, நான் உன்னை ஞாயிற்றுக்கிழமை காலை யில் சந்திக்கிறேன் ரஞ்சனி. என்ன...?''

''சரி வில்லி...அப்போ தான் புறப்படட்டுமா...?''

''ஓ.கே...ஸ்ரீராமைப் பார்த்துச் சொல்லிக்கொண்டு போ...''

மீண்டும் ஸ்ரீராமின் வருப்புக்குப் போய் பூகோள ஆசிரியை சுபத்ராவிடம் கேட்டு ஸ்ரீராமை வெளியில் கூப்பிட்டுச் சொல்லிக்கொண்டு பள்ளிக்கூடத்தை விட்டுக் கிளம்பிய போது மனசு சற்று லேசாகியிருந்தது. புதிதாகக் கிடைத்த மில்லிசாமுவேலின் சினேகிதத்தால் ஏதோ நன்மை ஏற்படப் போகிறது என்று உள் மனசு சொல்ல அவள் நெருக்கோடிக்குப் போய் ஆட்டோ பிடித்து தன் ஆபீஸ் பெயரைச் சொன்னாள்...

6

சினேகிதத்தில் மூன்று வகை உண்டு. ஒன்று—தனக்கு ஏற்படக் கூடிய நன்மையை மட்டும் கணக்கிட்டுப் பழகுவது. இரண்டாவது தனக்குத் தன்மை செய்து கொண்டு பழகுபவர்களுக்கும் நன்மை செய்வது. மூன்றாவது—தனக்கு நன்மை இருக்கிறதோ இல்லையோ, பழகுகிறவர்களுக்கு எப்படியாவது நல்லது செய்ய வேண்டும் என்று துடிப்பது.

இந்த மூன்றாவது வகையைச் சேர்ந்தவன்தான் மில்லிசாமுவேல். தான் எந்த இடத்தில் பழகினாலும் அந்த இடத்திற்கு நன்மை ஏற்பட வேண்டும் என்று நினைப்பவன். எவ்வாருக்கும் எந்த வகையிலாவது நல்லது செய்ய ஆசைப்படுபவன். உண்மையான கிறிஸ்தவனாக நடப்பவன். அந்த அடிப்படையில்தான் அன்று காலை சர்ச்சிற்குப் போய் பிரார்த்தனையை முடித்துக்கொண்டு ஆட்டோ பிடித்து நேராக ரஞ்சனியின் வீட்டு வாசலில் இறங்கினான். மூன்று மாடிகளின் படிகளிலும் நின்று நிதானமாக ஏறி அழைப்பு மணியை அழுத்தினான்.

''யாரது...என்கிற மென்மையான பெண் குரலுக்குப் பின் வெளியில் நிற்கிறவர்களைப் பார்க்கிற வசதிக்காகக்

கதவில் ஏறபடுத்தப்பட்ட துவாரத்தின் வழியாகப் பார்க்கப் பட்ட பின் கதவு திறக்கப்பட்டது.

''ஓ... வாங்க மிஸ்... வாங்க...'' என்று அதே நெற்றியின் கீற்று விபூதியும், முகம் நிறைந்த புன்னகையு மாக வரவேற்றாள் ரஞ்சனி. அந்தக் கள்ளமற்ற புன்னகை யில் மனசு நிறைய சிரித்துக்கொண்டே உள்ளே நுழைந்த மில்லிசாமுவேல் சுவாதீனமாக அறையின் கூடை நாற்காலியில் போய் உட்கார்ந்தவாறு சொன்னான்,

''எங்கத் தொழிலில் மிஸ்ஸ் ஆனாலும் மிஸ் என்றே கூப்பிட வேண்டியிருக்கிறது பார்த்தீர்களா?''

ஒரு விநாடி பதில் பேசத் தெரியாமல் விழித்தாள் ரஞ்சனி. பின்னர்,

''ஐயாம் ஸாரி. உங்களை வேறு எப்படிக் கூப்பிடுவது என்றே தெரியலை...'' என்றாள்.

அதற்கும் சிரித்துக் கொண்டே இருந்த மில்லி சாமுவேல், ''நான் உங்களை எப்படிக் கூப்பிடுகிறேன் என்று கவனித்தீர்களா...?'' என்று கேட்டான். அது அந்திய இடம். புது இடம் என்கிற உணர்வு எதுவுமின்றி சகஜமாகப் பேசினான். அந்தத் தோழமையில் நெகிழ்ந்து போன ரஞ்சனி,

''ரஞ்சனின்னு கூப்பிடறீங்க...'' என்றாள் தன் தயக்கம் சிறிது குறைய.

''அப்படிப் பெயர் சொல்லித்தானே கூப்பிடுகிறேன். நீங்களும் அதே மாதிரித்தானே கூப்பிடணும்?''

''சரி, நானும் மில்லின்னு கூப்பிட ஆரம்பிக்கிறேன். நீங்களும் இந்த வாங்க, போங்கலை விட்டு விட்டு, வா போன்னு சொல்லணும்..., என்ன...?''

''எனக்கு ஆட்சேபனை இல்லை ரஞ்சனி. வா போன்னு கூப்பிடுகிற போது இன்னமும் நெருக்கமுடி கிறது. அது எனக்கும் பிடித்தமான விஷயம்தான். நீயும்

வயதில் என்னை விடச் சின்னவளாகத்தான் இருப்பாய். உனக்கு இப்போ வயசு முப்பது இருக்குமா...''

''இல்லை. முப்பத்தி இரண்டு...?''

''ப்பூ! அவ்வளவுதானே... என் வயசு என்ன தெரியுமா...''

''தெரியலை.....''

''கம்மா கெஸ் பண்ணேன்...''

''ம்...முப்பத்தெட்டு முப்பத்தொன்பது இருக்குமா...?''

''நீ கம்மா சொல்றே ரஞ்சனி. அதிக வயசு சொன்னால் இவன் என்ன நினைத்துக் கொள்வானோன்னு குறைச்சு சொல்றே... இந்த உடம்புக்கும், தலை நரைக்கும் இவ்வளவுதான் இருக்கும்னு நம்பறியா...?''

''சில பேருக்கு ரொம்ப சீக்கிரம் தலை நரைத்துப் போகும். அதை வைத்துச் சொல்ல முடியுமா...?''

''சரி... உடம்பைப் பார்த்தால் கூடவா தெரியலை...?''

''இது ஒரு குண்டா...? சில மார்வாடிப் பெண்கள் பதினெட்டு வயசுக்கெல்லாம் எப்படி ஸ்தூல சரீரமா ஆயிடறாங்க தெரியுமா...?''

''சரி, எதற்கு வீணான விவாதம், எனக்கு வயது நாற்பத்து ஒன்று. பெரிய பெண் கல்யாணமாகி பெங்களூரில் இருக்கிறாள். பாங்க் ஒன்றில் வேலை பார்க்கிறாள். அவளுக்குப் பின் ரொம்ப நாள் கழித்து தானே எதிர்பார்க்காத வகையில் ஒரு பையன். இப்போதான் எட்டு வயசாகிறது. உன் வயதில்தான் அவன் எனக்குப் பிறந்தான்...'' சொல்லி விட்டுத் தன் கைப்பையைத் திறந்து சாக்லேட் பொட்டலத்தையும், பில்கட் பாக்கெட்டையும் எடுத்து,

''ஸ்ரீராம் எங்கே காணோம்...'' என்று கேட்டான்.

''இப்போதான் சாப்பிட்டுவிட்டு நீங்கள் வருகிற போது வீட்டில் இருக்க சங்கோஜப்பட்டுக்கொண்டு வெளியில் போய் இருக்கிறான்...''

''அடடா...!'' என்று ஆச்சரியப்பட்டான் வில்லியாரு வேல். ''வெளியில் போகவெல்லாம்கூடத் தெரியுமா அவனுக்கு...?''

''எங்கேயும் போகமாட்டான். இந்தப் பிளாட்டில் எத்தனைப் பசங்கள் இருக்கிறார்கள்...யாருடனும் விளையாட மாட்டான். இங்கே இந்த அறைக்குள்ளேயே அடைந்து கிடப்பான். கேட்டால் 'எனக்குப் பிடிக்கலை'ன்னு பதில் சொல்லுவான்...''

''அவனைப் பற்றிப் பேசணும்னுதான் நான் முக்கியமா இன்னிக்கு வீட்டிற்கு வந்தேன் ரஞ்சனி...''

''பேசலாம், நானும் இப்படி வாரிடமாவது பேசமாட்டோமான்னுதான் காத்துக்கிட்டிருக்கேன். பேசறதுக்கு முன்னால் சாப்பிடறீங்களா...? இன்னிக்குத்தான் கொஞ்சம் நிதானமாக சமைக்க நேரம் கிடைச்சிருக்கு...''

''நிதானமா என்ன சமைச்சிருப்பே...? வைஷ் சாப்பாடுதானே...?''

''ஆமாம் நாங்க கத்த சைவம் முட்டைகூட சேர்த்துக் கொள்வதில்லை...''

''அப்படியா...? பிராமணா வருப்பா...?''

''ம்ஹூம், சைவப் பிள்ளையார்...''

''தான் பிராமணர்கள் என்றுதான் நினைத்தேன். சாப்பாடு சேனாம் ரஞ்சனி. சாப்பிட வீட்டுக்குப் போகிறேன். இன்னைக்கு எங்க வீட்டில் ஸ்பெஷல் ஐயிட்டங்கள் எல்லாம் இருக்கும். மிஸ் பண்ண இஷ்டமில்லை...''

ரஞ்சனி மனம் விட்டுச் சிரித்தாள். வெளிப்படையான அந்தப் பேச்சு அவளுக்குப் பிடித்திருந்தது. வில்லி

சாமுவேலை அதைவிடப் பிடித்துப் போக, ''அப்படியானால் காபி கலந்து கொண்டு வரட்டுமா...?'' என்று கேட்டாள். ''உனக்கும் சேர்த்து கலந்து கொண்டு வா...'' என்றவள் வாசற்கதவைத் தாழிட்டுக் கொண்டு ரஞ்சனியின் பின்னாலே சமையலறைக்குப் போனாள். பூஜை மாடத்தில் சின்னதாய் பொட்டிட்டு வைக்கப்பட்டிருந்த புகைப்படத்தைப் பார்த்து ''இவர்தான் ஸ்ரீராமின் அப்பாவா...'' என்று கேட்டாள்.

''ஆமாம்...''

''ரொம்ப நன்றாக இருக்கிறார்...''

''நேரில் இன்னும் நல்லா இருப்பார்...''

''அப்படியா...?'' என்ற வில்லி ஒரு விளாடி தயக்கத்திற்குப் பின் கேட்டாள்.

''எப்போ செத்துப் போனார் ரஞ்சனி...?''

''ஒன்றரை வருஷம் ஆச்சு...காலையில் வழக்கப்படி ஸ்கூட்டரில் ஆபீசுக்குக் கிளம்பினவர் அடுத்த ஒரு மணி நேரத்தில் மூட்டையாய் அரசாங்க ஆஸ்பத்திரியில் சாவுக் கிடங்கில் வைக்கப்பட்டிருந்தார். அவருடைய மாஸேஜர் வந்து அன்று சாயந்தரம் அந்த மூட்டையை வாங்கிக் கொண்டு வந்து...வில்லி...வில்லி...அத்தனைக் கந்தலான உடம்பில் முகம் மட்டும் அப்படியே, புன்சிரிப்பாகச் சிரிக்கிற மாதிரி, காலையில் ஆபீசுக்குக் கிளம்புமுன் ஸ்ரீராமிற்கும், எனக்கும் முத்தமிட்டுவிட்டுப் புறப்பட்ட அந்தக் களையோடு...ஸ்ரீராம் அந்த முகத்தோடு தன் முகத்தைச் சேர்த்துக் கதறினான் பாருங்கள்...ஒரு வாரம் அதன்பின் காய்ச்சலில் படுத்துவிட்டான். அன்றிலிருந்து இன்றுவரை அவன் அந்த அதிர்ச்சியிலிருந்து மீளவே இல்லை என்பது அன்று நான் உங்களை சந்திக்க ஸ்கூலுக்கு வந்தபோதுதான் தெரிந்தது. அதுவரை 'இவன் என் இப்படி இருக்கிறான், எல்லோரையும் விட்டு ஒதுங்கிப் போய் தனியாக நிற்கிறான், யாருடனும் பேச மாட்டேன் என்கிறான்... உடம்பாலும் ஒடுங்கிப் போகி

3 1 MAR 2004

றான், என்று எனக்குள் பட்ட கவலைக்கு அன்றுதான் பதில் கிடைத்தது. அப்பா இல்லாத ஏக்கம் அவனை அலைக்கழிக்கிறது. மற்ற குழந்தைகள் அப்பா என்கிற வார்த்தையைச் சொல்கிறபோதே இவன் உள்ளுக்குள் கருண்டு விடுகிறான். தான் தனியாக விடப்பட்டதாக உணருகிறான். பாதுகாப்பற்றவனாகத் தளிக்கிறான். அந்த அன்பிற்கும் பாசத்திற்கும் ஏங்குகிறான். அத்தனை உணர்வுகளையும் உள்ளுக்குள்ளேயே வைத்துக்கொண்டு வேதனைப்படுகிறான். அவஸ்தைப்படுகிறான். இந்த அவஸ்தையையும், வேதனையையும் எப்படிக் குறைப்பது என்று எனக்குத் தெரியவில்லை. ஒருவழியும் பிடிபடவில்லை. பெண் குழந்தையானால் என்னிடம் ஒட்டிக் கொண்டுவிடும். என் அருகாமையில் திருப்திப்பட்டுவிடும். ஆனால் அவனால் அது முடியவில்லை. தாயின் அன்பை விடத் தகப்பனாரின் அன்பே இவனுக்குத் தேவையாக இருக்கிறது. இதற்கு நான் என்ன செய்வேன் வில்லி...? எப்படி இந்தப் பிரச்சினையை சமாளிப்பேன்...?''

ரஞ்சனி காபி தம்ளரை மேஜை மீது வைத்து விட்டுக் குமுறிக் குமுறி அழுதபோது வில்லி பிரமித்துப் போனாள். எதைப் பற்றிப் பேச வேண்டுமென்று வந்தாளோ, அதையே ரஞ்சனி பேசியது இவளுக்கு ஆச்சரியமாகவும், அதே சமயம் அவளது நிலையைக் கண்டு அநீத வருத்தமும் ஏற்பட்டது. பிரச்சினை என்ன என்பதை அவள் புரிந்து கொண்டிருப்பதில் ஒரு நிம்மதியும் வந்தது. காரணம் புரிகிறபோது காரியத்தில் இறங்குவது சற்று கலபமாக இருக்கும். இடம் இதுதான் என்கிற விலாச அட்டை கையில் இருக்கிற பட்சத்தில் எவ்வளவு தூரமானாலும் விசாரித்துக் கொண்டு போய்ச் சேர்ந்து விடலாம், விலாச அட்டையே இல்லாது போனால்தான் கஷ்டம்...

வில்லி ஒரு ஆழமான பெருமூச்சுடன் மடியில் ...ய்தைப் புதைத்துக்கொண்டு அழும் ரஞ்சனியின் ஆன்

வாஞ்சையாகத் தடவிவிட்டான். பின்னலிட்டு பின் கழுத்தடியில் முடியப்பட்டிருந்த கூந்தலை வருடினான்.

"அழாதே சஞ்சலி! அழுவது வடிகாலாக இருக்கும் என்றாலும் அழுகை தம்மை சோளைபோக்கிவிடும். தன் லட்சியத்தையும் குறைத்துவிடும். போராடுகிற வலிமையை உறிஞ்சிக் கொண்டுவிடும். பிரச்சினையை பூதாகாரப் படுத்திவிடும். அதனால் நீ அழக்கூடாது. எழுந்திரு சஞ்சலி. முகத்தைக் கழுவிக் கொண்டு வா. பின்பு இதைப் பற்றி பேசலாம். நான் எதைப் பேச வேண்டுமென்று இங்கே வந்தேனோ அதைப் புரிந்துகொண்டு நீயே பேச ஆரம்பித்தது என் வேலையை குறைத்துவிட்டது எப்படி ஆரம்பிக்கலாம் என்று தவித்துக் கொண்டிருந்த என் தயக்கத்தை உன் பேச்சு போக்கிவிட்டது. இந்தப் பிரச்சினைக்கு இப்படி உணர்ச்சிபூர்வமாக வழி தேடுவதைவிட அறிவுபூர்வமாகச் சிந்தித்துச் செயல்படுவது நல்லது. ம்...எழுந்திரு சஞ்சலி. முகத்தைக் கழுவிக் கொண்டு வா. இந்தக் காபியைக் குடி. பண்ணித் தருகிறேன். குடித்துவிட்டு முன் அறையில் போய் உட்கார்ந்து பேசலாம். ம் எழுந்திரு..."

அவளை எழுப்பி அதற்பரிவுடன் அடுப்பை எரியவிட்டு காபியைக் குடிக்கச் செய்து முன் அறைக்குக் கொண்டு வந்தான். தரையில் உட்கார்ந்து பேச வசதியாகக் கூடை நார கூலியை நகர்த்தி முகாகத் தரையிட்டு சுவரில் முதுகைச் சரித்துக்கொண்டு உட்கார்ந்தான். அமைதியாக யோசித்த பொது சடுதியில் பொறி தட்டிய மாதிரி மனதிற்குள் ஒரு முடிவு பளிச்சிட்டது. இன்னும் ஆழமாக யோசிக்க— அதுதான் சரியான வழியாகப்பட்டது. ஆனால் சஞ்சலி எற்றுக்கொள்ள வேண்டுமே என்று தோன்றிற்று.

சஞ்சலி பரக்கச் சற்று நாகரிகமானவளாகப் பட்டா லும் உள்ளுக்குள் இளமையும் கட்டுப் பெட்டிதான். பெண் 'இவன் எதைப் பேசுகிறான்' என்று உணர்ந்து அடைத்து ஒதுங்கிப் போகாத இடங்களில் அடங்கிப் போனவள். இல்லாவிட்டால்

விட்டால் இத்தனை இளமைக்கும், அழகிற்கும், முப்பத்தி இரண்டே வயதிருக்கும் யாரால் இப்படி நிற்க முடியும்...? கால் முட்டியைத் தொடுகிற கரிய கூந்தலைத் தூக்கி மட்டை உரிக்காத தேங்காய் அளவிற்குக் கழுத்தடியில் முடிந்து, பளபளவென்று மின்னுகிற நெற்றியில் விழுகி விட்டு, நளினமாய் அப்பாலிற்று எங்குகிற பையனுடன் பாலைவன வாழ்க்கை வாழ்ந்துகொண்டு...

'நோ. இதை அனுமதிக்கக்கூடாது. எப்போது அவளைத் தன்னையராக, சிநேகிதியாக எற்றுக்கொண் டோமோ அதற்குரிய கடமையைச் செய்தாக வேண்டும். வெறும் கடமையாக மட்டுமின்றி ஆசையுடன் செய்ய வேண்டும். அன்பாகப் பிரியமாகச் செய்ய வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக சஞ்சலியிடம் பொறுமையாக நிதானமாகப்பேசி அவளிடம் தன் எண்ணத்தைத் தெரியப் படுத்த வேண்டும். தெரியப்படுத்துவதோடு மட்டுமில் லாமல் எற்றுக்கொள்ளச் செய்யவும் வேண்டும்...!

மீண்டும் தன் முடிவில் திடமானான். தீர்க்கமானான். எந்தக் காரணத்திற்காகவும் அதைவிட்டு விலகக்கூடாது என்பதில் பிடிவாதமானான்... தன்னால சஞ்சலிக்கும், ஸ்ரீராமிற்கும், எதாவது நல்லது செய்ய முடியுமானால் அது இதுவாகத்தான் இருக்கும் !

அந்த முடிவிற்குப் பின்னர் சஞ்சலி வந்ததும் எப்படிப் பேச வேண்டும், எங்கு ஆரம்பிக்க வேண்டும் என்பதையும் தீர்மானித்துக் கொண்டான் மீண்டானாலேயே. சஞ்சலி முகம் கழுவித் துடைத்து பளிச்சென்று வந்ததும் பேச ஆரம்பமானான். மேகத்துக்குள்ளிருந்து வெளிப்பட்ட சந்திரனாக — சற்றுமுன் காணப்பட்ட அழுகையும், சோகமும் மாறிய லேசான புன்சிரிப்புடன் வந்து மீண்டி சாறுவேலின் பக்கத்தில் உட்கார்ந்து அவளது கையைப் பற்றிக்கொண்டு, "ஐயம் ஸாரி மீண்டி... மனதில் அடைத்துக் கொண்டிருந்த அத்தனையையும் ஆன

கிடைத்தீர்கள் என்று கொட்டித் தீர்த்து விட்டேன் இல்லை...?'' என்றான் குழந்தையாகச் சிரித்துக் கொண்டே...

வில்வி அவன் முகத்தை ஒரு விநாடி கூர்மையாகப் பார்த்தாள். பின்,

''அதற்காக வருத்தப்படுகிறாயா ரஞ்சனி...? என் இவன் கிட்டே சொன்னோம்னு கஷ்டமாக இருக்கா...?''

''சீச்சி...! என்ன அப்படிப் பேசறீங்க... உங்களை நான் அந்நியமா நினைக்கவே இல்லையே...''

''நிஜமாகத்தானே சொல்றே...?''

''சத்தியமாகச் சொல்றேன்...''

''நான் எது சொன்னாலும் அது உன் நன்மைக்காகத் தான இருக்கும்னு நம்பறியா...?''

''நிச்சயமாக... நம்பறேன்...''

''என்னடா இவ, நேற்றுப் பார்த்துவிட்டு இன்னைக்கு விட்டுக்கு வந்து நமக்கு அட்வைஸ் சொல்கிறாளேன்னு தப்பாக நினைப்பாளா...?''

''ஐயோ... திரும்பத் திரும்பக் கேட்காதீங்க. என் மனசு கஷ்டப்படும். எனக்கு அம்மா இல்லை, அப்பா இல்லை. கூடப் பிறந்தவங்க இல்லை. அவரை நான் காதலிச்சு ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிட்ட உடனே நான் சொத்தில்லைன்னு உதறி விட்டுட்டாங்க. நான் இப்படி இந்த நிலைமையில் திரும்பி வந்தபின்பும் என்னோடு பேசக்கூட இல்லை. என்னைத் திரும்பிப் பார்க்கவில்லை. நான் ஒருத்தி இருக்கிற நினைப்பே இல்லை. சுத்தமா என்னைத் தலை முழுகிட்டாங்க. அதனால உங்களைத் நான் அம்மாவாக, அக்காவாக, சினேகிதியாக நினைச்சுக் கிட்டிருக்கேன். அன்னிக்கு உங்களை ஸ்கூலில் பார்த்த போதே, என்ன காரணம்னு தெரியாமல் எனக்குப் பிடித் திருந்தது. இன்று நீங்க என் மனசை மிகமிக நெருங்கி வந்துட்டீங்க. அதனால் இப்படியெல்லாம் கேட்காமல்

எந்தப் பிடிவாதமும் இல்லாமல் என்ன சொல்லணுமோ, அதைப் பளிச்சென்று தெரிவாகச் சொல்லிடுங்க...''

''சொல்றேன்...'' என்று மீண்டும் தலையில் விரல் யோசிக்க, ரஞ்சனி அவசரப்படுத்தினாள்.

''ம்... சொல்லுங்க... எதுவானாலும் தயங்காமல் சொல்லுங்க...?''

''நான் ஏன் தயங்கறேன் தெரியுமா ரஞ்சனி...? சொல்றபடி நீ செய்யணுமே...?''

''நீங்கச் சொன்னால் அது நியாயமானதாகத்தான் இருக்கும். நியாயமான எதையும் செய்ய நான் தயங்க மாட்டேனே...?''

''அது சரி. நியாயமில்லாத எதையும் நான் சொல்ல மாட்டேன்னு நீ நம்பணுமே...''

''நம்பறேன். சொல்லுங்க...''

''அப்படியானால் நீ திரும்ப கல்யாணம் பண்ணிக் கணும்...''

''என்ன...? என்ன...?'' — ரஞ்சனி அதிர்ந்து அவனை நிமிர்ந்து பார்த்தாள்...

7

''என்ன அப்படிப் பார்க்கிறாய் ரஞ்சனி...? பார்த்தியா, கேட்டதும் நான் பேசினது நியாயமில்லாததுன்னு தோணிடுச்சா? இதற்குத்தான் சொல்றதுக்கு முன்னால தாறுதாம் கேட்டேன். இதைப்பற்றி நீ யோசிக்காததால், முதல் முறையாகக் கேட்பதால் அதிர்ச்சியாக இருக்கும். உட்கார்ந்து நிதானமாக யோசித்தால் உண்மை புரியும். நான் சொன்னது நல்லதற்குத்தான் என்பது தெரியும்.

இதுகூட உனக்காக இல்லை. அந்தப் பையனுக்காக, 'அப்பா, அப்பா' என்று அவன் மனதிற்குள் கதறுகிற கதறலுக்காக, உருகுகிற உருகலுக்காக, அவனுக்காக...''

அதைக்கேட்டு ரஞ்சனி கோபப்படலாம்; ஆத்திரத்தில் கத்தலாம் என்று எதிர்பார்த்த வில்லிசாமுவேலை ஏமாற்றி விட்டாள் ரஞ்சனி. அதற்கு மாறாக லேசான புன்னகையோடு அவளை நிமிர்ந்து பார்த்தாள்.

''ஏன் வில்லி... சில பசுமாட்டிற்குக் கன்றுக்குட்டி செத்துப் போய்விட்டால், அந்தக் கன்றுக்குட்டிக்குள் வைக்கோல் அடைத்துக் கொண்டுவந்து பசுமாட்டை ஏமாற்றுவதற்காக வைப்பார்களே... அந்த மாதிரி ஸ்ரீராமிற்கு ஒரு புது அப்பாவைத் தேடச் சொல்கிறீர்களா...?''

ஒரு விளாடி முதுகுத்தண்டு உதற சிலிர்த்துப் போனாள் வில்லிசாமுவேல். அப்பா...!

''என்ன பதில்...! சாதாரண ஓர் உதாரணத்தில் இத்தனை அழுத்தமா...! அடேயப்பா பார்க்க சாதுவாகத் தெரிகிற இந்தப் பெண் எப்படிப் பேசுகிறாள்...? ஆனால் வாழ்க்கையின் நிஜத்தை சந்திக்கத் தயங்குகிறாளே...? நடைமுறைக்கு எது ஒத்துப்போகும் என்பது புரியாமல் பேசுகிறாளே...? இப்படியே வாழ்க்கை போய்விட முடியாது என்பதை புரிந்துகொள்ள மறுக்கிறாளே...? எப்படி இவளுக்குப் புரிய வைப்பது...? நடைமுறையைத் தெளிவாக்குவது?

யோசித்து நிதானமாகத் தொடங்கினாள் வில்லி. ''ரஞ்சனி நீ சொன்னது ரொம்பச் சரி உன் உதாரணம் பொருத்தமாக இருக்கிறது. ஆனால் வைக்கோல் அடைத்த கன்றுக்குட்டி அந்த நேரத்தில் பசுமாட்டிற்கு எத்தனை மனசாந்தியைத்தருகிறது என்பதை யோசித்துப் பார்த்தாயா—அது கன்றுக்குட்டியில்லை என்பதைப்புரிந்து கொண்டு இழப்பை ஏற்றுக்கொள்ள—பக்குவப்பட சில காலமாகலாம். அந்தக் காலத்திற்குமுன் அதற்கு அதிர்ச்

சியைத் தந்தால் அதன் மனநிலை என்னவாகும்...? அது பிரமை பிடித்து, பிரிவைத் தாங்க இயலாமல் சோகப்பட்டு போகாதா...? அந்த சோகத்தைத் தாங்க முடியாமல் தவித்துத் தவித்து செத்துப்போய்விடாதா...? மனிதர்களுக்காவது வாய் இருக்கிறது. யாரிடமாவது பேசி, மனதில் இருப்பதைக் கொட்டி, பாரத்தைக் குறைத்துக்கொண்டு விடுகிறார்கள்—சற்று முன் நீ கொட்டின மாதிரி. ஆனால் மாடு என்ன செய்யும்? உள்ளுக்குள் தானே குமுறும்? அந்தப் பசுமாட்டின் நிலையில்தான் இப்போது ஸ்ரீராம் இருக்கிறான். தன் உணர்ச்சிகளுக்கு வடிகால் இன்றித் தவிக்கிறான். யாரோடும் பகிர்ந்துகொள்ள வழியின்றித் தடுமாறுகிறான். சோகத்தை அடக்கி, அடக்கி சோர்ந்து போய் திற்கிறான். இப்படியே போனால் அவன் நிலை என்னவாகும் ரஞ்சனி...? மனநோயாளியாக மாறிப்போக மாட்டானா...? தனக்குப் பிரயோஜனமின்றி, யாருக்கும் உதவிப்படாதவனாகி விடமாட்டானா...? அப்படி ஆனால் கூட பரவாயில்லை ஒருவேளை இந்த ஏக்கம் வக்கிரமாகி, தீராத கோபமாக உருமாறி எல்லாரையும் பழிதீர்த்துக் கொள்கிற நிலைமைக்கு ஆளானால் என்னவாகும்...? அந்த அபாயத்தை நீ யோசித்துப்பார்த்தாயா...? எத்தனை கதைகளைப் படித்திருக்கிறாய்... எவ்வளவு சினிமா பார்த்திருக்கிறாய்...? அப்படியிருந்தும் இந்தக் கோணம் எப்படி உனக்குப் பிடிபடாமற் போயிற்று...? உன்னுடைய கோணமும், உன் உணர்வுகளும் மட்டும் தானே உனக்குப் புரிகிறது. அவற்றிற்கு மட்டும் தானே நீ மதிப்புக் கொடுக்கிறாய்? அந்தச் சின்ன பையனைப் பற்றி எப்போதாவது சிந்தித்திருக்கிறாயா...?''

வில்லியின் கேள்விகள் மனதில் அடிகளாக விழ ரஞ்சனி தாங்க முடியாதவளாகக் காதைப் பொத்திக் கொண்டாள். ''ஐயோ... என்ன வில்லி என்னை இப்படிக் குழப்பறீங்க...?''

''குழப்பலை ரஞ்சனி. குழப்பத்திலிருந்து உன்னை விடுவிக்கப் பார்க்கிறேன். அந்தப் பையனின் முகத்தில்

சிரிப்பைக் காண நினைக்கிறேன். அவன் வயதிலுள்ள மற்ற சிறுவர்களைப் போல் இவனும் இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். அந்த ஆசை தவறா? சொல்லு சஞ்சலி... எனக்கே இந்த ஆசை இருக்கிறபோது உனக்கு இருக்காதா...? அவனுக்காக நீ இந்தச் சின்ன விஷயத்தை விட்டுக்கொடுக்கக் கூடாதா?"

"சின்ன விஷயமா...' இதுவா சின்ன விஷயம்...?"

"இதை என்னமோ பெரிய விஷயமாக நினைத்து நீ என் தலட்டுக்கொண்டிருக்கிறாய்...? இதில் என்ன தப்பு என்று நினைக்கிறாய்...? விதவைகள் மறுமணம் செய்து கொள்வது நீ நினைக்கிற மாதிரி மாபெரும் குற்றமில்லை, சகஜமாக நடப்பதுதான். காந்திஜியே ஆதரித்ததுதான். இதுவே நீ செத்துப் போய் உன் கணவர் உயிரோடு இருப்பதாக வைத்துக்கொள், உன்னை மாதிரி கல்யாணம் பண்ணிக்கொள்ளாத விதமா காத்திருப்பார்...? ஒரு மாதமோ, இரண்டு மாதமோ சும்மாயிருந்து விட்டு முன்றாம் மாதம் இன்னொரு பெண்ணைக் கல்யாணம் பண்ணி வீட்டிற்குக் கூட்டி வந்திருப்பார். இந்த ஒன்றரை வருடங்களில் இன்னொரு குழந்தை பிறந்திருக்கும். அப்படி அவர் இருந்திருந்தால் அதுதான் நடைமுறைக்கு ஒத்துப் போகும். சாதாரண மனிதன் அப்படித்தான் செய்வான். அப்படிச் செய்தால் தான் சரியாக இருக்கும். இல்லாவிட்டால் எல்லாம் கெட்டுப் போகும்... இதோ இப்போது நீ கெடுத்துக்கொண்டு நிற்கிறாயே அப்படி...."

"கடவுளே...! எனக்கு ஒன்றும் புரியவில்லை— இப்படி ப்ரெய்ன் வாஷ் பண்ணாதீர்களேன்... தான் சொல்லப் நழுவிப் போகிறேன்—"

"குழம்பிக் குழம்பித்தான் தெளிவு கிடைக்கும். அந்த ஒரு குழந்தையை நம்பி—ஒரு குழந்தைக்காக உயிர் வாழ்வதாகச் சொல்லிக்கொள்கிற நீ, அவனுக்காக

இதைச் செய்ய மாட்டேன் என்று மறுப்பது எத்தனை சுயநலத்தைக் காட்டுகிறது..."

"ப்ளீஸ்... ப்ளீஸ், இதைச் சுயநலம் என்று சொல்லாதீர்கள்..."

"பின் இதற்கு என்ன பெயர் சொல்லேன்...."

"இது இது தான் அவர்மீது வைத்திருக்கிற அன்பு, அவரை மறக்கமுடியாமல் தவிக்கிற தவிப்பு..."

"சரி...உன் தவிப்பிற்காக அவன் தவிப்பை புறக்கணித்து ஒரு நல்ல பையனை, எதிர்காலப் பிரஜையை உருப்படாமல் போகச் செய்வது—அவனது வாழ்க்கையைக் குலைப்பது என்ன நியாயம்...?"

"ஐயோ, என்ன வீம்பு இப்படி அபாண்டமாகப் பழி சுமத்துகிறீர்கள். அவன் வாழ்க்கையை நான் குலைப்பேனா...? அவனுக்காகத்தானே நானே இருக்கிறேன்— இல்லாத ஒன்றிற்காக எங்குமாதவிட இருப்பதை வைத்துக்கொண்டு சந்தோஷப்படக்கூடாதா...?"

"அதுதான் மனித மனம். ஆண்டவனுடைய சிருஷ்டி ரகசியம். இல்லாததற்காக ஏங்குவதிலேதான் வாழ்வின் பிடிப்பே இருக்கிறது..."

"என்ன இப்படி ஒரு வாயர் மாதிரி மடக்கி மடக்கிப் பேசுகிறீர்கள்?"

"எப்படியாவது உன்னை வெற்றி கண்டு அந்தப் பிள்ளையை சந்தோஷப்படுத்தி, இந்த வீட்டில் சிரிப்புச் சத்தம் கேட்க வேண்டும் என்கிற ஆதங்கத்தில்தான் விபரம் பேசுகிறேன்."

"சரி, நீங்கள் வெற்றி கண்டு விடுகிறீர்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். அதனால் இந்த வீட்டில் ஆனந்தம் தவழும் என்று நினைக்கிறீர்களா...?"

"நிச்சயமாக..."

"வைக்கோல் அடைத்த கன்றுக்குட்டிக்கு மாட்டின் தாயன்பு புரியுமா...? புரிய முடியுமா...?"

"உன் கேள்வி எனக்கு விளங்குகிறது ரஞ்சனி. உலகத்து ஆண்கள் அத்தனை பேரையும் அயோக்கியர்கள் என்றா நினைக்கிறாய்? நல்ல மனம் கொண்டவர்கள். பரந்த மனப்பான்மை உடையவர்கள் இல்லை என்றா நினைக்கிறாய்...? நீ எஸ் சொல்லு. மற்ற அனைத்தையும் நான் கவனித்துக்கொள்கிறேன்..."

"பார்க்கலாம் வில்லி! தயவுசெய்து இதோடு விட்டுவிடுங்களேன். என் மனசு ரொம்பவும் குழம்பிப் போயிருக்கிறது. அதனால் இன்னொரு நாள் இதைப் பற்றிப் பேசலாமே...?

"ஓ.எஸ். ஒருநாள் என்ன, ஓராயிரம் நாட்கள் பேசலாம். அதற்குள் நீயும் நன்றாக யோசி...மீண்டும் நான் அடுத்த ஞாயிற்றுக்கிழமை வருகிறேன். என்ன, கிளம்பட்டுமா...?"

"ஒன்றும் சாப்பிடாமல் போகிறீர்களே...?"

"எங்கே போகிறேன். சாப்பாடு எங்கே போகிறது? ஒருவழியாகக் கல்யாண சாப்பாடாகவே சாப்பிட்டுக் கொண்டால் போயிற்று..."

தான் சொன்னதை திர்த்தாரணம் செய்து கொண்டு, ரஞ்சனியின் மனத்திற்குள் மெல்ல மெல்ல ஒரு விதையை ஊன்றித் தண்ணீர் ஊற்றிவிட்டு அது செடியாவதைக் காண்கிற ஆசையுடன் புறப்பட்டுப் போனாள் வில்லி—...

8

வில்லிசாமுவேல் கிளம்பிப் போனதும் நீண்ட நேரமாக அப்படியே உட்கார்ந்துகொண்டிருந்தாள் ரஞ்சனி. மனது மிகவும் குழம்பிப் போய் இருந்தது. சொல்ல இயலாத வேதனையில் தவித்தது. சட்டென்று ஒரு முடிவிற்கு வர

முடியாமல் சங்கடப்பட்டது. வில்லி சொன்ன மாதிரி ஸ்ரீராமை நினைத்துப் பார்க்காமல் தன் எண்ணங்களுக்கே மதிப்புக் கொடுக்கிற சுயநலவாதியாகிப் போனோமோ என்கிற சந்தேகத்தில் தவித்தது. இப்படியே போனால் அவன் மனநோயாளியாக மாறிப் போவானோ என்ற எண்ணத்தில் உள்வேதனை இன்னமும் அதிகமாயிற்று.

ஒரு விளாடி அவன் மனநோய் முற்றிய நிலையில் அப்பாக்கள் இருக்கிற சிறுவர்களைக் கத்தியால் குத்திக் கொல்கிற மாதிரி—இல்லாவிட்டால் ஒவ்வொரு அப்பாவாகக் கொன்று கொன்று வருகிற மாதிரியெல்லாம் கற்பனை செய்து பார்த்துக் கண்கலங்கினாள். அந்த அநீதக் கற்பனையின் கொடூரத்தில் பயந்து போனாள். உடல் வியர்த்து சட்டை தெப்பமாகி உடம்போடு ஒட்டிக் கொண்டது. சட்டென்று எழுந்துபோய் ஒரு டம்ளர் தண்ணீர் எடுத்துக் குடித்தாள். மனதில் ஏற்பட்ட பயமும், கலக்கமும் மெல்ல அடங்குவதாகத் தோன்ற ஸ்வாமி மாடத்தில் வைத்திருந்த கணவன் படத்திற்கு எதிரில் நின்று அந்த முகத்தையே பார்த்தாள். உள்ளுக்குள் அழுகை துறுத்திக்கொண்டு வந்தது. 'இவரோடு வாழ்ந்துவிட்டு இப்போது வேறு ஒருவரைக் கல்யாணம் பண்ணிக்கொள்வது எப்படி சாத்தியமாகும்... அந்த வாழ்க்கை மனதில் பசுமையாக இருக்கிறபோது இன்னொரு பசுமை எப்படி ஏற்பட முடியும்...? இது புரியாமல் பேசுகிறாளே வில்லி...'

மீண்டும் முன் அறையில் போய் உட்கார்ந்தபோது 'வில்லி தவறாகச் சொல்லவில்லை. ஸ்ரீராமிற்காக, அவனது நன்மைக்காகத்தான் சொல்லியிருக்கிறாள் என்பதில் ஓரளவு நிம்மதி ஏற்பட்டது. அந்த அளவிற்கு வீடு தேடி வந்து யார் சொல்லப் போகிறார்கள்...? எந்த ஆதாயமும் இன்றி யார் இவ்வளவு தூரம் முயற்சி எடுத்துக்கொள்வார்கள்...?'

ஆனாலும் ஸ்ரீராம் தேடுவது இதுதானா என்பது தெரியாமல் எந்த முடிவிற்கும் வரப் பிரியப்படாமல்,

இப்போது இதை இப்படியே விட்டுவிடலாம். அப்புறம் பார்த்துக் கொள்ளலாம். மனதில் தெளிவில்லாமல், எடுக்கப்படுகிற முடிவுகள் சரியாக இருக்காது என்பதால் எழுந்து மணி பார்த்தாள். ஒன்றிற்கு மேல் ஆகியிருக்க வயிற்றில் லேசாய் பசி எட்டிப் பார்த்தது! 'ஸ்ரீராம் ஏன் இன்னும் வரவில்லை? எங்கே போய்விட்டான்?...' எங்கேயும் போகமாட்டானே...''அதுவும் இத்தனை நேரம் போவதற்கு இடமில்லையே...' என்று எழுந்து கதவை சாத்திக் கொண்டு வெளியில் வந்தாள். அடுத்த கட்டிடத்தில் உமேஷின் வீட்டில் இருக்கிறானா என்று கேட்டாள்.

''அவன் இங்கே வரவே இல்லையே ஆன்ட்டி...''

கீழ் மாடி, அதற்கும் கீழ் கட்டிடம் என்று விசாரித்து எங்கும் இல்லை என்ற பதில் வந்ததும் வியர்த்துப் போனாள். வில்லி சொன்ன மாதிரி இப்படியேவிட்டால் நிச்சயம் இவன் அதிகம் பாதிக்கப்பட்டு விடுவான். மன நோயால் பீடிக்கப்படுவான். அப்படி விட்டுவிடக்கூடாது. என் உணர்வுகள் பெரிசில்லை. இனி அவனுடைய உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும். அவனை நம்பி, அவன் ஒருவனுக்காகவே வாழ்க்கை இருக்கிறது. அவனும் இல்லாது போனால் வாழவேண்டிய அவசியம் இல்லை... அதனால் அவன் சந்தோஷப்படுவான் என்கிற போது, அவனுக்கு நிம்மதி ஏற்படும் என்றால் எதைச் செய்தால்தான் என்ன?'

மனதிற்குள் சட்டென்று தீர்மானித்திற்கு வந்தவளாக வாசல் கேட் வரை ஓடிப்போய்ப் பார்த்தாள். பக்கத்து விடுகளில் கேட்டாள். உள்ளே வந்து ''ஸ்ரீராம், ஸ்ரீராம் என்று சத்திக் கூப்பிட்டாள். எதற்கும் பதில் வராது போகவே அடிவயிற்றைப் பந்தாக பயம் கவ்விக் கொள்ள 'பின் பக்கக் கிணற்றடியில் பார்க்கலாம்...' என்று நெஞ்சு பதற முடிவுபோது அங்கே மோட்டாருக்குப் பக்கத்து சிமெண்ட் பெஞ்சில் மாமரத்தடி நிழலில் படுத்து ஒரு சின்ன தாய்க்குட்டி மாதிரி தூங்கிக்கொண்டிருந்தான். அதைப் பார்க்க அவளுக்குப் பரிதாபமாக இருந்தது.

அனாதைச் சிறுவன் ரயில்வே பிளாட்பாரத்தில் படுத்துத் தூங்குகிற மாதிரி இவன் தூங்குவதாகப்பட கண்ணோரம் நீர் துளிர்த்தது. தன்னைத்தானே ஒரு கழிவிரக்கத்திலும், தாழ்வு மனப்பான்மையிலும் வாட்டிக்கொள்வது புரிய அருகில் போய் மெதுவாக அவனது தோளைத் தொட்டு எழுப்பினாள்.

''ஸ்ரீராம்... எழுந்திரப்பா... என்ன. இங்கே வந்து படுத்துத் தூங்கறே?''

திடுக்கிட்ட மாதிரி கண் விழித்து ஒரு வினாடி ஒன்றும் புரியாதவனாகத் தான் எங்கே இருக்கிறோம் என்று சுற்றிப் பார்த்தான். கிணற்றடியில் படுத்துத் தூங்கி விட்டது புரிய அம்மாவை எறிட்டான்.

''எம்ப்பா இங்கே வந்து தனியா இப்படிப் படுத்துத் தூங்கறே...? நீ பக்கத்துல யார் வீட்டுலயாவது விளை யாடிட்டு இருப்பேன்னு இல்ல நினைச்சேன்...''

''உமேஷ் வீட்டுக்குப் போனேம்மா... அவன் அவனோட அப்பா கிட்டே உட்கார்ந்து கதை கேட்டுட்டு இருந்தான், ராமாயணக் கதை. எனக்கு உடனே நம்ப அப்பா ஞாபகம் வந்துடுச்சு. அவர் கதை சொன்னது ஞாபகம் வந்து மனசு ரொம்ப கஷ்டமாயிடுச்சு. அதனாலதான் இங்கே வந்து உட்கார்ந்து தனியா கொஞ்ச நேரம் அழுதேன். அப்புறம் எப்படியோ தூங்கிப் போயிருக்கிறேன். ஏம்மா... நம்ம அப்பா இனிமேல் வரவே மாட்டாராம்மா...?''

அவன் அவனைச் சற்று நகரச் சொல்லி அதே சிமெண்ட் பெஞ்சில் உட்கார்ந்து அவன் தலையை வருடினாள். பின்னர் எதையோ முடிவு செய்த மாதிரி திடமான குரலில் பேச்சைத் தொடர்ந்தாள்.

''செத்துப் போனவர் எப்படிப்பா வருவார்...? வர மாட்டார்ப்பா...''

''அப்படின்னா நான் இப்படியேதான் இருக்கணுமாம்மா...? அப்பா இல்லாமலே இருக்கணுமா...?''

அவனது முகத்தை நிமிர்த்திக் கண்களுக்குள் பார்த்துக் கொண்டே கேட்டாள்—

"வேற என்ன செய்ய முடியும் ஸ்ரீராம்...?" செத்துப் போன மனிதரை எப்படி உயிரோடு கொண்டு வர முடியும்...?"

காம்பினாடி மிக ஆழமாக யோசித்தவன் அவளை ஒரு எதிர்பார்ப்புடன் நிமிர்ந்து கண்கள் பளபளக்கப் பார்த்தான்.

"ஏம்மா, என் கிளாஸில் ஒரு பையனுக்குக் கொஞ்ச நாள் முன்னாலே அவங்கம்மா செத்துப் போயிட்டாங்க. இப்போ அவங்க அப்பா இன்னொரு கல்யாணம் பண்ணிட்டிருக்காரு. அதனாலே புது அம்மா கிடைச்சிருக்காங்க. ரொம்ப அழகா தங்கமானவங்களா இருக்காங்களாம். நிறைய இவனை அவங்களே குளிப்பாட்டி விட்டு நாங்களாம். சாதம் கலந்து ஊட்டறாங்களாம். டைம் டேபிள் பார்த்து புஸ்தகம் எடுத்து வைக்கிறாங்களாம்... வாசல் வரை வந்து ரிக்ஷாவில் ஏற்றி அனுப்ப நாங்களாம்... அவன் ரொம்ப சந்தோஷமா சொல்றாம்மா... 'என்னோட முதல் அம்மாவை விட இந்தம்மா நல்லவங்கடா. என்னை அடிக்க மாட்டேன்றாங்க. திட்ட மாட்டேன்றாங்க'ன்னு சொல்றான். ஏம்மா அவனுக்கு அம்மா இல்லை. அம்மா செத்துப் போயிட்டா. அதனால் புது அம்மா கிடைச்சிருக்காங்க. அந்த மாதிரி எனக்கும் அப்பா இல்லையே, செத்துப் போயிட்டாரே, புது அப்பா நல்ல அப்பாவா கிடைக்கமாட்டாரா அம்மா...?"

அவனது கேள்வியில் அதிர்ந்து போனாள் ரஞ்சனி. சற்று முன் வில்லி பேரிலிட்டுப் போன அதையே இப்போது இவனும் எப்படிக் கேட்கிறான்...! இன்றைக்குப் பார்த்து கேட்க வேண்டுமென்ற இவனுக்கு எப்படித் தோன்றியது...? இது தெய்வ சங்கல்பமா...? அல்லது வில்லிக்கும், இவனுக்குமிடையில் டெலிபதி ஏதும் வேலை செய்கிறதா?

எதுவானாலும் இவன் தன் மனதிற்குள் புது அப்பாவை வரவேற்கத் தயாராகி விட்டான். ஏற்றுக் கொள்ள சித்தமாகி விட்டான். அந்த அப்பா உயிருடன் இனி திரும்பி வரப் போவதில்லை என்பது நிரூபணமான வுடன் தடைமுறை வாழ்க்கைக்கு வந்துவிட்டான். ஒரு கதவு மூடப்பட்டுவிட்டால் அடுத்த கதவு தானே திறக்கும் என்கிறார்களே...அதுபோல் இவன் மறுகதவு திறக்கப் படுவதை—அதன் மூலம் சிறுசிறுவென்று காற்று வீசப் படுவதை எதிர்நோக்கி நின்று கொண்டிருக்கிறான். கள்ளமில்லாத அந்த மனசு அதை ஏற்றுக்கொண்டுவிட்ட பின்பு தான் மறுப்பதில் அர்த்தமில்லை. விவேகமில்லை. எந்த நியாயமும் இல்லை. வில்லி சொன்ன மாதிரி அது சுயநல உணர்வாகிவிடும்.

நிச்சயமான ஒரு முடிவிற்கு வந்தவளாக ஸ்ரீராமைத் தன்னுடன் சேர்த்து அணைத்துக்கொண்டு குரல் கரகரக்கக் கேட்டாள்.

"என் ஸ்ரீராம், அப்படியானால் உனக்குப் புது அப்பா வேணும்னு தோணறதா...?"

"ஆமாம்மா..." என்று விசும்பத் தொடங்கினான் அவன்.

"ஷ்... அழாதே... என் அழற... நிச்சயமா வேணும்னு தானே தோணறது. அதுல ஒரு மாறுதலும் இல்லையே...?"

"ம்ஹூம். இல்லை..."

"புது அப்பா எப்படிக் கிடைப்பார் தெரியுமா...? உன் கிளாஸ் பையனுடைய அப்பா கல்யாணம் பண்ணி இன்னொரு அம்மாவைக் கூட்டிட்டு வந்த மாதிரி தானும் கல்யாணம் பண்ணிக்கணும். அப்போதான் கிடைப்பார்..."

"பண்ணிக்கம்மா..."

''பண்ணிக்கவா...அதுல உனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லையா...?''

''ம்ஹாம், இல்லவே இல்லை...''

''சரி, புது அப்பா நல்லவரா இருப்பார்னு என்ன நிச்சயம்...?''

''நல்லவராத்தாம்மா இருப்பார்...''

''எப்படிச் சொல்றே...?''

''என் கிளாஸ் பையனுடைய புது அம்மா நல்லவங்களாகத்தானே இருக்காங்க...''

வெகுளித்தனமாக பதில் வர ரஞ்சனி பேசாமல் இருந்தாள். வாழ்க்கை புரிகிற வயதில்லை அது. அடி மனஎண்ணங்கள் பிடிபடுகிற வயதில்லை. இரண்டாம் கல்யாணம் பண்ணிக் கொள்கிற ஆணுக்கும், பெண்ணிற்கும் நிறைய வித்தியாசம் உண்டு என்பதைச் சொல்லிப் புரிய வைக்க முடியாது. அதிலும் தன் விஷயத்தில் அது இன்னமும் வித்தியாசப்படும். முற்றிலும் ஸ்ரீராமை அனுசரித்து அவனது தேவைக்காக மட்டுமே ஏற்படப் போகிற பந்தம். அதைப் புரிந்துகொண்டு எந்த ஆண் சரி என்று தலையசைப்பான்? முதலில் ஒப்புக்கொண்டாலும் பின்னால் அதே மாதிரி நடப்பான் என்பது என்ன நிச்சயம்...?''

அவள் தனக்குள் தோன்றி மருட்டுகிற சந்தேகங்களை அடக்கிக்கொண்டு லேசாய் புன்னகை புரிந்தாள்.

''உன் கிளாஸ் பையனுடைய அம்மா நல்லவங்களா அமைந்தது அவனுடைய அதிர்ஷ்டம். அதே அதிர்ஷ்டம் உனக்கும் இருக்கணுமே...''

''இருக்கும்மா... கட்டாயமாக இருக்கும். நல்லவங்களுக்குக் கடவுள் நல்லதுதான் செய்வார். மாரல் இன்ஸ்ட்ரக்ஷன் கிளாஸ்லே லில்லி மிஸ் சொல்லிக் கொடுத்திருக்காங்க...''

''நல்லவங்கன்னு யாரைச் சொல்றே ஸ்ரீராம்...''

''ஏம்மா...உன்னை, என்னை, அப்புறம்...அப்புறம்... லில்லி மிஸ்ஸை...''

''அவங்க இதிலே எங்கிருந்து வந்தாங்க...?''

''போம்மா...எனக்கு அவங்களை ரொம்பப் பிடிக்கும். அவங்க கிட்டே சொன்னால் நல்ல அப்பாவாகத் தேடிக் கொடுப்பாங்க...''

''அப்படியா...இத்தனை நேரம் இருந்தாங்களே... நீ என் அவங்க கண்ணுலயே படலை...?''

''பயமா இருந்ததம்மா...''

''பின்னே கொஞ்சம் முன்னாலே ரொம்பப் பிடிக்கும்னு சொன்னியே...?''

''இப்போகூட சொல்றேன், அவங்களை எனக்குப் பிடிக்கும்மா... ஆனால் அது வேற, பயம் வேற இல்லியாம்மா...''

''சரி, நாளை சாயந்திரம் ஏழு மணி வாக்கில் லில்லி மிஸ்ஸை வீட்டுக்கு வரச் சொல்லு. முக்கியமான விஷயம் பேசணுமாம்னு சொல்லு... என்ன சொல்றியா...?''

''ஏம்மா புது அப்பாவைப் பற்றிச் சொல்லப் போறியா...?''

''நீ சொல்லுடான்னா... அனாவசியமா கேள்வி கேட்டுக்கிட்டு...எழுந்து வா. சாப்பிடப் போகலாம். பசிக்கலே உனக்கு...?''

''ரொம்பப் பசிக்கிறதும்மா...''

அவள் அவனது தோளில் கைபோட்டுத் தன்னுடன் சேர்த்து அணைத்து நடத்தி அழைத்துக்கொண்டு மாடிப்படி ஏறினாள்...

9

மறுநாள் மாலை லில்லிசாமுவேல் வந்தபோது மணி ஏழாகி விட்டது. இன்றைக்கும் மிஸ்கட் பாக்கெட் வாங்கிக் கொண்டு வந்திருந்தாள். அதை ஸ்ரீராமிடம் கொடுத்து நன்னோடு சேர்த்து அனைத்துக் கொண்டதும் அவன் வெட்கப்பட்டு நெளிய அவள் சொன்னாள்.

''இதப் பாரு ஸ்ரீராம்... ஸ்கூல்லதான் நான் டீச்சர். ஸ்கூலை விட்டு வெளியில் வந்ததால் பெரியம்மா. இனிமேல் வெளியில் என்னைப் பெரியம்மான்னு கூப்பிடு... என்ன...?''

''சரி மிஸ்—''

''மிஸ்லாம்... அப்படித்தான்...'' என்றவள், ''என்ன ரஞ்சனி, முக்கியமான விஷயம் பேசணும்னு வரச்சொன்னியாம். என்ன விஷயம்...?''

''முதல்ல காபி சாப்பிடுங்க.''

''காபியெல்லாம் கிடக்கட்டும். அப்புறம் சாப்பிட்டுக் கலாம்; இப்போ விஷயத்துக்கு வா...''

''ஒண்ணுமில்லே...'' என்று இழுத்த ரஞ்சனி, ''ஸ்ரீராமிற்குப் புது அப்பா வேணுமாம். அவன் கிளாஸ்ல எந்தப் பையனுடைய அப்பாவோ இரண்டாம் கல்யாணம் பண்ணி நல்ல அம்மாவா,புது அம்மாவா கூட்டிட்டு வந்திருக்காராமே அதே மாதிரி இவனுக்கும் நல்ல அப்பாவா புது அப்பா வேணுமாம்...''

லில்லியின் முகம் நூறுவாட்ஸ் பல்பை ஏற்றின மாதிரி பளிச்சிட்டது.

''ஸ்வீட் குட்! தட்ஸ் வெரிகுட்... ஸ்ரீராமின் ஆசை அதுவாக இருந்தால் நிறைவேற்றி வச்சுடலாம், என்ன ஸ்ரீராம்...?''

''சரி மிஸ்—''

''பார்த்தியா மறுபடியும் மிஸ்ஸுனு கூப்பிடறியே.?''

''இல்லே இல்லே ஸாரி பெரியம்மா...?''

''ஓ.கே. பழகக் கொஞ்ச நாள் ஆகணும் இல்லியா...? ஸ்ரீராம் உன்னுடைய ஆசைப்படி நீயும், நானும் சேர்ந்து புது அப்பாவைத் தேடுவோம். என்ன...!''

''சரி—பெரியம்மா...''

அதைக் கேட்டுக் கொண்டிருந்த ரஞ்சனி தன் சந்தேகத்தை வெளியிட்டாள்.

''புது அப்பா சரி. தல்ல அப்பாவா. இல்லையான்னு எப்படிக் கண்டுபிடிக்கிறது...?''

''தல்லவர் என்றால் நீ எதைக் குறிப்பிடறே ரஞ்சனி...?''

''தல்லவர்னால்... தல்லவர்னால்... அவர் குடிக்காத வராக இருக்கணும். ரேஸ், சூதாட்டம் போன்ற கெட்ட பழக்கமெல்லாம் இருக்கக்கூடாது. எங்களை உட்கார வச்சு சாப்பாடு போடுபவராக இருக்கணும், நான் என் வேலையை விட்டுவிடுவேன்—அதற்கு சம்மதிக்கணும்!''

''நோ. நோ. இதற்கு நானே சம்மதிக்க மாட்டேன்'' என்றாள் லில்லி.

''எந்தப் பெண்ணுக்கும் கல சம்பாத்தியம் அவசியம் ரஞ்சனி. அவ கால்லே அவளுக்கு நிற்கத் தெரியணும். எதற்கும் ஆணைச் சாராமல் இருக்கப் பழகணும், நான் எதற்கு வேலைக்கு வரேன்னு நினைக்கறே? அந்தப் பொருளாதாரப் பாதுகாப்பிற்காகவும், மனசுக்கு வடி

காலாக இருக்கிறது என்பதற்காகவும்தான் வருகிறேன். நான் மட்டுமில்லை, எல்லாப் பெண்களுமே அதற்குத் தான் வருகிறார்கள். அதனால் அந்தப் பாதுகாப்பில் இருக்கிற உன்னை அதை விட்டுவிடச் சொல்ல எனக்கு சம்மதமே கிடைக்காது. சரி, அடுத்த பாயிண்ட்...?''

''கடைசியாக இதற்கு நான் ஒப்புக் கொள்வதற்குக் காரணமே ஸ்ரீராம்தான். அதனால அவனிடம், அன்பாகப் பாசமாகப் பிரியமாக, தந்தை ஸ்தானத்தை விட்டு தழுவாமல் நடந்துகொள்ள வேண்டும்...''

''இவ்வளவுதானே—? done. இனி நீ இந்தக் கவலையை எங்களிடம் விட்டுவிட்டு உன் வேலையைக் கவனி, நிம்மதியாக இருக்கிற வழியைப் பார். நானும், ஸ்ரீராமும் எல்லாவற்றையும் செய்கிறோம். நான் சொல்கிற வரை இதில் நீ தலையிடக்கூடாது. என்ன...?''

''சரி.''

''இப்போது போய் காப்பி கொண்டு வா!''

ரஞ்சனி உள்ளே போனதும் வில்லி ஸ்ரீராமிடம் பேசினாள். மனம் விட்டு வெளிப்படையாகச் சில விஷயங்களைச் சொன்னாள். பின் மிக பிரபலமான ஆங்கில தினசரி ஒன்றில் விளம்பரம் கொடுப்பது என்று முடிவு செய்தனர். அந்த விளம்பரம் இவர்களின் மனத்தையும், எண்ணங்களையும் பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும். சிறுவனின் ஆதங்கம் வெளிப்பட வேண்டும். அதனால் சாதாரண விளம்பரமாக இல்லாமல் ஸ்ரீராமே கொடுத்த தாக அமைய வேண்டும் என்பதற்காக அவளே அவனைக் காகிதமும், பேனாவும் கொண்டுவரச் சொல்லி அப்போதே எழுதத் துவங்கினாள். நாலைந்து காகிதங்களை வீணாக்கிய பின் எழுதியதை ஸ்ரீராமிற்கும், ரஞ்சனிக்கும் படித்துக் காட்டினாள்.

அப்பா தேவை

கடந்த ஆண்டு என்னுடைய அப்பா ஒரு சாலை விபத்தில் செத்துப் போய்விட்டார். அதிலிருந்து எனக்கு ஏதோ பிரமை பிடித்த உணர்வு இருக்கிறது— மனசு வெறுமையாகக் கிடக்கிறது. அந்தப் பிரமை விலகவும், சந்தோஷம் ஏற்படவும் எனக்கு அப்பாவாக இருக்க—அழகான, இளமை மாறாத முப்பத்திரண்டு வயதான என் அம்மாவைக் கல்யாணம் பண்ணிக் கொள்கிற நல்ல அப்பா தேவை. புது அப்பா என்னிடம் அன்பாகவும், பிரியமாகவும் பாசத்துடனும் இருக்க வேண்டும். அம்மாவை நேசிக்க வேண்டும்.

இதற்கு விருப்பப்படுகிற தல்ல இதயம் படைத்த நல்லவர்கள் விண்ணப்பிக்க வேண்டிய முகவரி பத்திரிகைப் பெயருடன் தபால் பெட்டி எண் 6030. சென்னை—2.

அந்த விளம்பரத்தில் முழு திருப்தியடைந்த வில்லி வருகிற ஞாயிற்றுக்கிழமை எல்லார் கண்களிலும் படுகிற இடத்தில் வெளிவர வேண்டுமென்ற அதே தினசரியில் வேலை செய்கிற தன் கணவனின் நண்பர் மூலம் வெளியிட்டாள்.

ஞாயிற்றுக்கிழமை செய்தித்தாளில் வந்த அந்த விளம்பரத்தை ரஞ்சனி படபடக்கிற மனத்துடன் படித்த அதே நேரத்தில்—

10

அண்ணாநகர் கோடியில் ஒரு சின்ன அழகான வீட்டு முன் வராந்தாவில் கூடை நாற்காலியில் உட்கார்ந்து ஞாயிற்றுக்கிழமையின் நிதானத்துடனும் சோம்பேறித் தனத்துடனும் பத்தி செய்தித்தாளை மேலோட்டமாகப் பார்த்துக்கொண்டிருந்த பாஸ்கரை அந்த விளம்பரம் கவர்ந்தது. ஒரு முறைக்கு இரு முறையாகப் படித்தான். அதில் சுவாரஸ்யம் மட்டுமின்றி மனதின் அடித்தளத்தில் லேசாய் ஒரு துக்கமும், ஆறிப்போன ரணத்தின் வடுவைத் தொடுகிறபோது ஏற்படுகிற வலியும் தோன்றின.

'அப்பா தேவை, அப்பா தேவை' என்பதைத் தனக்குள் சொல்லிப் பார்த்துக் கொண்டான் இப்படி விண்ணப்பித்திருக்கிற பையனின் தைரியத்தை வியந்து கொண்டான். அம்மாவிற்கே வயது முப்பத்திரண்டு என்று போட்டிருக்கிறபோது பையனுக்கு வயது பத்து இருக்கலாம் என்பதைக் கணித்துக் கொண்டான். அந்த வயதில் நன்னாலும் இப்படி விளம்பரப்படுத்தியிருக்க முடியுமானால் நிச்சயம் நான் தனித்து விடப்பட்டிருக்க மாட்டோம். அப்பாவிடம் பட்ட அடி உதைகள் போதா தென்று, சித்தியிடம் வேறு அடிபட்டிருக்க மாட்டோம். அவ்வளவு ரணப்பட்டுப் போயிருக்க வேண்டாம். ஊரை விட்டு ஓடிப்போய், பம்பாய் தெருக்களில் சுற்றி, ஓட்டல் களில் வேலை பார்த்து, சாப்பாட்டு பிரச்சினை, இடப் பிரச்சினையை சமாளித்து, அத்தனைக்கிடையிலும் படிப்பை விடாமல் தொடர்ந்து, இந்த முப்பத்தாறு வயதில் மூட்டை மூட்டையாக அனுபவங்களைத் தேடிக்கொண்டு...

இன்று—நல்ல வேலை, சொந்தமாய் இந்தச் சின்ன வீடு. அண்ணாநகரிலிருந்து மவுண்ட் ரோடு ஆபீஸிற்குப் போய் வர ஸ்கூட்டர், தானே சமைத்துச்சாப்பிடுகிற ரஸம் சாதம்...ஒரு நாள் ரஸம் வைத்தால் மறுநாள் சாம்பார்

ஏதாவது ஒரு காய். அல்லது சுட்ட அப்பளம். ஒரு குடும்பத்தை நடத்துவதற்குத் தேவையான சம்பளம்...

குடும்பம்தான் இல்லை. முப்பத்திஆறு வயதிலும் அவன் கல்யாணம் பண்ணிக்கொள்ளவில்லை. கல்யாணம் பண்ணிக்கொள்ளச் சொல்கிறவர்கள் இல்லை. அவசரப்படுத்துகிறவர்கள் இல்லை. ஆர்வமாய் விசாரிப் பவர்கள் இல்லை. அவனுக்கும் இதுவரை அந்த எண்ணம் ஏற்படவில்லை. அப்படியே கல்யாணம் பண்ணிக் கொண்டாலும் அன்பிற்கு எங்குகிற புனித நேயத் திற்கு ஆசைப்படுகிற ஒரு பெண்ணைத்தான் கல்யாணம் பண்ணிக்கொள்ள வேண்டுமென்றிருந்தான். அந்தப் பெண் விவாகரத்து பெற்றவளாகவோ, விதவை யாகவோ, அல்லது ஒரு விபத்தின் காரணமாக இடறின வளாகவோதான் இருக்க வேண்டும் என்கிற வைராக் கியம் ஏற்பட்டிருந்தது. அப்பா அம்மாவினால் போற்றி, போற்றி பாதுகாக்கப்பட்டு, கல்யாணம் செய்து கொடுக்கப்படுகிற பெண்ணிற்கு அன்பின் அழுத்தம் அத்தனை தேவையாக இருக்காது. இதுவும் ஒரு வகை அன்பு என்ற வகையில்தான் ஏற்றுக்கொள்வானே தவிர, இதுதான் அன்பு என்கிற பிடித்தம் தோன்றாது. ஆதாரம் என்கிற நிலை வராது.

ஒரு விதவையாக இருக்கிற பட்சத்தில் அவன் அன்பிற்கு ஏங்கியிருப்பாள். விவாகரத்து பெற்றிருந் தாலும் பாசத்திற்குத் தவிப்பவளாக இருப்பாள். ஏதாவது விபத்தின் காரணமாகத் தன்னை இழந்திருந்தால்— அவளை ஏற்றுக்கொள்ள எல்லோரும் தயங்குகிற கார ணத்தினால் அவளும் தாழ்வு மனப்பான்மையில் மனம் புழுங்கி நிஜ அன்பிற்கு அடிமையாகிப் போவாள்.

அதனால் இந்த மூவரில் யாராவது ஒரு [illegible] தேர்ந் தெடுத்து கல்யாணம் பண்ணிக்கொள்ள நினைத்தவ னுக்கு அந்த விளம்பரம் கண்ணில் பட்டு சிந்திக்க

வைத்தது. திருமண அபிப்ராயத்தை ஏற்படுத்தியது. முதலில் இதற்கு விண்ணப்பித்தால் என்ன என்றுதான் நினைத்தான்.

அப்புறம்தான் அந்தச் செய்தித்தாளில் வேலை செய்கிற தன் நண்பனின் ஞாபகம் வந்தது. அவனிடம் கேட்டால் தபால் பெட்டி எண்ணிற்கு பதிலாக இந்த விளம்பரம் கொடுத்த சிறுவனின் விலாசமே கிடைத்தாலும் கிடைக்கலாம். சாதாரணமாகத் தபால் பெட்டி எண் கொடுக்கப்படுகிற காரணமே விலாசம் தெரியக்கூடாது என்பதற்காகத்தான். அதனால் செய்தித்தாள் நிறுவனத்தில் வேலை செய்கிறவர்களுக்கே விலாசம் தெரிகிறதோ இல்லையோ...தெரிந்தாலும் கொடுப்பார்கள் என்பது நிச்சயமில்லை. வேறு யாரும் தரமாட்டார்கள். ஆனால் அந்த நண்பனிடம் காரணத்தைச் சொன்னால் தருவான். நிச்சயம் மறுக்க மாட்டான் என்கிற நம்பிக்கையில் அவன் எழுந்து குளித்து உடை மாற்றிக்கொண்டு புறப்பட்டான். அன்று ஞாயிற்றுக்கிழமை ஆனதால் அந்த நண்பனைப் போய் பார்க்க முடிவு செய்தான்.

அவன் வீடு ஆழ்வார்பேட்டையில் இருந்தது. அண்ணா நகரிலிருந்து ஆழ்வார்பேட்டை வந்து நண்பனின் வீட்டு வாசலில் ஸ்கூட்டரை நிறுத்திப் பூட்டி விட்டு உள்ளே போனான். அவனைப் பார்த்த அந்த நண்பன் ஆச்சரியமாகக் கண்களை விரித்தான்.

''என்ன பாஸ்கர் ஆச்சரியமாக இருக்கு. நீயா வந்திருக்கே...?''

''நானே தான்...'' என்று புன்சிரிப்பாகச் சிரித்தபடி சோபாவில் அவன் பக்கத்தில் உட்கார்ந்த பாஸ்கர் குரலைத் தழைத்துக் கொண்டு பேசத் துவங்கினான்.

''உன்கிட்டே ஒரு உதவியை எதிர்பார்த்து வந்திருக்கேன் அண்ணா.

''சொல்லு...என்ன செய்யணும்...?''

சொன்னான். சொல்லிவிட்டு கையோடு கொண்டு வந்திருந்த தினசரியில் அந்த விளம்பரத்தைக் காட்டி கேட்டான்.

''நீ அந்த தியூஸ்பேப்பரின் அட்வர்டைஸிங் செக்ஷனில் இருப்பதால் உனக்கு நிச்சயம் இந்த விலாசம் தெரிந்திருக்கும் என்று வந்திருக்கிறேன். இந்த விலாசம் தெரிந்தால் நேராகப் போய் பார்த்துவிட்டு வரலாமென்றிருக்கிறேன்...''

''அப்படியா...?'' என்று யோசித்தான் சிவா என்கிற சிவராமகிருஷ்ணன்.

''என்ன யோசனை சிவா...?''

''ஒண்ணுமில்லே... அப்படி விலாசம் கொடுக்ககூடாதேன்னு பார்க்கிறேன்...''

''கொடுக்கக்கூடாதுங்கறது எனக்கும் தெரியும் சிவா. ஆனால் இந்த மாதிரி சில அத்யாவசியத் தேவைக்கு அவசரத்திற்கு உதவலாம் இல்லையா...''

''அப்படி என்ன அவசரம் பாஸ்கர்? போஸ்ட் பாக்ஸ் நம்பர் என்னவோ இருக்கு. எழுதிப் போட்டால் பதில் வருகிறது.''

''அது வேணாம்னுதானே உன்னைக் கேட்கிறேன்... இதனால் உனக்கு ஏதாவது கஷ்டம்னா வேண்டாம் விட்டுவிடு...''

''கஷ்டம், கஷ்டமில்லை இரண்டும்தான். எதற்கும் நாளைக் காலை பதினோரு மணிக்கு மேல் ஆபீசுக்கு போன் பண்ணு. சொல்றேன்...''

மறுநாள் காலை சரியாகப் பதினோரு மணிக்கு போன் பண்ணினான். சிவராமகிருஷ்ணன் விலாசம் சொல்ல டைரியில் குறித்துக்கொண்டு உடனே பர்மிஷன் கேட்டுக்கொண்டு கிளம்பினான். வீட்டைக் கண்டுபிடித்து விலாசம் சரிதானா என்று சரிபார்த்துக்கொண்டு படியேறி

ஃப்ளாட் நம்பர் பார்த்து அழைப்புமணியை அழுத்தினான். பதில் வரவில்லை. மீண்டும் அழுத்தி, அழுத்தி...

பின் சட்டென்று பக்கத்து ஃபிளாட் மணியை அழுத்த அந்த அம்மாள் கதவை லேசாய்த் திறந்து முகத்தை மட்டும் நீட்டி ''யாரு...?'' என்று சந்தேகமாகப் பார்த்தாள்...?

''நீங்க யாரு...?''

''அவங்களைப் பார்க்க வந்தேன்...''

''அம்மாவையா, பிள்ளையையா...?''

''—இரண்டு பேரையும்தான்...''

''ஏதாவது சொந்தமா...?''

''ம்—? அப்படித்தான் வச்சுக்கோங்களேன்...''

அந்த அம்மாளின் முகம் சுறுங்கிற்று. 'வேறு என்ன...' என்கிற மாதிரி பார்த்தாள்.

அதைப் புரிந்துகொண்டு பாஸ்கர் மீண்டும் கேட்டான்.

''அவங்க யாரும் இல்லையா...?''

''பையன் ஸ்கூல விட்டதும் தாலாட மணிக்கெல்லாம் வருவான். ரஞ்சனி டியூஷனெல்லாம் முடிந்து வர ஏழு மணியாகும்...''

''ஏழா...?'' என்றவன் சிறிது நிதானித்து, பின்—

''அப்படின்னா ஏழு மணிக்கு மேல் வரேன்.'' என்றான்.

''உங்கப்பேரைச் சொன்னால் தெரியப்படுத்தறேன்...''

''வேண்டாம் நானே நேரில் வரேன்...''

பின்னால் கதவு அறைந்து மூடப்பட பாஸ்கர் நிதானமாகப் படியிறங்கினான். ரஞ்சனி என்ற பெயர் உதட்டில் உச்சரிக்கப்பட்டு மனதில் இறங்கப் பதில அவன் ஸ்கூட்டரை உதைத்துக் கிளம்பினான்...

அன்று சற்று சீக்கிரம் வந்துவிட்டதால் காபி கலந்து ஸ்ரீராமிற்குக் கொடுத்துத் தானும் குடித்துவிட்டு கேட்டாள்.

''ராத்திரிக்கு உனக்கு என்ன வேணும் ஸ்ரீராம்...? டிபனா, சாதமா...?''

''ஏதோ ஒன்று...''—அவன் அதே அசுவாரஸ்யத்துடன் பதில் சொல்ல ரஞ்சனி விடாமல் கேட்டாள்.

''எது வேணும்னு சொல்லு ஸ்ரீராம். டிபன் வேணும்னால் தோசை மாவு இருக்கு, வார்த்துத் தரேன். இல்லை, சாதம் சாப்பிடறேன்னால் குக்கர் வைக்கறேன்...''

''சரி, தோசையே போதும்...''

''அப்படின்னால் நான் குளிச்சிட்டு வந்து வார்த்துத் தரேன், என்ன...?''

''மெதுவா எட்டு மணிக்கு மேல் பண்ணு போதும். இப்போ எனக்குப் பசிக்கலை...''

அதற்குப்பின் அவள் நிதானமாகக் குளித்துவிட்டு வந்தாள். காலை அவசரத்திலும், பரபரப்பிலும் சோப்பு தேய்க்கக்கூட நேரம் கிடைப்பதில்லை. இரண்டு செம்பு தண்ணீரை வாரி ஊற்றிக்கொண்டு ஓடிப்போக வேண்டியதாக இருக்கிறது. மாலையிலும் ஆபீஸ் விட்டு வருகிற போது நேரமாகி விடுகிறது. அதன் பின் ஸ்ரீராமிற்குப் பசி எடுக்கும் என்பதால் வெறுமனே முகத்தைக் கழுவி உடை மாற்றிக்கொண்டு சமைக்க உட்கார்ந்து விடுவாள். அதனால் அப்போது நேரம் கிடைத்த காரணத்தினால் நிதானமாக நிறைய தண்ணீர் பிடித்து குளித்தாள். சில்லென்ற தண்ணீரை செம்பு செம்பாக எடுத்து ஊற்றிக் கொண்ட போது மனத்திற்குள்ளும் ஒரு குளிர்ச்சி பரவியது.

அமைதியும் சொல்ல இயலாத திம்மதியும் எப்பட வென்னையில் சின்ன சின்ன சிவப்பு பூப்போட்ட வயில்

புடவையை உடுத்திக் கொண்டு வெளியில் வந்தாள். கண்ணாடியில் பார்த்தபோது முகம் அசாதாரண பளபளப்பில் மின்னுவது தெரிய நெற்றியில் எப்போதும் போல் கீற்றாக விபூதி இட்டுக்கொண்டு சமையலறைக்குள் நுழைந்து ஸ்வாமி மாடத்தில் நின்று கணவனின் புகைப்படத்தை சில கணங்கள் இமைக்காமல் பார்த்தாள். அந்தத் தெளிவான முகம். ஆழமாய் பார்க்கிற கண்கள். நிதானமான புன்னகை...

'என் ரஞ்சனி, என்னை மறந்துவிட்டு நீயா அப்படி ஒரு விளம்பரம் கொடுக்கச் சம்மதித்தாய்?'

அவள் அதிர்ந்து உடம்பில் ஒரு சிலிர்ப்பு ஓட கண்களை அழுந்தி, மூடித் திறந்து மீண்டும் புகைப்படத்தைப் பார்த்தாள். அதே பார்வை—அதே தெளிவு—அதே புன்னகை—

கேள்வி புகைப்படத்திலிருந்து வரவில்லை. தன் உள்ளத்தின் உறுத்தலில் வெளிவந்திருக்கிறது. ஏதோ குற்ற உணர்வில் கேட்கப்பட்டிருக்கிறது. தன்னிடமிருந்தே எழுந்திருக்கிறது. ஆனாலும் அவள் அவனது புகைப்படத்தைப் பார்த்து முணுமுணுப்பாகச் சொல்லிக்கொண்டாள்.

'ஐயம் ஸாரி, இது எனக்காக இல்லை. என்னை உங்களுக்குத் தெரியும் ஸ்ரீராமிற்காக அவன் எவ்வளவோ நினைப்பிற்காக! எனக்கு வேறு வழி தெரியவில்லை. வேறு எப்படி அவனுக்கு ஒரு அப்பா கிடைக்க முடியும் என்பது புரியவில்லை. அதனால் என்னை மன்னித்துவிடுங்கள்.'

கண்ணோரம் வழியத் தயாராய் நின்ற கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, விளக்கேற்றி கீழே விழுந்து நமஸ்கரித்தபோது வாசல் அழைப்புமணி மென்மையாய், சன்னமாய் அழைக்கப்படுவது கேட்டது. அதுபோல மிக நிதானமாக விம்மிசாமுவேல்தான் அழைப்பு மணியை

அழுத்துவான் என்பதால் பதட்டப்படாமல் சமையலறையிலிருந்தே குரல் கொடுத்தாள்.

''ஸ்ரீராம்... லில்லி மிஸ்ஸாக இருக்கும். போய் கதவைத் திறப்பா...''

அதன்பின் அவள் கண்மூடி அம்பாள் படத்தைப் பார்த்து வேண்டிக்கொண்டாள்.

''அம்மா எனக்கு ஒரு நல்ல வழி காட்டம்மா. என் குழந்தைக்கு சந்தோஷமும், என் மனசுக்கு நிம்மதியும் ஏற்பட வழி செய்யம்மா.''

வேண்டி முடித்து மீண்டும் நமஸ்கரித்து எழுந்தபோது ஸ்ரீராம் வாசலில் தயங்கி நிற்பது தெரிந்தது.

''என்ன ஸ்ரீராம், லில்லி மிஸ்ஸை உட்காரச் சொன்னாயா...?''

''லில்லி மிஸ் இல்லேம்மா...யாரோ ஒரு அங்கிள் வந்திருக்காங்க...?''

''அங்கிளா—!''

''ஆமாம்மா. உன் பெயரைச் சொல்லி கேட்டார்...''

''என்னைத் தேடிட்டா வந்திருக்கார். பெயர் ஏதும் சொன்னாரா...?''

''இல்லைம்மா...?''

'யாராக இருக்கும்...?' என்ற கேள்வியில் புருவங்கள் லேசாய் நெருங்க ஸ்ரீராமின் தோளில் கைபோட்டு, ''வா பார்க்கலாம்...'' என்று வெளியில் வந்தபோது அவன் உட்காராமல் முன் அறையின் கதவருகில் தயங்கி நிற்பதைக் கவனித்தாள்.

முதல் பார்வையிலேயே நல்ல கண்ணியமானவனாகத் தெரிந்தான். படித்தவனாகத் தோற்றமளித்தான். நல்ல உயரம், மாநிறம், முன் நெற்றியில் வந்துவிழும் கிராப்பு.

லோசாய் தரை ஓடிய தலைமுடி. கூர்மையான பார்வை, மெலிதான உதடுகள். இறுக்கமான முகவாய். அவளை பார்த்ததும் முகத்தில் ஒரு மலர்ச்சியும், புன்சிரிப்பும் தோன்ற இயல்பாகக் கைகுவித்து "நமஸ்காரம். என் பெயர் பாஸ்கர்..." என்றான்.

'பாஸ்கர், பாஸ்கர்...' அந்தப் பெயர் நினைவின் எந்த இடத்திலும் தட்டுப்படாத குழப்பத்துடன் அவள் தாற்காலியைக் கட்டி உட்காரச் சொன்னாள். தன்னைத் தேடித்தான் வந்திருக்கிறானா என்ற சந்தேகத்துடன் மீண்டும் அவனைப் பார்த்தாள். அவனும் எப்படி ஆரம்பிப்பது என்பது புரியாவிட்டாலும் அவளையும், ஸ்ரீராமையும் திருப்திகரமாகப் பார்த்துக்கொண்டே மெதுவாகப் பேசத் தொடங்கினான்.

"நேற்று காலை—செய்தித்தாளில் உங்களுடைய—ஐ மீன் ஸ்ரீராமனின் விளம்பரத்தைப் பார்த்துவிட்டு வந்திருக்கிறேன்..."

அதைக் கேட்டு அவள் இன்னமும் குழப்பமடைந்த வளாகக் கேட்டாள்.

"அதில் விலாசம் தரவில்லையே...?"

"இல்லை. போஸ்ட் பாக்ஸ் நம்பர்தான் கொடுக்கப் பட்டிருந்தது. ஆனால் என் நண்பன் ஒருவன் அந்தச் செய்தித்தாளின் விளம்பரப் பகுதியில் வேலை செய்கிறான். அவனிடம் விலாசம் விசாரித்துக்கொண்டு வந்திருக்கிறேன்."

அதற்குமேல் அவளிடம் என்ன பேசுவது என்பது தெரியாமல் அவன் மௌனித்திருக்க அவளும் தயங்கித் தயங்கிச் சொன்னாள்.

"என் பெயரைத்தான் எற்கெனவே தெரிவித்து விட்டேன். வயது முப்பத்தி ஆறாகிறது. கம்பெனியில் அசிஸ்டெண்ட் லெட்ஜர் மானேஜராக இருக்கிறேன். கிட்டத்தட்ட மூவாயிர ரூபாய் சம்பளம் வருகிறது.

அண்ணா நகரில் சின்னவீடு இருக்கிறது. அப்பா, அம்மா, அண்ணா, தம்பி, தங்கை என்று சொந்தம் கொண்டாட யாருமில்லை. உங்களுக்காவது ஸ்ரீராம் இருக்கிறாள். எனக்கு யாருமே கிடையாது. இதுவரை கல்யாணம் பண்ணிக்கொள்ள வேண்டுமென்ற தோன்றியதுகூட இல்லை. நேற்று காலை எதேச்சையாக உங்களின் விளம்பரம் கண்களில் பட்டது. மனதுக்கு இது சரியாக இருக்கும் என்ற தோன்றியதால் உடனே அந்த நம்பரைப்போய்ப் பார்த்தேன். இன்று காலையிலதான் விலாசம் தந்தான். காலையிலேயே ஒருமுறை வந்திருந்தேன். பக்கத்து வீட்டு அம்மாள் ஏழு மணிக்குமேல் வந்தால் உங்களைப் பார்க்கலாம் என்றதால் இப்போது வந்திருக்கிறேன். எதையும் நேரிடையாகப் பேசி தெளிவுபடுத்திக்கொண்டு விடுவது தவறு என்கிற காரணத்தினால்தான் நேராகவே வந்து விட்டேன்." மூச்சு விடாமற் பேசினவன் இப்போது அவளைத் தவிர்த்து ஸ்ரீராமைப் பார்த்தும் புன்னகைத்தான். அந்தப் புன்னகையில் தெரிந்த இதமும், நேர்மையும் லலிதாவுக்கு ஸ்ரீராம் அம்மாவின் பக்கத்திலிருந்த வாறு அவளையே பார்த்துக் கொண்டிருப்பதை கவனித்து விட்டும் கேட்டாள்.

"என்ன ஸ்ரீராம், இவரிடம்தான் பேச வேண்டும். எனென்றால் விளம்பரம் கொடுத்தவர் நீதானே; அதனால் உன்னைத்தான் கேட்க வேண்டும். விளம்பரத்தில் எப்படியெல்லாம் இருக்க வேண்டுமென்று சொல்லியிருந்தாய்...? புது அப்பா என்னிடம் அன்பாகவும் பிரியமாகவும், பாசத்துடனும் இருக்க வேண்டும். அம்மாவை நேசிக்க வேண்டும். இவ்வளவுதானே...? அதற்கெல்லாம் தயாராக இங்கே வந்திருக்கிறேன். உன்னிடம் அன்பாக, பிரியமாக, பாசத்துடனும் இருக்க—உன் அம்மாவை நேசிக்க...அதே அன்பையும், பிரியத்தையும், பாசத்தையும் நேசத்தையும் எதிர்பார்த்தே ஒரு வந்திருக்கிறேன். உனக்காவது அப்பாவின் பாசம் மட்டும்தான் இல்லை. அதுவும் இந்த ஒன்றரை வருடமாகத்தான்

இல்லை. ஆனால் எனக்கு எப்போதுமே அந்த அப்பாவின் அன்பு கிடைத்ததில்லை. அம்மாவை நான் பார்த்ததுகூட கிடையாது. சித்தியாக வந்த இரண்டாவது அம்மாவிற்கு நான் சம்பளமில்லாத வேலைக்காரப் பையன். இந்தச் சூழ்நிலையில் வளர்த்து நாங்கமுடியாத கஷ்டத்தில் வீட்டை விட்டு பம்பாய்க்கு ஓடிப்போய் ஓட்டல்களில் சர்வராக வேலை பார்த்துக் கூடவே படிப்பையும் விடாமல் முடித்து...முப்பத்தாறு வயதில் இந்த நிலைமைக்கு வந்திருக்கிறேன். இத்தனை வயதிலும் தனியாய் சமைத்து, சாப்பிட்டு, தூங்கி அன்பான இதயத்திற்கு எக்கப்பட்டுக் கொண்டிருக்கிறேன். உன்னுடைய அந்த விளம்பரத்தில் எனக்கு நிறும் தெரிந்தது ஸ்ரீராம். என்னைப் போலவே எக்கப்படுகிற மனசு புரிந்தது. ஒவ்வொரு வார்த்தையும் நெஞ்சைத் தொட்ட காரணத்தினால்தான் அவ்வளவு சிரமப்பட்டு விலாசத்தைத் தெரிந்துகொண்டு ஓடி வந்திருக்கிறேன். அந்தச் செய்தித்தாள் நண்பன்கூட 'விலாசம் தரமாட்டேன். அது பத்திரிகை கொள்கைகளுக்குப் புறம்பானது' என்று மறுத்து விட்டான். ஆனால் நான் விடவில்லை. ஒரு நல்ல காரியம். இதற்கு மறுக்கக் கூடாது என்று கெஞ்சிக் கேட்டு அவனை சம்மதிக்க வைத்து விலாசம் வாங்கினேன். நேரில் வந்து இப்போது பார்க்கிறபோது என் மனசுக்கு இன்னும் திருப்திகரமாக இருக்கிறது. நான் வெளிப்படையாகப் பேசுபவன்; உள்ளே எதையும் தங்க வைக்காதவன். அதனால் இத்தனையையும் சொல்லிவிட்டேன். என் பேச்சில் நம்பிக்கை இருக்கிற பட்சத்தில், உங்களுக்கும் என்னைப் பிடித்திருக்கிற பட்சத்தில் உங்களோடு என்னையும் ஏதாவாக ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிற பட்சத்தில்— நான்... வந்து... எனக்கு... ஐயம் ரெடி ஃபார் தி மாரேஜ்...''

சொல்லி முடித்த வேகத்திலும், படபடப்திலும் அவனுக்கு நெற்றியும், முதுகும் வியர்த்துப் போயிற்று.

சட்டை முழுவதும் ஒட்டிக் கொண்டது. தாக்கு உலர்ந்து போகும் மேலே பேசவாமல் தடுக்க, உணர்ச்சி மிகுதியில் தலையைப் பார்த்துக் கொண்டே கேட்டான்.

''குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் தருவீர்களா...?''

அவனது பேச்சில், வெளிவந்த நிஜத்தில் அதிர்ந்து தளர்வோடு ஸோபாவில் ஒட்டிக்கொண்ட மாதிரி நின்றிருந்த ரஞ்சனி சட்டென்று விழித்துக் கொண்ட மாதிரி நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

''என்ன கேட்டீர்கள்?''

''குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் கிடைக்குமான்னு கேட்டேன்...''

''தண்ணீர்தான் வேணுமா இல்லை காபி தரட்டுமா...?''

''ம்ஹும். வெறும் ஜலம் போதும்.''

அவள் உள்ளே போய் குடத்தைச் சாய்த்துத் தண்ணீர் கொண்டு வந்தபோது அவள் ஸ்ரீராமை அருகில் கூப்பிட்டு மடியில் இறுத்தி உட்கார வைத்துத் தலையை வருடியபடி ஏதோ கேட்டுவள் அவளைப் பார்த்ததும் சட்டென்று திருத்திக் கொண்டான். அவள் மேஜை மீது வைத்த தண்ணீரை எடுத்து மடமடவென்று குடித்து முடித்தான். உள்ளங்கை அடைத்துக்கொண்டு நின்ற எதுவோ விலகி மாதிரி முகத்தில் இறுக்கம் தளர மெல்லமையாய் புன்னகை செய்தபடி ரஞ்சனியையும், ஸ்ரீராமையும் மாறி மாறிப் பார்த்துச் சொன்னான்.

''நான் சொல்ல வேண்டியதையெல்லாம் சொல்லி விட்டேன். இனி பதில் சொல்கிற பொறுப்பு உங்களுடையதான்...''

அவன் பதில் சொல்வதற்குமுன் எப்போதும் அழுத்தி அழுத்திக் கேட்டால் தவிர வாயைத் திறக்காத ஸ்ரீராம் யாரும் கேட்பதற்குமுன் சடாரென்று தானாகவே பதில் சொன்னான்.

''அங்கிள், எனக்கு உங்களை ரொம்பப் பிடிச்சிருக்கு...

அம்மாவுக்கும் வில்லி மிஸ்ஸுக்கும் பிடிச்சப் போச்சுன்னா எல்லாம் சரியாகப் போயிடும்..''

அவன் அந்தப் பதிலில் திருப்தியும், சந்தோஷமும் அடைந்தவனாகத் தோன்றினாலும், நெற்றியில் பெரிய தாய் சுருக்கம் விழ,

''வில்லி மிஸ் யாருன்னு தெரிஞ்சுக்கலாமா...?'' என்று கேட்டான்.

''என்னுடைய கிளாஸ் டீச்சர். ரொம்ப நல்லவங்க. அடிக்கடி இங்கே வருவாங்க. அம்மாவுக்கு ரொம்ப க்ளோஸ் ப்ரண்ட். அவங்க ஒரே ப்ரண்ட்டுதான் அம்மாவுக்கு. அவங்கதான் எனக்காக இந்த லெட்டரைப் பேப்பர்ல போட வழி சொல்லித் தந்தவங்க...''

''அப்படியா...!'' என்று அவன் யோசிக்க, மெதுவாய் பேச ஆரம்பித்தான் ரஞ்சனி.

''இதில் தான் மட்டும் முடிவு எடுக்க முடியாது. இதை ஆரம்பித்து வைத்ததே வில்லிதான். அவங்கிட்டேயும் தீங்கப்போடறது நல்லது. அவங்களும் உங்களைப்பார்த்த மாதிரி இருக்கும்...''

''எங்கே இருக்காங்க அவங்க...?''

''நாளைக்கு வரச்சொல்லி ஸ்ரீராம்கிட்டே சொல்லி வரும்படிறேன். சயந்திரம் ஸ்கூல் விட்டதும் இங்கே—''

''இல்லை, உங்களுக்கு ஆட்சேபனை எதுவும் இல்லைன்னா நான் இங்கு வந்த மாதிரி நான் அவர்களையும் பேசி பார்த்து விடுகிறேனே?''

ரஞ்சனி தயங்கிக்கொண்டே—

''எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை...'' என்றாள்.

''அப்படியானால் விலாசம் சொல்கிறீர்களா...?''

சொன்னாள். குறித்துக் கொண்டு எழுந்த அவன் மீண்டும் கைகூப்பினான்.

''வரட்டுமா ஸ்ரீராம்...?'' என்று அவனது முதுகில் அன்பாகத் தட்டி விடைபெற்றபோது மனதில் எழுந்த உற்சாகமும், சந்தோஷமும் முகத்தில் வெளிப்படையாகத் தெரிய இரண்டிரண்டு படிகளாகக் கீழே இறங்கினான்...

12

மறுநாள் மாலை ஏழு மணியளவில் வில்லிசாமுவேல உற்சாகமாகக் குரல் கொடுத்துக்கொண்டே உள்ளே நுழைந்தான். தான் கொண்டு வந்திருந்த சாட்பரீஸ் சாக்லெட்டை ஸ்ரீராமிடம் கொடுத்து 'கங்கிராஜுலேஷன்ஸ்' சொன்னான். பின் ''நிலையமாகப் பார்த்தால் நீதான் எனக்கு சாக்லெட் தரணும் ஸ்ரீராம். உங்கம்மா ட்ரீட்டே கொடுக்கணும்...''

காபி கலந்து கொண்டு வந்த ரஞ்சனி டம்ளரை வில்லியிடம் தந்துவிட்டுக் கேட்டாள்.

''தான் ட்ரீட் தரணுமா... எதுக்கு?''

''அட ஒண்ணும் தெரியாத மாதிரி கேட்கிறாயே...? நேற்று மிஸ்டர் பஸ்கர் முதல்ல இங்க வந்து உன்கிட்ட தானே பேசினார்...!''

''பேசினால்...உடனே எல்லாம் சரின்னு அர்த்தமா...? எல்லாவற்றிற்கும் ஒப்புக்கொண்டதாகி விடுமா...? அந்த மனுஷர் யாரு, வந்து சொன்னதெல்லாம் நிஜம் தானா, எந்த அளவிற்கு அதில் உண்மையிருக்கு என்பதையெல்லாம் விசாரிக்க வேண்டாமா?''

''அதெல்லாம் விசாரிக்காமல் சாக்லேட் வாங்கிட்டு வந்து கங்கிராஜுலேஷன்ஸ் சொல்ற அளவுக்கு என்னை விவேகமில்லாதவன்னா நினைச்சே...?''

''அப்படியா...? எல்லாம் விசாரிச்சிங்களா?''

''பின்னே...? நேற்று ராத்திரி அவர் வந்து என்னையும் எங்க வீட்டுக்காரரையும் உட்காரவச்சுப் பேசினபோதே

இவரை நம்பலாம், ஆள் கண்ணியமானவர்னு தோணிச்சு, ஆனாலும் யாரையும் முகத்தையும், பேச்சையும் வச்சு மட்டும் நம்பிடக்கூடாது பார். அதனால் இன்று பகல் அரை நாள் பள்ளிக்கூடத்திற்கு லீவு போட்டுட்டு நேரா அவர் வேலை செய்யற கம்பெனிக்குப் போனேன். அங்கே எங்க தூரத்து உறவுக்காரர் ஜார்ஜ் என்று ஒருத்தர் வேலைல இருக்கார். அவரைப் பிடித்து மொத்த விவரமும் கேட்டேன். அவர் மட்டுமின்றி இன்னும் இரண்டு மூன்று பேரையும் விசாரித்தேன். எல்லோருமே நல்ல அபிப்ராயம் வச்சிருக்காங்க. 'ஓ...தறி ஈஸ் எ ஜெம்' என்கிறாங்க. அதோடு விட்டுவிடாமல் நேரா அண்ணாநகர் வீட்டுக்கும் போய்ப் பார்த்தேன். இரண்டு பெட்ரூம் கொண்ட சின்ன அழகான வீடு. அக்கம்பக்கத்தில் இருக்கிறவங்களும் நல்ல விதமாகவே பேசறாங்க. எந்தவிதத் தப்பும் யாரும் சொல்லலை. எனக்கென்னவோ இவரைவிட நல்லவரா அமையறது கஷ்டம்னுதான் தோணுது."

இடையில் குறுக்கிடாமல் நிதானமாகக் கேட்டுக் கொண்டே வந்த ரஞ்சனி கடைசியில் ஒரு சின்னப் பெரு மூச்சுடன் வில்லியை நிமிர்ந்து பார்த்தாள்.

"அப்போ...என்ன சொல்றீங்க...?"

"இனிமேல் நான் இன்னும் என்ன சொல்லணும்னு எதிர்பார்க்கறே ரஞ்சனி...? இன்னும் வெளிப்படையா சொல்லணும்னா பாஸ்கர் நல்லவர். அவர் சொன்னதில் ஒரு வார்த்தை பொய் இல்லை. உன்னையும், ஸ்ரீராமையும் மாதிரி இன்னொரு பிறவி. அன்பிற்கு எங்குகிற ஜென்மம். எந்த வற்புறுத்தலும் இன்றி உன்னையும், ஸ்ரீராமையும், பார்த்த பின்னர், தானே விருப்பப்பட்டு சம்மதிக்கிறார். ஸ்ரீராம் கேட்ட மாதிரி அவனுக்கு அப்பாவாகவும், உன்னைப் பிரியத்துடனும் நடத்தக் காத்துக்கொண்டிருக்கிறார். நீங்கள் மூன்று பேரும் வசதியான வாழ்க்கை நடத்தக்கூடிய அளவிற்கு சம்பாதிக்கிறார். பார்க்கவும் லட்சணமாக இருக்கிறார். இன்னும்

வெளிப்படையாகச் சொல்வதானால் — இது மாதிரி கல்யாணம் பண்ணிக்கொண்டு போகிறோமே, அங்கே நாத்தனார் மாமியாரெல்லாம் என்ன சொல்வார்களோ, எப்படிப் பார்ப்பார்களோ என்று பயப்படக்கூடத் தேவை இல்லை. அவருக்கு அந்த மாதிரி சொந்த பந்தம் எதுமில்லை. இப்படி எல்லாமே ஒன்றாகச் சேர்ந்து வேறு எங்கு அமைய முடியும்...?" மனிதர் நல்லவராகவும் இருக்கிறார். அதனால் அவருக்கு 'சரி' சொல்வதுதான் சரி என்று நான் நினைக்கிறேன்..."

"நான் இதைப் பற்றியெல்லாம் கூட அதிகம் கவலைப்படவில்லை வில்லி, ஸ்ரீராம் என்ன நினைக்கிறான்? அவன் மனதில் என்ன இருக்கிறது, இவனுக்கு அவரைப் பிடித்திருக்கிறதா... இதெல்லாம்தான் முக்கியம், இதைப் பற்றித்தான் கவலைப்படுகிறேன்..."

"அவ்வளவுதானே...? நீ கிளம்பி லஸ் ஆஞ்சநேயர் கோவிலுக்கோ, சபாலி கோவிலுக்கோ போய்விட்டு வா. அதற்குள் நான் கேட்டு வைக்கிறேன்..."

ரஞ்சனி தயங்கினாள். அவள் கேட்கிறபோது தானும் உடன் இருக்கப் பிரியப்பட்டு அதை அவளிடம் சொன்னாள். ஆனால் வில்லி அதை ஏற்றுக்கொள்ளவில்லை. "வேண்டாம் ரஞ்சனி" என்று மறுத்து விட்டாள். "உன் எதிரில் அவன் பேசக் கஷ்டப்படலாம். சுலபமற்று உணரலாம். மனதில் இருப்பதை வெளிப்படையாகச் சொல்ல சங்கடப்படலாம். அதனால் நானே கேட்கிறேன். நான் மட்டும் தனியாகப் பேசுகிறேன். எல்லாக் கோணங்களிலிருந்தும் நிலைமையை ஆராயத் தவறமாட்டேன். அதனால் பயப்படாமல் போய்ச் சரியாக ஒரு மணி நேரம் கழித்து வா... என்ன...?"

ரஞ்சனி கிளம்பிப் போகிறவரை காத்திருந்த வில்லி சாமுவேல், ஸ்ரீராமைக் கூப்பிட்டுப் பக்கத்தில் இருத்திக் கொண்டு உட்கார்த்தாள்.

''ஸ்ரீராம், இப்போ நான் உன்னிடம் சில கேள்விகள் கேட்கப் போறேன். உண்மையான பதிலாச் சொல்லணும். என்ன...?''

''சரி மிஸ்...''

''நேற்று வந்தாரே அங்கிள்... அவரை உனக்குப் பிடிச்சிருக்கா...?''

''பிடிச்சிருக்கு மிஸ். ரொம்பப் பிடிச்சிருக்கு...''

''அவரைப் பார்த்தால் உங்க அப்பாவைப் பார்க்கிற மாதிரி தோணுதா...?''

''என்ன மிஸ்...?''

''இல்லை. அவரை ஒரு அப்பா ஸ்தானத்தில் வச்சுப் பார்க்க முடியுதான்னு கேட்டேன்.''

''...அது வந்து... அப்படிக் கேட்டால் தெரியலை மிஸ்... ஆனால் அந்த அங்கிளைப் பிடிச்சிருக்கு...''

''சரி, இப்படிக் கேட்கிறேன்... அந்த அங்கிளோடு இருந்தால் சந்தோஷமாக இருப்போம்னு உன் மனசுக்குப் படுதா...?''

''படுது மிஸ்...''

''என்ன படுது...?''

''அந்த அங்கிள் சந்தோஷமா வச்சிருப்பாருன்னு படுது...''

''நிஜமாகவா?...?''

''நிஜமாகத்தான் மிஸ்...''

''உங்கப்பா மாதிரியே வச்சிருப்பாருன்னு தோணுதா...?''

''ம்... தோணுது மிஸ்...''

''அப்படின்னா இவரைப் புது அப்பாவாக ஏற்றுக்க உனக்குச் சம்மதம் தானே...?''

''சம்மதம்தான் மிஸ்...''

''சும்மா ஒப்புக்குத் தலையாட்டக் கூடாது. நிஜமா சொல்லணும்...''

''நிஜமாகவே சம்மதம் மிஸ். அவரை எனக்குப் பிடிச்சிருக்கு...''

''அப்புறம் எந்தக் குறையும் சொல்லக் கூடாது. இது உனக்காகச் செய்யறது. உன் சந்தோஷத்திற்காகவும், திருப்திக்காகவும், மனக்குறையை மாற்றவும் செய்யறது. பின்னால் அம்மாவையோ, அவரையோ தப்பாகப் பேசக் கூடாது. அய்யா தன் சந்தோஷத்திற்காக செய்தான்னு நினைக்கக் கூடாது. என்ன...?''

அவனுக்கு மில்லி மிஸ் சொன்னது சரியாகப் புரியாமற போனாலும் பலமாகத் தலையாட்டினான். அந்தத் தலையாட்டலில் அப்போதே பால்கரை வீட்டிற்கு அழைத்துக்கொண்டு வந்து விடுகிற வேகமும் துடிப்பும் தெரிவதைக் கவனித்த மில்லி புன்சிரிப்போடு அவனைத் தன்னுடன் சேர்த்து அணைத்துக்கொண்டு அவனது குழந்தைத்தனத்தை ரசித்தவளாகக் கேட்டாள்:

''அப்போ, கல்யாணத்திற்கு எற்பாடு பண்ணி விடலாமா ஸ்ரீராம்—''

''ஓ... பண்ணலாம் மிஸ். கல்யாணமாகி ரொம்ப நாளியாக இருக்கும் இல்லையா மிஸ்...? மோதிரமெல்லாம் வைப்பாங்க இல்லையா...? பெரிய பத்தல் போட்டு, நிறைய ஸ்வீட்ஸ் பண்ணி, ஸ்கூலுக்கு லீவு போடலாம் இல்லையா...?''

''ஸ்கூலுக்கு லீவு போடறதிலேயே இரு— இந்தக் கல்யாணம் அப்படியெல்லாம் நடக்கப் போறதில்லை. ரொம்ப ரொம்ப லிம்பிளா ரிஜிஸ்டர் ஆபீஸில் முடிந்து போயிடும். அப்புறம் உங்க சம்பிரதாயப்படி ஏதாவது கோவிலில் மாலை மாற்றித் தாலி கட்டறது. சாயந்திரம்

ஓட்டலில் ரிஸப்ஷன், ரிஸப்ஷன் கூட எதுக்குத் தெரியுமா ? உங்க அம்மாவோட ஆபீஸ் பிரெண்ட்ஸ், புது அப்பாவுடைய ஆபீஸ் பிரெண்ட்ஸ், நம் ஸ்கூல் டீச்சர்ஸ் இவர்களுக்கெல்லாம் கல்யாணமான செய்தியைத் தெரிவிப்பதற்குத்தான். அம்மா அப்பாவையும், அப்பா அம்மாவையும், நீ அவங்க ரெண்டு பேரையும் எல்லாருக்கும் அறிமுகப்படுத்தறதுக்கு..."

"அப்படியா...?அதுக்கா ரிஸப்ஷன் வைக்கிறாங்க...?"

"பின்னே எதுக்குன்னு நினைச்சே...?"

"ஏன் மிஸ், கல்யாணம் எப்போ நடக்கும் மிஸ்...?"

"எப்படியும் இந்த மாசக் கடைசிக்குள் நடந்துடும். அம்மாட்ட வந்து நல்ல நாள் பார்க்க வேண்டாமா...?"

"எனக்கு சீக்கிரம் நடக்கணும்னு போல இருக்கு மிஸ்... நாளைக்கே நடக்கணும்னு தோன்றது..."

வாழ்க்கையின் சந்தோஷங்களுக்காக அவன் தவிக்கிற தவிப்பு புரிந்தவளாக மீனலோசனி மெல்ல அவன் தோளில் கை போட்டு அணைத்துக்கொண்டே சொன்னாள்.

"நடக்கும்ப்பா... ரொம்ப சீக்கிரம் நடக்கும்..."

கதவோரம்மான் சந்நிதியில் கைகூப்பி நின்று மனம் உருகி வேண்டிக்கொண்டாள் ரஞ்சனி.

"அம்மா...என் குழந்தையைக் காப்பாத்தும்மா... அவன் வாழ்க்கை சந்தோஷமாக இருக்க நான் தேர்ந்து எடுத்திருக்கிற முடிவு இது. இதில் ஏற்படுகிற இடைஞ்சலும் விக்னமும் இன்றி அமைதியாகக் கடந்து கரைசேர அருள்புரியம்மா! ஆசீர்வதியம்மா..."

நீராஜனம் முடிந்து குருக்கள் கற்பூர ஆரத்தித் தட்டைக் கொண்டு வந்து காண்பித்து குங்குமம் கொடுத்துக்கொண்டே வந்தவர், ரஞ்சனியின் நெற்றியைக் கவனித்துவிட்டு வெறும் விபூதி மட்டும் கொடுத்துவிட்டு நகர...

அந்தச் செய்கையில் ஒரு விளாடி ரஞ்சனி சலனப் பட்டுப் போனாள். குங்குமமோ, வேறுவிதப் பொட்டோ இடப்படாத நெற்றிகளைக் கவனித்து வெறும் விபூதி தருவது வழக்கமானாலும், அந்த நேர வேண்டுதலுக்கு அசகுணமாகப்பட அடிநாளத்தில் ஆழமாய்த் தோன்றி வருத்தத்துடன் மெல்ல பிரதட்சணத்திற்காக நகர்ந்த போது அருகில் "இந்தாருங்கள் குங்குமம். இட்டுக் கொள்ளுங்கள்" என்கிற மெல்லிய குரல் கேட்க—

சடாரென்று தலைநிமிர்ந்து பார்த்தாள். பாஸ்கர் நின்று கொண்டிருந்தான்... முகத்தில் லேசாய்ப் புன்னகை தெரிந்தது.

அவனை அங்கு சிறிதும் எதிர்பார்க்காத ரஞ்சனி சட்டென்று குங்குமத்தை எடுத்துக்கொள்ளாமல் தயங்கி நின்றாள். இந்த ஒரு நொடியாவது விட்டுப்போன பழக்கம், பொட்டிற்கும், பூவிற்கும் ஏங்கிக் கருகிக் கை நீள மறுத்தது. ஆனாலும் சற்றுமுன் தான் மனதிற்குள் பட்ட கஷ்டம் நினைத்து அம்பாளே குங்குமம் கொடுத்து அனுப்பியிருக்கிறாளோ என்று தோன்றியது. அதுவும் யார் வாழ்க்கை நரகப் போகிறானோ அவன் கையாலேயே நரசிம்மி அனுக்கிரகிக்கிறாளோ...? சரியாய் இந்த நேரத்திற்கு எப்படி வந்தான் இவன்...? இவனா...? சட்டென்று கீழ் உதட்டைக் கடித்து மனதிற்குள்ளாகவே இவர் என்ற மாற்றிக் கொள்வதற்குள் அவனது மௌனத்தை கவனித்த பாஸ்கர் சற்றே வேதனைப்பட்டவனாகக் கேட்டான்.

"ஏன் இப்படித் தயங்குகிறீர்கள்...? இதற்கு மேலும் தயங்கினால் அதற்கு அம்பாள் குங்குமம் மட்டும் இன்றி அனைத்து அபசகுனத்தையும் சேர்த்து நிராகரிப்பதாகத்தான் அர்த்தமாகும்..."

"ஓ... அப்படியில்லை..." என்று பதறி பிரதட்சணம் செய்பவர்களுக்கு வசதியாக நகர்ந்து சுவர் ஓரம் நின்று இன்னமும் தழைந்த குரலில் சொன்னாள்:

''கிட்டதட்ட ஒன்றரை வருஷமாகக் குங்குமத்தைத் தொடாமலே இருந்ததில கைக்குச் சட்டென்ற அந்தப் பழக்கம் வரமாட்டேன் என்கிறது...''

''இனி தயங்குகிற பழக்கம் மறைந்து குங்குமத்திற்காகக் கை நீளுகிற பழக்கம் வரவேண்டும்...''

''அது இனிமேல்தானே வரும்.''

''இதுவே, அப்பாள் சந்திரியே, அதற்கு ஆரம்பமாக இருக்கட்டும். எடுத்துக்கொள்ளுங்கள்...''

மெல்ல அவன் உள்ளங்கையிலிருந்த குங்குமத்தை எடுத்து புருவ மத்தியில் இட்டுக்கொண்டு நிமிர்ந்தபோது உணர்ச்சி மிகுதியில் அவளது கண்கள் கலங்கின. அதைப் பார்த்த பாஸ்கர் அவளைத் தன்னோடு சேர்த்து அணைத்துத் தலையை வருடி ஆறுதல் சொல்லத் தனித்த மனதைக் கட்டுப்படுத்திக்கொண்டு மெதுவாக அவளது வலது கையைப்பற்றி அழுத்தி ''வா சந்தனி போகலாம்...'' என்றான்; மிக நெருக்கமானதோர் உரிமை தொனிக்க.

அதற்குப் பின் எல்லாமே மடமடவென்று நடந்து முடிந்தன. வில்லிசாமுவேலும், அவளது கணவனுமே இரு பக்கத் துணையாகவும், உறவாகவும் நிற்க கல்யாணம் ரிஜிஸ்ட்ரார் ஆபீஸிலும், கோவிலிலும் மிக அமைதியாக நடைபெற்றது. அதன் பின்னர் ஓட்டலில் ரிசப்ஷன் மட்டுமே சற்று ஆடம்பரமாக இருந்தது. பாஸ்கரின் அலுவலகத்திலிருந்தும், சந்தனியின் அலுவலகத்திலிருந்தும் அத்தனை பேரும் வந்திருந்தார்கள். வில்லிசாமுவேல் தன் சார்பில் பல்லி ஜூனியர்களை அழைத்திருந்தான். எல்லாரையும்விட அவளே மிகுந்த சந்தோஷத்துடன் காணப்பட்டாள். நிமிடத்திற்கு ஒரு முறை ஸ்ரீராமைக் கூப்பிட்டு ''சந்தோஷமா ஸ்ரீராம், நீ நினைத்தது நிறைவேறிடுச்சா... புது அப்பாவைப் பிடிச்சிருக்கா...?'' என்றெல்லாம் மீண்டும் மீண்டும் கேட்டாள்.

அவனும் அலுக்காமல், சலிக்காமல் சிரிப்பு மாறாமல் பதில் சொன்னான்.

'சந்தோஷம்தான் மிஸ்...'

'புது அப்பாவை ரொம்பப் பிடிச்சிருக்கு மிஸ்...'

'நான் தினைச்சதெல்லாம் நடந்துடுத்து மிஸ்...'

'இனிமே பேரண்ட்ஸ்—டீச்சர்ஸ் மீட்டிங்கிற்கு அப்பா வருவார் இல்லே மிஸ்...?'

'அந்த அப்பா மாதிரி இவரும் என்னை வெளியில் கூட்டிட்டுப் போவார் இல்லே...'

'தினமும் ராத்திரி கதை சொல்வாரா மிஸ்...'

'இனிமேல் நான் அப்பா பக்கத்துலேயே படுத்தும் பேன் மிஸ்...'

அத்தக் கேள்வி வரை எல்லாவற்றிற்கும் ஆமாம் ஸ்ரீராம், சரி ஸ்ரீராம் சொன்ன வில்லிசாமுவேல் கடைசி கேள்வி அதை அவன் கேள்வியாகக்கூட கேட்கவில்லை, வார்த்தப்படுத்தி உறுதியாகவே தானே சொல்லி விட்டாள். அதற்கு மட்டும் பதில் சொல்லவில்லை, உடனே தலையாட்டவில்லை, மெல்லப் பேசி சமாளிக்கச் செய்தான்.

''இன்னிராத்திரி எங்க வீட்டுக்கு வந்து எங்ககூட படுத்துக்கலாம் ஸ்ரீராம், என்ன...?''

''ம்ஹூம் வேணாம் மிஸ், நான் புது அப்பா பக்கத்துலே படுத்துக்கறேன்...''

வில்லி பதில் சொல்ல முடியாமல் தவித்தாள். கல்யாணமான முதல் நாள் ராத்திரி, சந்தனிக்கு எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் போனாலும் பாஸ்கருக்கு இல்லாமலிருக்கும் என்று சொல்ல முடியாது. அவனுக்கு இது முதல் நாள். அவன் இந்த முதல் நாள் இரவிற்குக் காத்திருக்கலாம். நிறையக் கனவுகள் வைத்துக் கொண்

டுக்கலாம். எதிர்பார்ப்புகள் இருக்கலாம். அதில் தவறு எதுமில்லை. பார்க்கப் போனால் அதுதான் இயற்கை. அதுதான் நியாயம்...

ஆனால் அதை இந்தச் சிறுவனிடம் சொல்லிப் புரிய வைக்கிற வயசில்லை. அதனால் எப்படியாவது தைரியமாகப் பேசி இவனை அழைத்துக்கொண்டு போய்விட வேண்டும் என்கிற முடிவில் வில்லி அப்போது ஆயத்தமாக இருந்தாள். சிலப்பதிகாரம் முடிந்து எல்லோரும் போகிறவரை பொறுமையாகக் காத்திருந்தாள். ஓட்டல் பில்லைக் கொடுத்து வண்டிகளைத் தீர்த்துவிட்டுக் கணவர் வந்ததும் அவரைத் தனியாக அழைத்துப் போய்ச் சொன்னாள்.

"ஏங்க... இன்னிக்கு ராத்திரி ஸ்ரீராமை நம்மகூட அழைச்சிட்டுப் போகலாங்களா...?"

"என், எதுக்கு வில்லி...?"

"என்னங்க புரியாத மாதிரி கேட்கறீங்க. அவங்களுக்கு அண்ணாதுரை வீட்டில எற்பாடு பண்ணியிருக்கு- இந்தப் பையன் புது அப்பாகூடத்தான் படுத்துப்பேன்னு அடம்பிடிக்கறான்..."

"ஓ.... அதைச் சொல்றியா...சரி, அழைச்சிட்டு போக லாம். இதற்கு என்னைக் கேக்கணுமா..."

"இல்லீங்க... ஒரு பேச்சுக்குக் கேட்டேன். ரஞ்சனி யும், பாஸ்கரும்கூட சாப்பிட்டாவிடுச்ச இல்லீங்களா? கிளம்ப வேண்டியதுதானே...?"

"ஆமாம். அவங்க எப்படிப் போறாங்க..."

"அவங்களுக்கு கார் ஏற்பாடு பண்ணியிருக்கு... நாம ஒரு ஆட்டோ பிடிச்சுப் போயிடலாம்..."

"சரி. கிளம்பு..."

"இருங்க, ரஞ்சனி கிட்ட ஸ்ரீராமை அழைச்சிட்டுப் போற விஷயத்தைச் சொல்லிட்டு வந்துடறேன்..."

அவள் போனபோது மாலைகளைக் கழற்றிவிட்டு ரஞ்சனியும், பாஸ்கரும்கூடப் புறப்படத் தயாராக இருந்தார்கள். வில்லியைப் பார்த்ததும் ரஞ்சனி "புறப்பட லாமா...?"

"...ம்.. கிளம்ப வேண்டியதுதான்...நீயும், இவரும் காரில் அண்ணாதுரை போயிடுங்க. நான் ஸ்ரீராமை என் கூட அழைச்சிட்டுப் போறேன். நாளை சமயத்தில் கொண்டுவந்து விடறேன்."

"ஸ்ரீராமை அழைச்சிட்டுப் போறியா... எதற்கு வில்லி..."

"எதற்கா...? என்ன கேட்கறே ரஞ்சனி...? இன்னைக்குக் கல்யாணமான முதல் ராத்திரிங்கறதை மறக்காதே! அண்ணாதுரை வீட்லதான் ஏற்பாடு பண்ணியிருக்கு. அதற்கு இடைஞ்சலா ஸ்ரீராம் இருக்க வேணாம்னுதான் என்கூட அழைச்சிட்டுப் போறேன்..."

அதைச் சொல்லி முடிந்தபோது பாஸ்கரின் முகம் மலருவதைக் கவனித்தாள் வில்லி. அவள் நினைத்த மாதிரியே கண்களில் எதிர்பார்ப்புத் தெரிந்தது. அதை வாய்விட்டும் சொன்னான் அவன்.

"அதுவும் நல்ல ஏற்பாடுதாங்க..."

அதைக் கேட்ட ரஞ்சனியின் முகபாவம் சடாரென்று மாறிற்று. அத்தனை நேர மலர்ச்சியும் சட்டென்று மறைந்தது.

"இல்லை... வில்லி... ஸ்ரீராம் எங்கூடவே இருக்கட்டும்..." என்றாள் அழுத்தமான குரலில்.

"உங்கூட இருக்கிறதா...? என்ன பேச ரஞ்சனி...?"—வில்லியின் குரலில் மெலிசாகக் கோபம் எட்டிப் பார்ப்பதை உணர்ந்தாலும் ரஞ்சனி தன் முடிவில் நிர்மலமாக இருந்தாள்.

"இல்லை வில்லி... அவன் எங்கூடத்தான் இருக்கணும்... கல்யாணமான உடனே—அன்னிக்கே உன்கூட அனுப்பிவிட்டால் குழந்தை ரொம்ப ஏமாற்றமடைவான்.

புது அப்பா வந்த உடனே அம்மா மாறிப்போய் விட்டதாக எண்ணம் ஏற்படும். அவனை ஒதுக்குவதாக நினைப்பான். அப்படி ஒரு அபிப்பிராயம் ஆழமாகப் பதிந்து போய்விட்டால் அப்புறம் மாத்தறது கஷ்டம். முதலில் பதிகிற எண்ணம் நல்லதாக இருக்கணும். ஆரம்பமே குழந்தைக்கு வித்தியாசமாக இருக்கக்கூடாது வில்லி. எவ்வளவோ மனோதத்துவம் பேசுகிற உனக்கு இது புரியாமற் போகாது...''

வில்லிக்கு ரஞ்சனி சொல்வதில் இருந்த நிறும் பிடிபட்டாலும் அவளால் அதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

'பைத்தியக்காரப் பெண், ஏன் இப்படிச் செய்கிறாள்...?' என்று தோன்றியது. பையனைப் பற்றிக் கவலைப்படுகிற அளவிற்கு ஏன் பரஸ்கரைப் பற்றிக் கவலைப்படமாட்டேன் என்கிறாள்...? புதிதாய் கல்யாணம் செய்து கொண்டிருப்பவன். அதிகம் பழகாதவன். அதிலும் இவளுக்கு இது இரண்டாவது கல்யாணம் என்கிறபோது ஜாக்கிரதையாக இருக்க வேண்டாம்... சுவிற்றின் மீது நடக்கிற கழைக் கூத்தாடியின் லாவகம் வேண்டாம்...? விவேகமாக ரிந்திக்கத் தெரிய வேண்டாம்...? பையனின் ஆரம்பம் சரியாக இருக்க வேண்டும் என்கிற மாதிரி பாஸ்கரோடும் ஆரம்பம் சரியாக இருக்க வேண்டுமே...'

வில்லி ஆழ்ந்த யோசனைக்குப்பின் மெதுவாகச் சொன்னாள்.

''மனோதத்துவம் புரிந்திருக்கிற காரணத்தினால் தான் ஸ்ரீராமை என்னுடன் அழைத்துக்கொண்டு போவதாகச் சொல்கிறேன். பாஸ்கரின் கோணத்திலிருந்து பிரச்சினையை அணுகிப் பார்த்துத்தான் இந்த முடிவிற்கு வந்தேன்...''

அதைக்கேட்டு ரஞ்சனி மென்மையாகப் புன்னகை புரிந்தாள். பாஸ்கரை ஏறிட்டுப் பார்த்துப் பேச ஆரம்பித்தாள்.

''வில்லி... இவரும், நானும்... பெரியவர்கள். எல்லாவற்றையும் புரிந்து கொள்ளக்கூடியவர்கள்.''

''எங்க... ஸ்ரீராம் தம்மோடு இன்னிக்கு ராத்திரி தங்கறதில் உங்களுக்கு ஏதும் ஆட்சேபணை இருக்கா...?''

''ம்... வந்து அப்படியெல்லாம் ஒண்ணுமில்லே...''— பரஸ்கரின் முகம், பிரகாசம் அணைந்து சட்டென்று ஒரு ஏமாற்றம் பரவினாலும் அதை மறைத்துக்கொண்டு பேசினான்.

''அப்படின்னா அவனை நாமே அழைச்சிட்டு போகலாம் இல்லே...''

''ஓ... தாராளமா.''

அந்தப் பதிலில் ரஞ்சனி மலர்ச்சியடைந்தாள் மனதில் ஒரு நிம்மதி ஏற்பட்ட மாதிரி வில்லியையும் அவள் கணவரையும் பார்த்தாள்.

''பாத்தியா வில்லி, இவரும் தான் நினைக்கிறது சரி என்று அபிப்பிராயப்படறார். அதனால் நீ இதைப் பற்றிக் கவலைப்படாமல் கிளம்பு. காலையிலிருந்து நின்ற இடத்தில் நிற்காமல் வேலை, ரொம்ப சிரமம், என்னால் உனக்கும் உன் கணவருக்கும். ஆனாலும் நீ செய்யாமல் வேறு யார் செய்வமுடியும்...? ஏற்கெனவே மணி பத்தரையாகி விட்டது பார். இப்போ கிளம்பினால்தான் பதினொன்றரைக்காவது தூங்க முடியும்... நாளைக்கு ஸ்கூல் இருக்கு இல்லையா...?''

பேச்சு ஆரம்பித்த பிரச்சினையைவிட்டு திசை மாறிற்று.

''நீ ஆபிசுக்கு லீவுதானே போட்டிருக்கே...?''

''முதல்ல லீவுதான் போட்டிருந்தேன். ஆனால் நாளைக்கு ராஜினாமாக் கடிதம் எழுதி அனுப்பலாம்னு இருக்கேன். இவருக்கு நான் வேலைக்குப் போறது பிடிக்கலை...''

''அதுவும் சரிதான். அவருக்கு வர்ற சம்பளம் போறும் என்கிற நிறைவு வந்துவிட்டால், நீயும் வேறு ஏன் வேலைக்குப்போய் அவஸ்தைப்படணும்...?'' நிம்மதியாக வீட்டில் இருந்து குடும்பத்தை மட்டும் கவனித்தால் போதுமே...''

''அப்படித்தான் நினைக்கிறேன்...''

''சரி, அப்போ நாங்க கிளம்பறோம்...''

''எப்படிப் போகப் போறீங்க?''

''வாசல்ல ஆட்டோ கிடைக்கும். பிடிச்சிட்டுப் போயிடுவோம்...''

''வேணாம் வில்லி. நாங்களும் கிளம்பிட்டோம். இன்னிக்குக் கார் இருக்கு. உன்னை வீட்டில் இறக்கி விட்டுட்டு நாங்க அப்படியே அண்ணாநகர் போறோம். என்னங்க?''

—அவன் பாஸ்கரைப் பார்க்க; அவன் ''ஓ...போகலாம்...'' என்றான் சுவாரஸ்யமற்றவனாக....

வில்லியையும் அவன் கணவனையும் இறக்கிவிட்டு 'குட்நைட் ஆல் தி பெஸ்ட், நாப்பி மாரிட் லைஃப்....' எல்லாம் பெற்றுக்கொண்டு அண்ணாநகர் திரும்பினபோது, இரண்டு பேருக்கும் நடுவில் சந்தோஷமாகவும், உற்சாகமாகவும் உட்கார்ந்து ஏதேதோ கேள்விகள் கேட்டுக்கொண்டு வந்த ஸ்ரீராமிற்கும், டிரைவருக்கும் தெரியாமல் பின்பக்கமாகக் கைநீட்டி ரஞ்சனியின் தோளில் கைபோட்டு அவளை அணைக்க முயல, ஏதோ ஞாபகத்தில் வெளியில் பார்த்துக்கொண்டு வந்த ரஞ்சனி, சடாரென்று பயந்துபோய் அவனது கையைத் தள்ளிவிட்டாள். பின் சட்டென்ற அவனுக்கும், தனக்கும் ஏற்பட்ட பந்தம் தினைவிற்கு வர, அப்படித் தள்ளிவிட்டதை அவன் தப்பாக எடுத்துக்கொண்டு விடப்போகிறானே என்ற பயத்தில் மெல்ல நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

அவன் முகத்தில் அடிபட்ட சோகம் தெரிய சமாதானப் படுத்துகிற குரலில் மெல்லக் கிசுகிசுத்தான்.

''குழந்தை பார்த்து விடப்போறானேன்றுதான் தள்ளிவிட்டேன்...''

அவன் முகம் சடாரென்று மலர்ச்சிட்டது. அவன் காதருகில் குனிந்து சொன்னாள்.

''குழந்தை தூங்கினப்புறம் வச்சுக்கலாம்...''

''என்ன...?''

ரஞ்சனி பதில் பேசாமல் இருந்தாள்.

ஆனால் வீட்டிற்கு வந்ததும் ஸ்ரீராம் தூங்கவில்லை. அண்ணாநகர் வீட்டைச் சுற்றிப் சுற்றிப் பார்த்தான். வெளியில் காம்பவுண்டிற்குள்ளிருந்த ஸ்ரோட்டன்ஸ் சேடிகளைத் தொட்டுப் பார்த்தான்.

''வீடு அழகா இருக்குப்பா....'' என்றான்.

''அழகாயிருக்கா...'' இனிமேல் தினமும் இங்கே தானே இருக்கப் போகிறாய்... அதனால் காலையில் எழுந்து ரசிக்கலாம். இப்போ வந்து படுத்துத் தூங்கு ஸ்ரீராம். மணியாச்சு பாரு...'' என்றாள் அவள்.

ஆனால் ஸ்ரீராம் தூங்குபவனாக இல்லை. உள்ளே வந்து படுக்கை அறைக்குள் நுழைந்தவன் ஆச்சரியப் பட்டுக் கேட்டான்.

''ஐயோ... எவ்வளவு பூ! எம்ப்பா எதுக்காக இவ்வளவு மல்லிப்பூ போட்டு அலங்காரம் பண்ணி வச்சிருக்காங்க...?''

''ம்...வந்து... அது வந்து... நீ வரப்போறியேன்னுதான்...''

''எனக்காகவா... எம்மா எனக்காகவா இத்தனை பூ கொட்டி வச்சிருக்கு...''

''ஆமாம்ப்பா!'' என்றாள் ரஞ்சனி, அவனது சந்தோஷத்தையும், கண்கள் மலர்ந்த விதத்தையும் பார்த்துக் கொண்டே.

''பேசம்மா.... நீ பொய் சொல்றே...'' என்றான் அவன் அவன் பதிலில் திருப்தி அடையாதவனாக.

''நிஜம்மா உனக்காகத்தான் ஸ்ரீராம் இத்தனையும்...'' என்றாள் அவள் மீண்டும். 'நைஸ்' என்றவன்

படுக்கையில் ஏறி ஒருமுறை புரண்டான். பின்னர் ''வாப்பா, வாங்கப்பா படுத்துக்கலாம்'' என்று அவர் கையையும் கூப்பிட்டான். வாசல் கதவையும் தோட்டத்துக் கதவையும் சாத்தித் தாள் போட்டுக்கொண்டு விளக்கு களை அணைத்துவிட்டுப் படுக்கைக்கு வந்ததும் அவர்கள் இரண்டு பேருக்கும் நடுவில் படுத்து இருவர் கழுத்திலும் கை போட்டு அணைத்து முத்தமிட்டுச் சொன்னான்: ''ரொம்ப சந்தோஷமா இருக்கு இம்லேம்மா. முன்னே அந்த அப்பாகூட இப்படித்தானே படுத்துப்போம் இல்லியாம்மா...'' ரஞ்சனி துணுக்குற்றுப் போனாள். தன் மனதில் நெருடிக் கொண்டிருக்கிற அதே விஷயத்தை இவனும் எப்படிச் சொல்கிறான் என்கிற ஆச்சரியத்தோடு ஒரு வருத்தமும் எற்பட்டது. உள்ளுக்குள் இனம் புரியாத உணர்வு பொங்கி வர மெல்ல அதிலிருந்து விடுபட நினைத்து ஸ்ரீராமை அணைத்து ஒருக்களித்துப் படுத்தபடி சொன்னாள்.

''ஆமாம்ப்பா... ரொம்ப நேரமாயிடுத்து பார். தூங்குடா ராஜா...''

''அந்த அப்பா மாதிரி இந்த அப்பாவையும் கதை சொல்லச் சொல்லு... தூங்கறேன்...''

''எனக்குக் கதையெல்லாம் சொல்லத் தெரியாதே...'' என்று வாயெடுத்தவள் ''சரி சொல்றேன். கேட்டுண்டே நீ தூங்கிடணும், என்ன...'' என்றாள்.

''சரிப்பா...''

''என்ன கதை வேணும்? நரிக்கதை சொல்லட்டுமா...?''

''தயிர் வடையைத் தூக்கிட்டுப் போன கதையா...?''

''ஆமாம்...''

''அது வேணாம், தெரியும், வேற கதை சொல்லுங்க...''

''ம்... ராமாயணக் கதை...?''

''அதுவும் தெரியும்...''

''சரி, மகாபாரதம்...''

''அதுவும் அப்பா சொல்லியிருக்காங்க...''

''உங்கப்பா சொல்லாத கதைதான் என்ன...?'' என்று சலித்துப்போய்க் கேட்டாள் அவள். உள்ளுக்குள் சோபமும் எரிச்சலும் எற்பட்டன. 'பக்கத்தில் எட்டு வயதுப் பையனைப் படுக்க வைத்துக் கதை சொல்லி முதல் இரவு கொண்டாடுகிற ஒரே மனிதன் தானாகத்தான் இருப் போம்' என்கிற வெறுப்பும் கூடச் சேர்ந்து அலைக்கழிக்க, அவளது குரலில் வெளிப்பட்ட ஏதோ ஒன்று சட்டென்று ஸ்ரீராமை அடங்க வைத்தது.

''சரி, கதை வேணாம். தூங்குறேன்...'' என்று கண் களை மூடிக்கொண்டான்.

இரவு விளக்கின் வெளிச்சத்தில் சிறிது நேரத்தில் கெல்லாம் அவன் தூங்கி விட்டது தெரிய, மெல்ல எழுந்த பாஸ்கர் ரஞ்சனியின் அருகில் வந்து அவளைத் தொட.

சடாரென்று கண் திறந்த ரஞ்சனி பக்கத்தில் படுத் திருந்த ஸ்ரீராமைத் திரும்பிப் பார்த்தாள். அவன் தூங்கி னாலும் குற்ற உணர்வும், ஏமாற்றுகிற நெருடலும் எற்பட பாஸ்கரைப் பரிதாபமாகப் பார்த்துக் கெஞ்சினாள்.

''ப்ளீஸ், இன்றைக்கு எதுவும் வேணாங்க. குழந்தை விழித்துக் கொண்டானால் கஷ்டம். நாளைக்குப் பார்த்துக்கலாம். என்ன...?''

அவள் பதிலே பேசாமல் திரும்பிப் போய்க் கட்டிலில் இருந்த தலையணையை உருவி நடையில் போட்டுக் கொண்டு படுத்தபோது அவனது கோபம் புரிய ரஞ்சனி பதட்டமும் பயமும் அடைந்தாள். மெல்ல எழுந்து அவன் அருகில் போய்த் தோளைத் தொட்டாள்.

அவன் எந்த உணர்ச்சியையும் காட்டாதவனாகக் கேட்டான்.

''என்ன...?''

''வாங்க... தரையில் படுத்துக்க வேண்டாம். கட்டிலில் படுத்துக்கலாம்...''

''பரவாயில்லை... நீ போய் படுத்துக்க...''

''நீங்களும் வாங்க...''

''தூக்கம் வருது ரஞ்சனி. நாளைக்குப் பார்த்துக் கலாம். இப்போ நீயும் போய் தூங்கு...''

அதை நிஜமென்று நம்பிப் படுக்கப் போனாள் அவள்...

14

திருமணமான அந்த முதல் நாள் ஏமாற்றம் பாஸ்கரை நிறைய பாதித்திருந்தது. கிட்டத்தட்ட ஒரு வாரம் வரை அவன் அதனால் தூக்கமின்றித் தவித்தான். நிறைய சந்தேகங்கள் தோன்றி அதன் காரணமாக நிறைய கேள்விகள் கேட்டுக்கொண்டான். ஒரு வேளை ரஞ்சனிக்குத்தன்னைப்பிடிக்கவில்லையோ என்றுப்போன முதல் காலையை இன்னமும் மறக்கமுடியவில்லையே...? ஸ்ரீராம்படுகிற கஷ்டத்தைக்காணச்சகிக்காமல் அவனுக்கு அப்பாவைத் தேடித் தந்து விடுகிற ஒரே காரணத்தினால் தான் தன்னைக் கல்யாணம் பண்ணிக்கொள்ளவே சம்மதித்தாளோ...? தனக்கு அப்பா ஸ்தானம் தானே தவிர கணவன் ஸ்தானம் இல்லையோ...?

விடை தெரியாத கேள்விகளில் மனமும், நினைவும் அலைக்கழிக்கப்பட ஒரு வாரம்வரை அதிகப் பேச்சு எதுவுமின்றி இருந்தான். காலையில் ஆபீசுக்குக் கிளம்பிப் போனால் மாலை ஏழரை, எட்டு மணிக்குத்தான் வீடு திரும்பினான். அவ்வளவு நேரம் கழித்து வருவதற்கான

காரணம் எதுவும் கேட்காமல் ரஞ்சனி மௌனமாகவே காப்பி டம்ளரை நீட்டுவாள். இவனும் அவள் 'என் இவ்வளவு லேட்டாக வருகிறீர்கள்...? ஆபீஸில் வேலை அதிகமா...? களைப்பாக இருக்கிறீர்களா...?' என்று இதமாக ஏதும் கேட்பாளோ என்பதை மனதில் எதிர் பார்த்து அதிலும் ஏமாந்துபோனான்.

ரஞ்சனி அவனிடம் பேசின நாலைந்து முறையும் கேள்வி ஸ்ரீராமைப் பற்றினதாகவே இருந்தது.

''எங்க, இங்கேயிருந்து ஸ்கூலில் இருக்கிற பள்ளிக் கூடத்திற்குக் குழந்தை எப்படிக்கப் போவான்...?' 'ம்...?' என்று யோசித்தான் பாஸ்கர்.

''காலையில் ஒன்பதிற்குக் கிளம்புவதற்குப் பதில் நான் எட்டரை மணிக்குக் கிளம்பினால் ஸ்ரீராமை ஸ்கூட்டரில் விட்டுவிட்டு அப்படியே ஆபீஸ் போக சரியாக இருக்கும்'' என்றாள்.

''சாயந்திரம் வரும்போது எப்படி வருவான்...?''

''சாயந்திர நேரத்தில் எல்லாம் குறிப்பிட்டபடி கிளம்ப முடியாது. கவர்மெண்ட் உத்தியோகமானாலும் ஐந்தடித்தால் மேலே டிராயரை இழுத்துப் பூட்டிக் கொண்டு கிளம்பி விடலாம். இது அப்படி இல்லை. ஆறு ஆறரை, ஏழு என்று வேலைக்குத் தகுந்த மாதிரி நேர மாகும்...''

''அப்ப என்னங்க செய்யறது...?''

''ஸ்கூலேருந்து 41ம் நம்பர் பஸ் இங்கே வருகிறது. அதில் ஏறி வந்துவிடச் சொல்லேன்...''

''ஐயோ... தனியா அவ்வளவு தூரம் பஸ்ல அவன் வந்தறே இல்லையே...''

''இப்போது வந்து பழகட்டுமே...''

''இல்லைங்க. எனக்குப் பயமா இருக்கு. சாயந்திரம் மூன்று மணிக்கெல்லாம் வீட்டைப் பூட்டிக்கிட்டுப் போய் நான் அவனைக் கூட்டிட்டு வந்துடறேன்...''

"இதற்காக நீ இங்கிருந்து போகணுமா...?"

"என்ன அப்படிக் கேட்கறீங்க...? குழந்தை முக்கிய மில்லையா...? அதுவும் நான் இப்போ ஆபீஸ் போற தில்லையே. வீட்டுல சும்மாத்தானே இருக்கேன். நானே போய்க் கூட்டிட்டு வந்துடறேனே...?"

அவன் கால் வினாடி தயங்கியபின், "சரி செய்..." என்றான்.

சொல்லி விட்டானேத் தவிர மனசு மிருந்த சங்கடத் திற்குள்ளானது. தன் பையன்மீது எவ்வளவு அக்கறை! அதில் நூறில் ஒரு பங்குகூடத் தன்மீது இல்லையே என்று தோன்றிற்று. ஆனாலும் நன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு ஸ்ரீராமைப் பள்ளிக்கூடத்தில் விட்டுவிட்டு ஆபீஸ் போனபோது அவனது பாஸ் அன்று அவனைக் கூப்பிட்டு அந்தியோன்யமாக விசாரித்தார்.

"என்ன பாஸ்கர்... மாரிட் லைஃப் எப்படி இருக்கு...? எங்களுடையது மாதிரி உன் கல்யாணம் டிரெடிஷனல் கல்யாணமில்லையே...? இன் எ வே சீர்திருத்தக் கல்யாண மில்லையா...? அதனால்தான் அக்கறையோடு கேட் கிறேன்...?"

"ஓ...ஐயாம் ஹாப்பி சார்..." பாஸ்கர் வரவழைத்துக் கொண்ட புன்னகையுடன் மிக இயல்பாகப் பொய் சொன்னான்.

"ஒய்ஃப் எப்படி இருக்காங்க...?"

"எப்படி இருக்காங்கன்னு... கேட்டால் என்ன சார் சொல்ல முடியும்? ஷி சுஸ் ஃபைன் சார்..."

"தட் பாய்— ஐயம் ஸாரி உன் பையன்னே சொல் றேன், அவன் என்ன படிக்கிறான்?..."

"ஐ திங்க், ஹி சுஸ் இன் போர்த் ஸ்டாண்டர்ட் சார்..."

"என்னப்பா விட்டேத்தியா ஐ திங்க்குன்னு பதில் சொல்றே...?"

"இல்லை சார்... விட்டேத்தியெல்லாம் ஒன்று மில்லை..." என்று அவசர அவசரமாக மறுத்தான் பாஸ்கர்.

"சட்டென்று எந்த வருப்பு என்பது ஞாபகத்திற்கு வரவில்லை...?"

"அது சரி பாஸ்கர்... என்ன நீ கல்யாணமான மறு நாளிலிருந்தே ஆபீசுக்கு வர ஆரம்பித்து விட்டாய்...? ம்...? பத்து நாளுக்குமேல் இருக்கிறாய்...?"

"என்ன சார் செய்யணும்...?"

"என்னப்பா நீ...? புரியாமல்தான் கேட்கறியா...? ம்...? ஹனிமூன் எங்கேயும் போகலையா...? இதெல்லாம் வாழ்க்கையில் ஒருமுறைதான் வரும்ப்பா... அனுபவிக்கத் தெரியணும்...? அவங்க—ஐ மீன்—உன் ஒய்ஃப்புக்கு வேணு மானால் இது இரண்டாங் கல்யாணமாக இருக்கலாம். ஆனால் உனக்கு முதல் கல்யாணம் தானே...? யு மஸ்ட் என்ஜாய்."

"போகலாம் சார்... ஆனால் ஸ்ரீராம் இருக்கிறா னேன்னுதான்—"

"அது யார் ஸ்ரீராம்...?"

"அவன்தான் மை ஒய்ஃப் சன்; ஐ மீன்—என்னுடைய பையன்..."

அவனுடைய பாஸ் அவன் தோள்மீது கைபோட்டு மென்மையாகச் சிரித்தார்.

"பார்த்தாயா பாஸ்கர், இது ஸ்லிப் ஆஃப் தி டங் ஆக இருக்கலாம். ஆனால் இதுதான் நிஜம். அவனை உன் பையனாக ஏற்றுக்க இன்னும் கொஞ்ச காலம் ஆகலாம்... மனசுக்குள் அந்த ஐக்கிய பாவம் வர சில வருஷங்கள்கூட பிடிக்கலாம். அது கிடக்கட்டும். பையனை என் ஒரு பிரச்சினையாக்குகிறாய்...? அவனுக்காக உன் இன்ப நாட்களை வீணாக்கிக் கொள்ள முடியுமா...? இல்லை

திரும்பவும் இந்த காலம் வருமா... யாரிடமாவது விட்டு விட்டு நீங்கள் இரண்டு பேரும் ஊட்டியோ, கொடைக்கானலோ கிளம்பிப் போங்கப்பா..."

அவருடைய பேச்சு பாஸ்கரை சிந்திக்க வைத்தது. நிஜமாகவே தான் நிறைய இழந்து கொண்டிருப்பது புரிந்தது. அறுபது வயதுக் கிழவனாகி, ஈஸிசேரில் சரிந்து அசைபோடுகிறபோதும் மனதிற்குள் சந்தோஷத்தை ஏற்படுத்தக்கூடிய இனிமையான நாட்கள் இவை. இவற்றை இப்படி வீணாக்கக்கூடாது. சஹாராவாகக் காயப்போடக்கூடாது...

அந்த முடிவில் அன்று மாலை சற்று சீக்கிரமே வீட்டிற்கு வந்தான். அவன் வந்தபோது ரஞ்சனி ஸ்ரீராமைக் குளிக்கச்செய்து உடை மாற்றிக்கொண்டிருந்தாள். இவனைப் பார்த்ததும் லேசாய் ஆச்சரியம் தெரியக் கேட்டாள்.

"என்ன இன்னிக்கு சீக்கிரம் வந்துட்டீங்க...?"

"ஏன், உனக்கு வருத்தமாக இருக்கா...?" —இவன் வேண்டுமென்றே குத்தலாகக் கேட்டான்.

அவன் முகம் சட்டென்று வாடியது.

"எனக்கு என்னங்க வருத்தம்..." என்று குரல் தழையக் கேட்டாள்.

"இல்லை நான் வந்ததால் ஸ்ரீராமின் வேலை தடைப்படும். அவனுக்குச் செய்கிற சிசுருஷையில் தடங்கல் ஏற்படும்..."

"என்ன அப்படிப் பேசறீங்க...?"

"தப்பா ஒன்னும் சொல்லலையே...அவன் உனக்கு முக்கியம். அதனால் அவனது சௌகரியத்திற்குக் குறைபாடு வந்தால் தாங்க மாட்டாயேன்னு சொன்னேன்..."

"ரஞ்சனி மௌனமாய் உள்ளே போக, ஸ்ரீராம் அவனருகில் வந்து மெதுவாகக் கேட்டான்:

"ஏம்ப்பா... கோவமா இருக்கீங்களா...?"

"இல்லையேப்பா..." என்று அவனை அருகில் இழுத்து அணைத்துக் கொண்டான் பாஸ்கர். தலையை மென்மையாக வருடிக் கொடுத்தான். அவன் மீது ஒரு கழிவிரக்கம் ஏற்பட்டது. அவனைத் தனியாகப் பார்க்கிற போது பாஸ்கருக்கு அவன் மீது எல்லையில்லாத அபரிமித அன்பு ஏற்படுகிறது. அவனுக்கு நிறைய செய்ய வேண்டுமென்று தோன்றுகிறது. ஆனால் ரஞ்சனியுடன் சேர்த்துப் பார்த்துவிட்டால்தான் மனசு ஒப்புக்கொள்ளமாட்டேன் என்கிறது. அவன் அவன் மீது செலுத்துகிற அன்பு இவனைப் பொறாமை வைக்கிறது. பொறாமையை ஏற்படுத்துகிறது. தனக்குக் கிடைக்க வேண்டியதைத் தடுத்து அவன் முழுதுமாய் ஆட்கொள்கிற வெறுப்பு வருகிறது. அதை மூடி மறைக்க இயலாமல் சங்கடப்பட்டு அவர் கனையும் சங்கடப்படுத்துகிறாள். மௌனமாய் இருந்தோ, வார்த்தைகளால் குத்தியோ காயப்படுத்துகிறாள். இவை அத்தனைக்கும் காரணம் பொஸஸிவ்நெஸ்' ரஞ்சனியை முழுதுமாகத்தான் உரிமை கொண்டாட முடியாத இயலாமை. தன்னுடையவளாக்கிக்கொள்ள முடியாத பொறாமை.

'கடவுளே... ஆரம்பத்திலேயே இப்படி நெருடல்கள் ஏற்பட்டு விரிசல் தோன்றுமானால் கடைசிவரை எப்படிப் போகும்...? சந்தோஷமும், நிம்மதியும் எங்கிருந்து வரும்..?

ரஞ்சனி என்னைப் புரிந்து கொள்ளேன்... தயவுசெய்து கொஞ்சமாவது புரிந்துகொண்டு அக்கறை காட்டேன். ப்ளீஸ்...என் உணர்வுகளுக்கு சற்றேனும் மதிப்புக் கொடேன். நான்தான் உனக்கு முக்கியம், எனக்குத்தான் முதலிடம் என் மீதுதான் அதிக அன்பு என்பது இல்லாமற் போனாலும், அப்படி ஒரு பாவனையையாவது ஏற்படுத்தேன். அதன்பின் என் எரிச்சல் சற்றுத் தணியும். மனசு நிம்மதிப்படும். நான்... நான்... இந்தத் தனிப்பிலிருந்து விடுபட்டு விடுவேன்... தயவுசெய்து என்னை விடுவியேன்... ப்ளீஸ்...'

அவன் ஸ்ரீராமை அணைத்து முத்தமிட்டு தன் மன ஓட்டம் எதையும் வெளிக்காட்டாமல் பேசினான்.

''டிபன் சாப்பிட்டாயா ஸ்ரீராம்...?''

''இல்லேப்பா, இப்போதான் ஸ்கூல்லேருந்து வந்தேன்...''

''இவ்வளவு தூரத்திலேருந்து பஸ்ஸில வர்றது கஷ்டமாக இருக்காப்பா...''

''ம்ஹூம்...அதுல கஷ்டமில்லே...!''

''நீங்க உம்முனு இருக்கிறது கஷ்டமாயிருக்கு. அப்பா கலகலன்னு சந்தோஷமா சிரிச்சுப் பேசிட்டிருப்பாரு... என்கிட்டே பிரியமா இருப்பாரு...''

''என் ஸ்ரீராம், நான் உன்கிட்டே பிரியமா இல்லையா?''

''இருக்கீங்க. ஆனால் நல்லா பேசமாட்டேன்றீங்க... மழைய அப்பா மாதிரி கலகலன்னு, அடிக்கடி வெளியே கூட்டிட்டுப் போக மாட்டேன்றீங்க...''

''இப்படி பழி மொத்தத்தையும் என் மேலயே போடறியே..,உங்கம்மா மேல ஒரு தப்பும் இல்லேன்றியா ...

''அம்மா என்ன தப்பு செய்யறாங்க...எப்பவும் போல என்கிட்டே அன்பாதானே இருக்காங்க...''

''உன்கிட்டே...ஆனால் என்கிட்டே எப்படி நடந்துக்கறாங்க..,? உங்க முதல் அப்பாகிட்டே இப்படித்தான் நடந்துகிட்டாங்களா? இப்படி நடந்துக்கிட்டிருந்தால் நீ பிறந்திருப்பாயா?''

அதைக் கேட்டுக்கொண்டே இரண்டு நாட்டுக்களில் அவர்களுக்கு அடை கொண்டுவந்த ரஞ்சனியின் முகம் சற்றே கோபத்தால் சிவந்தது. யாரிடம் என்ன பேச வேண்டுமென்ற விவஸ்தையே கிடையாதா என்கிற எரிச்சலுடன் அவளை நிமிர்ந்து பார்த்துக் கேட்டான்.

''குழந்தைகிட்டே பேசற பேச்சா இது...?''

''என்னே நான் யார்கிட்டேதான் பேசவேன்...?'' உன்கிட்டே பேசினால் கேட்டுக்க மாட்டேன்ற...?''

''சொல்ப நல்லா இருக்கு...'' என்ற ரஞ்சனி ஸ்ரீராமைப் பார்த்து,

''சீக்கிரம் சாப்பிட்டுவிட்டு நீ போய் விளையாடிக்க ஸ்ரீராம்...''

''சரிம்மா...''

காபி குடித்து முடித்து ஸ்ரீராம் வெளியில் விளையாடப் போனதும் அவள் திரும்பி பாஸ்கரைப் பார்த்து கோபத்தை உள் அடக்கி நிதானமாகவே கேட்டான்.

''அவன் சின்ன பையன். ஏற்கனவே பாதிக்கப் பட்டிருப்பவன். அவன்கிட்டே போய் என் அப்படியெல்லாம் பேசறீங்க...''

''நீ அவனுடைய கோணத்திலிருந்து மட்டும் எதையும் பார்க்கிறாயே ரஞ்சனி... என் கோணத்திலிருந்தும் கொஞ்சம் பார்க்கக்கூடாதா...? நான் மட்டும் பாதிக்கப் பட்டவனில்லையா?''

''என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள்...? நான் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று எதிர்பார்க்கிறீர்கள்...?''

''ரஞ்சனி...நீ குழந்தைக்குத் தாய் என்பதை நான் மறக்கவில்லை. அதேபோல் எனக்கு மனைவி என்பதை நீயும் மறக்கக்கூடாது இல்லையா...?''

''நான் மறந்துவிட்டதாக நீங்களே நினைத்துக் கொண்டால் எப்படி...?ஒரு மனைவியின் கடமையை நான் செய்யவில்லையா...? காலையில் எழுந்து காபி போட்டு, சமைத்து, மகனுக்கு டிபன் கட்டிக் கொடுத்து, வீட்டைக்

கவனித்து நீங்கள் விருப்பப்படவில்லை என்பதனால் வேலையை ராஜினாமா செய்து...எதைச் செய்யவில்லை சொல்லுங்கள்...? எந்தக் கடமையிலிருந்து தவறி இருக்கிறேன் என்பதை நினைத்துப் பாருங்கள்..."

"நினைத்தே பார்க்க வேண்டாம். கடமைகள் எதிலிருந்தும் நீ தவறவில்லை..."

"பின்..."

"மனைவி என்பவள் கடமை செய்கிறவள் மட்டுமில்லே ரஞ்சனி..."

"....."

"அன்பு, காதல் இவற்றையெல்லாம் பிரதிபலிப்பவளும்கூட..."

"....."

"என் பேச்சைக் கேட்டுக்கொண்டு இருக்கிறாய் ரஞ்சனி. வேறும் கடமையாற்றுகிற இயந்திரமாக மட்டுமே இருக்கிறாயே தவிர ஒரு நாளாவது என்னை அன்புடன் பார்த்திருக்கிறாயா...? காதலுடன் பேசியிருக்கிறாயா...? இந்தக் கல்யாணமாகி இத்தனை நாட்களாகிறதே... என் விரல் நுனி நகமாவது உன்மீது பட்டிருக்கிறதா ? எந்த நேரமாவது இப்படி இருப்பாளா ரஞ்சனி...?கல்யாணம் பண்ணிக் கொண்ட மனைவியின் மூச்சுக் காற்றுகூட மேலே படாமல் தூர நிற்பானா? என்னை நீ உணர்ச்சிகளற்ற ஜடம் என்றா நினைக்கிறாய் ரஞ்சனி...!"

ரஞ்சனி அவளது குற்றச்சாட்டில் இருந்த நிறம் தெரிந்ததும் தடுமாறிப் போனாள். பேசமுடியாமல் தவித்துப் பின்...

"அது...அது வந்து..." என்று ஆரம்பித்ததும் பாஸ்கரே குறுக்கிட்டான்.

"நீ என்ன சொல்ல வருகிறாய் என்பது தெரியும்... வழக்கப்படி ஸ்ரீராமைக் காரணம் காட்டப் போகிறாய். அவ்வளவுதானே...? என் ரஞ்சனி, குழந்தைகள் இருக்கிற கணவன் மனைவிகள் யாரும் உலகத்தில் சந்தோஷமாகவே இருப்பதில்லை என்பது அபிப்ராயமா...? ஸ்ரீராம் பிறந்ததின் தீ-இதை நான் கேட்டுக்கூடாதுதான். ஆனாலும் கேட்கும்படியான சந்தர்ப்பத்தில் என்னை நீ கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறாய். இப்படிக் கேட்பதற்காக முதலில் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு விடுகிறேன். ஸ்ரீராம் பிறந்த பின்னால் ஒருநாள் கூடவா நீ உன் கணவருடன் ஜமீன் ஸ்ரீராமின் சொந்த அப்பாவுடன் சந்தோஷமாக இல்லை..? அவருடன் சிரித்துப் பேசின தில்லை? அயர்ந்து படுக்கையைப் பகிர்ந்துகொண்ட தில்லை..."

"வேண்டாம், ப்ளீஸ் வேண்டாம்! இதற்குமேல் எதுவும் பேசாதீர்கள்..." என்று சொல்லிவிட்டு முகத்தை மூடிக்கொண்டு அவள் விசும்பி விசும்பி அழ ஆரம்பித்ததும் அவள் சிறிது நேரம் இரக்கத்துடன் பார்த்துக்கொண்டு நின்றான்.

"தான் தப்பு பண்ணிவிட்டேன். தப்பு பண்ணி விட்டேன்..." என்று புலம்புவதைக் கேட்டு நெகிழ்ந்து அருகில் போய் அவள் தோளில் கை வைத்து ஆதரவாகப் பேசினான்.

"ஐம் ஸாரி ரஞ்சனி! நான் இவ்வளவு அப்பட்டமாகப் பேசியிருக்கக் கூடாது. உண்மையைக்கூட இன்னும் மென்மையாகச் சொல்லியிருக்கலாம். தயவு செய்து என்னை மன்னித்துவிடு ரஞ்சனி. இப்படி அழாதே ப்ளீஸ். இந்த அழுகை என்னை சொல்லக் கஷ்டப்படுத்தறது. என் ஆபீஸில் ஒருத்தர் விடாமல் கேள்வி கேட்கிறார்கள் ரஞ்சனி. ஹனிமூன் கூடப் போகாததை என னவாய் பேசுகிறார்கள். நமக்காக மட்டுமன்றி உலகத்துக் காகவும் சேர்ந்து வாழ வேண்டிய நிலைமையில்

எல்லாருமே இருக்கிறோம். அதனால் அவர்கள் பேச்சை நிறுத்தி வாயை அடைப்பதற்காகவாவது நாம் இரண்டு பேரும் எங்காவது வெளியூர் போய்விட்டு வாலாம் சஞ்சனி...ப்ளீஸ்...?"

அவள் அழுகை ஓரளவு நின்றவளாக முகத்தைத் துடைத்துக்கொண்டு ஒரு ஆழமான பெருமூச்சுடன் அவனை நிமிர்ந்து பார்த்து 'சரி...' என்று தலையாட்ட பாஸ்கர் சந்தோஷத்துடனும், உற்சாகத்துடனும் நம்ப முடியாதவனாகக் கேட்டான்:

"நிஜமாகவா சஞ்சனி! போகலாம் என்றா சொல்கிறாய்...?"

அவள் மீண்டும் 'ஆமாம்' என்று தலையாட்டினாள். இப்போது அழுகை முற்றிலுமாக நின்று போயிருந்தது. அவள் ஒரு சிறு குழந்தையின் ஆர்வத்துடன்.

"எங்கே போகலாம் சஞ்சனி...?"

"எங்கே வேண்டுமானாலும் போகலாம்...?"

"எப்போ போகலாம்...?"

"ஸ்ரீராமிற்கு இப்போ டிஸம்பர் லீவு விடுவார்கள் இல்லையா அப்போ போகலாம்..."

"அதற்கு இன்னும் நாளிருக்கிறதே—இப்போதே போகலாமே...?"

"இப்போ போனால் அவன் அளாவல்யமாக லீவு எடுக்க வேண்டி வருமே...?"

"அவன் லீவு எடுக்கணுமா...? எதற்கு சஞ்சனி...?"

"பின்னே...லீவு போடாமல் குழந்தையை எப்படி அழைத்துக்கொண்டு போக முடியும்...?"

"குழந்தையை அழைத்துக்கொண்டு போவதா...!" சட்டென்று அத்தனை சந்தோஷம், உற்சாகம் எல்லாம் வடிய மொத்தல் விழுந்த பலூன் மாதிரி ஆகிப்போய் விட்டது அவன் முகம். அதைக் கவனிக்காமல் பேசினாள் அவள்.

"பின்னே அவனை எங்கேவிட்டுவிட்டுப்போவது...?"

"மீம்மீசாமுவேலிடம் விட்டுவிட்டுப் போகலாமே...?"

"சீ...! சீ...! அவனை விட்டுவிட்டுப் போவதா..." குரலை உடைந்து போய் விடுவான். அவனையும் கூட்டிக்கொண்டுதான் போகவேண்டும்..."

அந்தப் பதிலில் அவனது மனத்திலிருந்த அத்தனை ஆசைகளும், எதிர்பார்ப்புகளும் விழுந்து உடைந்து சிதற—

அவன் மௌனமாக எழுந்து உள்ளே போய் விட்டான்.

15

பொறுத்திருந்து பார்த்து அதற்கு மேல் பொறுக்க இயலாத நிலைமையில் அவன் ஒரு நாள் வில்லி சாமுவேலைத் தேடிக்கொண்டு அவனது வீட்டிற்குப் போனான். அவன் போனபோது அவனது கணவன் வீட்டில் இல்லை. அது அவனுக்குப் போவதற்கு வசதியாக இருக்க, மனதில் இருந்த எதையும் மறைக்காமல் கொட்டினான். கேட்டு ஸ்தம்பித்துப்போய் உட்கார்ந்திருந்தான் வில்லி. 'மைகாட்' 'மைகாட்' என்று அரற்றினான்.

"நீங்கள் இருவரும் சந்தோஷமாக இருப்பீர்கள், இடையில் குறுக்கிட வேண்டாம் என்றுதானே நான் வராமல் இருந்தேன்..." என்று சொன்னதும் வருத்தம் தோய்ந்த சிரித்தான் பாஸ்கர்.

"அதான் சொன்னேனே எவ்வளவு சந்தர்ப்பம் என்று..."

"ரஞ்சனி இப்படிப்பட்ட முட்டாளாக இருப்பாள் என்று நான் நினைக்கவில்லை. நீங்கள் வருந்தப் படாதீர்கள் பாஸ்கர். நான் வந்து அவளிடம் பேசுகிறேன். அப்புறம் புரிந்துகொள்வாள்...கவலைப் படாமல் எழுந்து போங்கள். இந்தக் கல்யாணத்தை ஆரம்பித்து வைத்தவள் நான். அதனால் இந்தச் சிக்கலைத் தீர்த்து வைத்து நேர்படுத்துவது என் பொறுப்பு பாஸ்கர்... பாரத்தை என் மீது இறக்கி வைத்து விட்டீர்கள் இல்லையா...இனி கொஞ்சம் நிம்மதியாக இருங்கள்..."

அவன் எழுந்து புறப்படத் தயாராக நின்றவன் தம்பிக்கையற்றுப் பேசினான்.

"நீங்கள் பேசுவதாலும் பெரிதாய் மாறுதல் எதுவும் நிகழ்ந்து விடாது என்று நினைக்கிறேன்...ஆனாலும் வாழ்த்து சொல்லுகிறேன். வரட்டுமா மிஸஸ் சாமுவேல்..."

"போவதற்கு முன் உங்களிடம் ஒரு சின்ன வேண்டுகோள்...?"

"என்ன சொல்லுங்கள்...?"

"நான் வீட்டிற்கு வந்து ரஞ்சனியிடம் பேசுகிறபோது தயவு செய்து நீங்கள் வீட்டில் இருக்க வேண்டாம். முடிந்தால் ஸ்ரீராமையும் அழைத்துக்கொண்டு வெளியில் போய் விடுங்கள்..."

"என்றைக்கு வருகிறீர்கள்...?"

"நாளைக்கு வரட்டுமா...?"

"வேண்டாம், நாளன்னைக்கு வாருங்களேன்..."

"சரி. சாயந்திரம் ஆறரை மணிக்கெல்லாம் வந்து விடுவேன்."

"வாருங்கள். நான் உங்களிடம் பேசின விஷயம் ரஞ்சனிக்குத் தெரிய வேண்டாமென்று நினைக்கிறேன்... நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்...?"

"சொல்வதால் ஒரு தப்பும் இல்லை என்றே நினைக்கிறேன்..."

"சரி இஷ்டப்படி செய்யுங்கள். வரட்டுமா..?"

ஸ்ரீராமும், பாஸ்கரும் வெளியில் கிளம்பிப் போனதும் கதவைத் தாளிட்டுக் கொண்டு உள்ளே வந்து டி.வி. போடலாமா என்று ரஞ்சனி யோசித்தபோது அழைப்பு மணி அழுத்தப்பட்டது. அபிஷேக்கை மார்க்கெட் வரை போவதாகச் சொன்னவர்கள் இவ்வளவு சீக்கிரம் என் திரும்பிவிட்டார்கள் என்ற கேள்வியுடன் கதவைத் திறந்தவள் வில்லியைப் பார்த்து சந்தோஷத்தில் அப்படியே நின்றாள். அதைக் கவனித்த வில்லி உரிமையுடன் அதட்டினாள்.

"என்ன அப்படி நின்னுட்ட... தகதக உன்ன போகலாம்..."

நகர்ந்து அவள் உள்ளே வந்ததும் மீண்டும் கதவை சாத்தித் தாளிட்ட ரஞ்சனி,

"இப்போதான் வா வழி தெரிஞ்சதா...?" என்று கோபித்துக்கொள்ள தன் குரலைச் சற்று உயர்த்தி அவள் வாயை அடைத்தாள் வில்லி.

"அது சரி, நீ ஏன் பேசமாட்ட..? அக்கா வீடென்னு ஒன்னு இருக்கே, அவள் என்ன ஆனாள் பார்ப்போம்னு உனக்குத் தோணலை. தினமும் ஸ்ரீராமை அழைச்சிட்டுப் போக ஸ்கூலுக்கு வரியாம். நீ வர்றபோது நான், வீட்டுக்குக் கிளம்பிப் போயிடறேன். சரி அவதான் இல்லையே... நாமாவது போய்ப் பார்ப்போம்னு வீட்டுக் காரரைக் கூட்டிட்டு ஒருதாள் வரக்கூடாது...? ம்...?"

"எங்கேக்கா நேரமிருக்கு...? பொழுது சரியாப் போயிடுது..."

"ஆமாமாம்! கல்யாணமான புதுசு, இதுக்கெல்லாம் நேரம் எங்கிருந்து கிடைக்கும்...?" வில்லி வேண்டுமென்றே கண்சிமிட்டிச் சிரிக்க ரஞ்சனி பேசாமல் இருந்தாள்.

"இவங்க இரண்டு பேரையும் எங்கே காணோம்...?"

"இப்போதான் வெளியேப் போனாங்க."

"எங்கப் போனாங்க. சினிமாவுக்கா...?"

"ம்ஹூம். இல்லைக்கா... மார்க்கெட்டுக்கு.."

"வர நேரமாகுமா...?"

"இல்லை இப்போ வந்துடுவாங்க...உள்ளே வாங்க, காபி கலக்கிறேன்..."

"காபி கிடக்கட்டும். உட்காரு உன் கிட்டே பேச ணும்னுதான் வந்தேனே தவிர காபி சாப்பிட இல்லை..."

உடனே சிரிப்படித்தான் ரஞ்சனி. இரண்டு பேரும் சோபாவில் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டார்கள்.

ரஞ்சனியின் கையை வாஞ்சையாகப் பற்றி மிருது வாகக் கேட்டாள் அவள்.

"கல்யாண வாழ்க்கை எப்படி இருக்கு...? புது அப்பார்ட்மெண்ட் ஸ்ரீராம் எப்படி நடந்துக்கறான்... இப்போ பழைய மாதிரி இல்லாமல் சந்தோஷமாக இருக்கானா...?"

"சந்தோஷமாக இருக்கானோ இல்லையோ, பழைய மாதிரி நடக்கவும், சோகமாகவும் இல்லை. அடிபட்ட பார்வையும் வெறிப்பும் இல்லை..."

"அப்படின்னா சந்தோஷமாக இருக்கிறதாகத்தானே அர்த்தம்...?"

"எதோ ஒரு அர்த்தம், போயேன்...?"

"என் இப்படிச் சலிச்சுக்கறே? பாஸ்கர் எப்படி நடத்துகிறார், பிரியமா இருக்காரா...?"

அதற்கு ரஞ்சனியிடமிருந்து உடனே பதில் வராமல் போகவே மீண்டும் அழுத்திக் கேட்டாள் லில்லி.

"என்ன ரஞ்சனி, பதில் இல்லை...உன் மௌனத்தில் எதோ விஷயம் இருக்கிற மாதிரி தெரிகிறதே?"

ஒரு ஆழமான பெருமூச்சுடன் அவளை நிமிர்ந்து பார்த்த ரஞ்சனி,

"சீ, என்னவோ எனக்கு ஒன்னும்பிடிக்கலை லில்லி. தப்பு பண்ணி விட்டோமோன்னு தோன்றது..."

"தப்பா? என்ன தப்பு...?"

"இந்தக் கல்யாணத்திற்கு ஒப்புக்கொண்டதே தப்போன்னு உறுத்தறது..."

"என் அப்படிச் சொல்றே ரஞ்சனி..."

"உனக்குத் தெரியும் லில்லி... ஸ்ரீராமிற்காகத்தான் நான் இந்தக் கல்யாணத்திற்குச் சம்மதித்தேன் என்பது. அவன் அப்பா பிரமை பிடிக்காது இருந்திருப்பான் என்றால் எனக்கு எதற்குக் கல்யாணம்...? அந்த மாதிரி எந்தவித ஆசையும் எனக்குள் எப்படலை லில்லி. உடம்பும் எதற்கும் தவிக்கலை. இன்ஃபாக்ட், என் உடம்பு அந்தவித உணர்ச்சிகளை மறந்தேபோய்விட்டது. என் கணவரோடு எனக்கு எல்லாம் செத்துப்போய் விட்டது. அவருக்குப் பின் வேறு ஒருவரோடு எதை அனுபவிக்கவும் நான் கூசிப்போகிறேன். என் மனசு ஏற்றுக்கொள்ள முடியாமல் சங்கடப்படுகிறது. தின்டாடிப் போகிறது. தெரிந்தோ தெரியாமலோ ஒருவரோடு வாழ்க்கை நடத்தி அதை மறக்காத நிலையில் வேறு ஒருவரோடு குடும்பம் நடத்துவதும், அவருடன் படுக்கையைப் பகிர்ந்துகொள்வதும், என்னதான் கல்யாணம் பண்ணிக் கொண்டாலும் அது தப்பு என்றே தோன்றுகிறது. அப்படிச்செய்வது ப்ராஸ்டிடியூஷனுக்குச் சமம் என்று படுகிறது..."

"ர...ஞ்...சனி...!"

"நிஜமாகத்தான் சொல்றேன் லில்லி..." என்று கேவ ஆரம்பித்தாள் அவள் தோளில் தலையைச் சாய்த்துக் கொண்டு—

''ஸ்ரீராமிற்கு அப்பா கிடைப்பார் என்று நினைத்தேனே தவிர அதன்மூலம் எனக்கும் கணவர் கிடைக்கிறார்; நானும் ஒரு மனைவியின் ஸ்தானத்தில் மீண்டும் நிற்க வேண்டிவரும் என்பது மறந்துபோய் விட்டது. முன்றின்மீது வைத்த அதிகப்பற்று மற்றொன்றை மறந்துவிட்டது. இதுதான் மாயை என்பது. அல்லது விதி. நீ எப்படி வேண்டுமானாலும் சொல்லேன். என் கண்ணை மறைக்கிற மாதிரி அப்போது அறிவை மறைத்து இப்போது நடுமாற வைப்பதற்கு என்ன பெயர் வைப்பது.... இந்தச் சங்கடத்திலிருந்து இந்த நிமிடம் வரை தப்பித்துக் கொண்டாகி விட்டது. ஆனால் பாஸ்கரைப் பார்க்கிற போதெல்லாம் அவருக்குத் தப்பு செய்துவிட்ட குறுகுறுப்பு எடுக்கிறது. இரண்டு நாட்களுக்கு முன்புகூட அவர் நேரிடையாகக் கேட்டு விட்டார். நான் ஸ்ரீராமிற்கு அப்பா என்பதை மறக்கவில்லை அதே மாதிரி நான் உனக்குக் கணவன் என்பதை நீயும் மறந்து விடாதே என்றார். ஸ்ரீராமைக் காரணம் காட்டி தனிப் பாதை புரிந்துகொண்டுவிட்டார். குழந்தை இருப்பதால் எல்லோரும் கணவனுடன் சந்தோஷமாக இருப்ப தில்லையா...? ஸ்ரீராம் பிறந்தபின் நீ... ஸ்ரீராமின் அப்பாவோடு சந்தோஷமாகவே இல்லையா என்றுகூட கேட்டுவிட்டார். நானும் மனிதன்தான், நமக்கும் உணர்ச்சிகள் உண்டு என்பதையும் ஞாபகப்படுத்தி விட்டார். ஆபீஸில் எல்லோரும் என் நடவடிக்கை போக வில்லை என்று கேட்கிறார்கள்; அவர்களுக்காகவாவது நாம் போய்விட்டு வரலாம் என்கிறார். ஸ்ரீராமை உன்னிடம் விட்டுவிட்டுப் போகலாம் என்றும் சொல்லிப் பார்த்தார். ஆனால் நான் மீள விட்டும், அவனையும் அழைத்துக்கொண்டு போகலாம் என்று மறுத்து விட்டேன்...''

''அந்த மறுப்பு அவரை சொல்ல சொல்லப் பாதித் திருக்கிறது லில்லி. நான் ஸ்ரீராம்மீது அளவு கடந்த அன்பு வைத்திருப்பதால்தான் அவரைப் புறக்கணிக்

கிறேன் என்று நினைக்கிறார். அது நிஜம் என்றாலும் அதைவிட நிறம் என் கணவரை என்னால் மறக்க முடியாததுதான். இவரை அந்த ஸ்தானத்திற்கு எற்றுக் கொள்ள முடியாததுதான். இப்போது இப்படிச் சொல்வது மகாபெரிய பாவம். முன்பே சொல்லியிருந்தாலும் அவர் வேறு நல்ல பெண்ணாக—இவரை இருக்காகவே நேசிக்கிற பெண்ணாகப் பார்த்துக் கல்யாணம் பண்ணிக் கொண்டிருக்கக்கூடும். எந்தோஷமாக இருந்திருக்கக் கூடும். ஆனால்...ஆனால்... இப்போது இப்படி என்னை மறுக்க வைப்பது — நினைக்க வைப்பது — அப்போதே இதையெல்லாம் சிந்தித்து, வேண்டாம் இந்தக்கல்யாணம் என்று ஒதுக்க முடியாமற் போனதற்கெல்லாம் காரணம் விதி...என்விதி, அவர் விதி... இரண்டும்தான் என்னை யும் விட்டுக்கொடுக்க முடியவில்லை. அவரைப் பார்த் தாலும் பாவமாக இருக்கிறது... இதற்கு என்னதான் முடிவு நீயே ஒரு வழி சொல்லேன் லில்லி... ப்ளீஸ்... யோசித்து யோசித்து மூளையே சுழன்றிப் போய்விடும் போல இருக்கிறது லில்லி...''

சொல்லிவிட்டு மடியில் முகத்தைப் புதைத்துக் கொண்டு தேம்பித் தேம்பி அழுவதைப் பார்த்த லில்லிக்குப் பாவமாக இருந்தது. இரண்டு நாட்களுக்கு முன் பாஸ்கர் வந்து சொன்னபோதும் அவன்மீதும் அதே பாவ உணர்ச்சி தோன்றியது. யார் பக்கம் பேசுவது என்பது புரியவில்லை. யாரைச் சமாதானப்படுத்துவது என்பது தெரியவில்லை. இந்தப் பிரச்சினை தீர்வு காணக்கூடிய தாகத் தெரிவுபடாததால் அவனும் நிறைய குழம்பிப் போனான். இப்படியெல்லாம் சிக்கல்கள் எற்படும் என்று அவனும்கூட எதிர்பார்க்கவில்லை. சந்தனி சொல்கிற மாதிரி இதை விதி என்று சொல்லாமல் வேறு எப்படிச் சொல்வது என்றும் தெரியவில்லை. மனசாட்சி எற்றுக் கொள்ளாததை மனம் இஷ்டப்படாததை வேறும் உடம்பால் மட்டும் செய்வது நிச்சயம் பெரிய தவறுதான்.

அவளே சொன்ன மாதிரி இதற்கும் பிராஸ்டிடியூஷனுக்கும் வித்தியாசமில்லைதான். இவள் இதைச் செய்யத் தயங்கி, தட்டிக்கழிப்பதும் நியாயமானதுதான். அதே மாதிரி பாஸ்கரின் எதிர்பார்ப்பும் நியாயமானதுதானே... அவன் கேட்டதில், ஆசைப்படுவதில் என்ன தப்பு இருக்கிறது...?

'கடவுளே...' இந்தப் பிரச்சினையை எப்படித் தீர்த்து வைக்கப் போகிறேன் நான்... ஆரம்பித்ததில் நடுவில் சிடுக்கு விழுந்துவிட்டது என்பதற்காக விட்டுவிட்டுப் போய்விட முடியுமா...? சிடுக்கைப் பிரித்து நேராக்க வேண்டாமா...?

16

ஸில்லி கிளம்பிப் போனதும் தனக்குள் நிறைய யோசித்தாள் ரஞ்சனி. யோசிக்க யோசிக்க மனதில் உறுத்தல் அதிகமாயிற்று. பாஸ்கர் போன்ற நல்ல மனிதனின் வாழ்க்கை தன்னால் பாழாயிற குற்றஉணர்ச்சி தலைதூக்கியது. சுயநலமான முடிவில், எதிர்பார்ப்பில் தான் தவறு செய்துவிட்டது புரிந்தது. கல்யாணமான பின் தன்னிடம் அவன் எதிர்பார்க்கிற ஒரு நியாயமான சந்தோஷத்தை மறுப்பது நிச்சயம் பாவமான செயல். அதைத் தன் மனது ஏற்றுக்கொள்ளவில்லை என்பதற்காக அவனுக்கு அந்த ஆசையே ஏற்படக் கூடாது என்று எதிர்பார்க்க முடியாது.

இதைப் பிரச்சினையாக்கி தானும் அவஸ்தைப்பட்டு, அவனையும் அவஸ்தைப்படுத்துவதால் நிம்மதி கெடுவதைத் தவிர வேறு எந்தப் பலனும் இருக்கமுடியாது. இதற்கு இரண்டே வழிகள்தான் உண்டு. ஒன்று—தன் மனசுக்குப் பிடிக்கவில்லை என்பதை வெளிக்காட்டிக்

கொள்ளாமல் மனைவி ஸ்தானத்தில் நடந்து கொள்வது. அல்லது அவளிடம் விவரமாகப்பேசி இந்த ஒரு விஷயத்தில் மட்டும் தன்னை விலக்கிவிடச் சொல்வது. மற்றபடி எல்லா வகையிலும் தான் அவனது மனைவியாகவே நடந்துகொள்ள வாக்களிப்பது...

நினைத்தபோதே அந்த இரண்டாவது வழி சிறுதும் வாழ்க்கைக்குப் பொருத்தாததாக — நியாயமற்றதாக —இயல்பானதோ, இயற்கையானதோ இல்லை என்பது பிடிபட, அவள் இன்னமும் சோர்ந்து போன சமயத்தில் பாஸ்கரும், ஸ்ரீராமும் திரும்பி வந்தார்கள். ஸ்ரீராமின் முகத்தில் திருப்தியும் சந்தோஷமும் விரவிக் கிடக்க அவன் சொன்னான்.

"அப்பா எனக்கு ரெண்டு ஐஸ்க்ரீம் வாங்கித் தந்தார்ம்மா..."

"ரெண்டு ஐஸ்க்ரீமா...? உடம்புக்கு வாப் போறது ஸ்ரீராம். ஏற்கனவே உனக்கு டான்ஸில்ஸ் பிராப்ளம் இருக்கு..."

"தினமுமா வாங்கித் தரேன் ரஞ்சனி, இன்னிக்கு ஒரு நாள்தானே. ஒன்றும் ஆகாது..."

"வெறும் ஐஸ்க்ரீம் மட்டுமா, இல்லே ஏதாவது டிபனும் சாப்பிட்டீர்களா...?"

"தாஸ்ப்பிரகாஷ் போனோம். ஸ்ரீராம் இட்லி வேணும்னு கேட்டான். வெறும் இட்லி மட்டும்தான் சாப்பிட்டான்..."

"நீங்க..."

"நானும் சாப்பிட்டேன்..."

"அப்படியானால் சாதம் சாப்பிடப் போவது இல்லையா...?"

"மஹாம். பிடிக்கலை..."

"சரி, அப்படியானால் சமையல்கட்டு வேலையை முடித்துக் கொண்டு வந்துவிடுகிறேன்..."

"ஏன் ரஞ்சனி. நீ சாப்பிடலை?"

''இல்லை...''

''ஏன்...?''

''மனசு சரியில்லை...''

''அதற்கும் சாப்பாட்டிற்கும் என்ன சம்பந்தம்...''

''மனசுக்கும் உடம்புக்கும் சம்பந்தம் இல்லைன்னு சொல்லிட முடியுமா...?''

''அப்படி உன் மனசை சங்கடப் படுத்துகிற விஷயம் தான் என்ன...''

''சொல்கிறேன். ஸ்ரீராமை உடைமாற்றிப் படுக்கச் சொல்லுங்களேன். அதற்குள் நான் சமையற்கட்டு வேலையை முடித்துக்கொண்டு வந்து விடுகிறேனே...''

''நீ இப்படி அன்பாக, ஆசையாகச் சொல்லு. எத்தனை வேலையும் செய்றேன்...''

அந்தப் பதிலில் மீண்டும் உறுத்தல் சூரம்பமாக அவள் உள்ளே போனாள். சாமான்களை ஒழித்துப் போட்டு, சமையலறையைக் கழுவித் தள்ளி, ஒரு டம்ளர் மோர் மட்டும் குடித்துவிட்டு வந்தபோது, ஸ்ரீராம் பாஸ்கரின் கழுத்தில் கைபோட்டு அணைத்து தூங்கிக் கொண்டு இருந்தான். அதைப் பார்த்த ரஞ்சனி ஒரு வினாடி தயங்கினாள். தான் சொல்லப் போகிற விஷயத்தைக் கேட்டதும் இந்த அன்பும் அரவணைப்பும், பாதுகாப்பும் ஸ்ரீராமிற்கு மறுக்கப் படலாம் என்கிற எண்ணம் வந்தது.

அப்படி மறுக்கப்படுகிற பட்சத்தில் மீண்டும் அவன் பாதிக்கப்படலாம். பழைய மாதிரி தனக்குள் ஒடுங்கி, சிரிப்பும் பேச்சும் மறந்து, மனநோயாளியாக மாறிப் போகலாம்...

'கூடாது... அவனை மீண்டும் அந்த நிலைக்குத் தள்ளக்கூடாது. தான் வாழுவதே அவனுக்காகத்தான். அதனால் அவனது சந்தோஷம் முக்கியம். நிம்மதி முக்கியம். எதிர்காலம் முக்கியம். அதற்காகத்தான்

தன்னுடைய உணர்வுகளை மறைத்துக்கொண்டு வாழப் பழகவேண்டியதுதான். வேறு வழியில்லை. முட்டாள்தனமாக எதுவும் செய்து, மீண்டும் அந்தக் குழந்தையை தவிக்க வைப்பதில், ஏங்கவைப்பதில் அர்த்தமே இல்லை.

சட்டென்று தன்னை இறுக்கிக் கொண்டு அவள் முகம் கழுவித் துடைத்து புதிதாகப் பொட்டு இட்டுக்கொண்டு வந்ததைப் பார்த்து பாஸ்கர் அதிசயப்பட்டான். உள்ளுக்குள் சந்தோஷப்பட்டான். லில்லியின் வருகை அவளை மாற்றிவிருப்பதாக நினைத்து மனதிற்குள் நன்றி சொல்லிக்கொண்டே மெதுவாக ஸ்ரீராமின் கையை அகற்றி கட்டிலை விட்டு இறங்கி அவளருகில் வந்து கேட்டான்.

''பிஸ்கட் பொட்டலமெல்லாம் வச்சிருக்கே... இன்னிக்கி யாரு வீட்டிற்கு வந்திருந்தது ரஞ்சனி...?''

''லில்லி வந்திருந்தாள்...''

''லில்லியா... எப்படி இருக்காங்க... அவங்களைப் போய் நாம் பார்க்கக் கூட இல்லையே! ரஞ்சனி நம் கல்யாணத்திற்கு முக்கியக் காரணம் அவங்கதானே—?''

''போய்ப் பார்க்கலாம். நாம் ஊருக்குக் கிளம்பற போது லில்லிகிட்டே சொல்லிட்டு, ஸ்ரீராமை விட்டுவிட்டு வரலாம்...''

அந்த வார்த்தைகளைக் கேட்டு லேசாய் அடிபட்டவனாக நிமிர்ந்தான் பாஸ்கர். ஸ்ரீராமை விட்டுவிட்டுத் தாங்கள் மட்டும் போவது என்பது அந்தக் குழந்தையின் உணர்வுகளை அவமதிப்பதாகும் என்பதாக நினைத்தான்; அதுவும் அன்று மாலை அந்தக் குழந்தையின் அன்பையும் மணிமணியான பேச்சுக்களையும் கேட்டபின் அவனை விட்டுப் பிரிவது தனக்கேகூட சாத்தியமில்லை.

அந்தக் குழந்தையை யாரிடமோ கொண்டு போய் விட்டுவிட்டு போகத் துணிகிற அளவிற்கா இறங்கி

விட்டேன் ஸ்ரீராமின் தந்தை இருந்திருந்தால் இதைச் செய்ய சம்மதித்திருப்பாரா....? நான் மட்டும் எப்படி சம்மதித்தோம்....? அதுவும் அதை ரஞ்னியிடமே சொன்னோமே, அவள் தன்னைப் பற்றி என்ன நினைத்துக் கொண்டிருப்பாள்....? எப்படி அலைகிறான் பார் என்று நினைத்துக் கொண்டிருப்பாளோ....?

அந்த நினைப்பை அவளிடமிருந்து மாற்றி, தன்னைப் பற்றி உயர்வாக நினைக்கச் செய்ய வேண்டும். தான் ஸ்ரீராமின் நிஜ அப்பாவாக நடந்துகொள்ள வேண்டும்...

முக்கியமாக ஒரு சாதாரண மனிதனைப் போல் அவசரப்படக் கூடாது. நிதானமாய், மென்மையாய், மூதலில் அவளை மனதால் நெருங்கப் பழகவேண்டும்... அவள் தானாகத் தன்னை நேசிக்கும்படிச் செய்ய வேண்டும்.

மனதில் முடிவு செய்துக் கொண்டு நிதானமாக அவளை நிமிர்ந்து பார்த்தான். "இல்லை ரஞ்னி... ஸ்ரீராமை அங்கெல்லாம் விட்டுவிட்டுப் போக வேண்டாம். அப்படி ஒரு அவசரமோ, அவசியமோ இல்லை. நழுத்தை என்னை மிக நெருங்கி விட்டான். அவனை விட்டுப் போக எனக்கே மனசில்லை. மற்றவர்களுக்காக நாம் வாழ வில்லையே... நமக்காகத்தானே நாம் வாழ்கிறோம்... அதனால் தயவுசெய்து எதோ ஒரு வேகத்தில் நான் பேசினதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளாதே ரஞ்னி... அதை மறந்து விடு. ஸ்ரீராமின் அப்பா இருந்திருந்தால் அப்படிச் சொல்லியிருப்பாரா...? என்னால் மட்டும் என் அப்படிப் பேச முடிந்தது. எது என்னைப் பேச வைத்தது என்று யோசித்துப் பார்த்தேன். அப்படிப் பேசினதற்காக வெட்கப்படுகிறேன் ரஞ்னி... இப்போது எல்லாவற்றை யும் விட எனக்கு ஸ்ரீராம்தான் பெரிதாகப் படுகிறான். அவனுக்கு அப்பாவாக இருக்கவே நான் அதித ஆசைப் படுகிறேன்.

"அப்பாவின் அன்பு கிடைக்காமல் தான் ஓடின ஓட்டம்தானே நீ கொடுத்த விளம்பரத்தைப் பார்த்து அங்கு வரவழைத்தது. அதே மாதிரி ஸ்ரீராம் ஓடக்கூடாது என்ப தன் காரணத்தினால்தானே இந்தக் கல்யாணமே நடந் தது. காரணத்தை மறந்து நான் காரியத்திற்காகத் தவித்தது என்னுடைய சாதாரண சித்தனையற்ற செய லைக் காட்டுகிறது. நீ என் மனைவி என்பதைவிடவும், நான் ஸ்ரீராமின் அப்பா என்று சொல்லிக்கொள்ளத்தான் அதிக ஆசைப்படுகிறேன். அந்தப் புத்திசாலித் சிறுவனை உயர்ந்த ஓர் இடத்தில் கொண்டுபோய் நிறுத்த நினைக் கிறேன்.

"எல்லாவற்றிற்கும் மேலாக உன் மனநிலை புரியா மல் உன்னை எற்படுத்தினது சொல்லத் தப்பு ரஞ்னி. அது பலாத்காரத்திற்குச் சமமானது. என்று உன் உள் மனசு என்னை முழுப்பூர்வமாகக் கணவனாக எற்றுக்கொள் கிறதோ—அப்போதுதான் நானும் அந்த ஸ்தானத்திற்கு தகுதி உடையவனாகிறேன். ஸோ—இப்போது எந்த இடத்திற்கும் போகவேண்டாம். எந்த ஊருக்கும் போக வேண்டாம். எதுவும் ஸ்ரீராம் இல்லாத எதுவும் வேண் டாம். அவனுக்கு லீவுவிட்டும். நீ சொன்ன மாதிரி மூன்று பேரும் ஒன்றாகச் சேர்ந்தே போகலாம், என்ன ரஞ்னி...!"

ரஞ்னி அவனை அப்படியே பார்த்துக்கொண்டு நின்றாள். கண்கலங்கிக் கிடந்தது. ஸ்ரீராம் மீது எத்தனை அன்பு வைத்திருக்கிறான். பார்க்கப்போனால் தன்னை விடவும் அதிக அன்பு இருக்கும் போலிருக்கிறது. தனக் காவது அன்பு வைக்கவேண்டிய அவசியம் இருக்கிறது. ஸ்ரீராம் தன் மகன், தன் பிள்ளை, தன் ரத்தத்திலும் சதையிலும் உதயமானவன். அதுவும் இவனுக்குத் தாயீ யும் சம்பந்தமில்லாத வேறு யாருக்கோ பிறந்த குழந்தை மீது இவன் பிரியம் வைப்பது எத்தனை பெரிய விஷயம்...!

நினைக்க நினைக்க அவன் விஸ்வரூபம் எடுத்து பிரம்மாண்டமாகத் தெரிய இதுவரை இல்லாத அன்பும், பிரியமும் ஏற்படப் பார்த்துக்கொண்டு நின்றவள் மெதுவாக அவனருகில் போய் கைகளை இதமாகப் பற்றி தலை குனித்து குழைந்த குரலில் ''வாருங்கள் படுக்கப் போகலாம்...'' என்றதும் அவனின் மன மாறுதலை முகபாவனையிலும், குரலின் குழைவிலும், கையைப் பற்றின ஸ்பரிச சுகத்திலும் புரிந்துகொண்ட பாஸ்கர் உடல் சிலிர்த்துப் போனான். அந்தச் சிலிர்ப்பு மனசுக்குள்ளும் பரவ, மெல்ல அவள் தோள்மீது கைபோட்டு படுக்கைக்கு நடத்தி அழைத்துக்கொண்டு போக—

வெளியில் ஜிலுஜிலுவென்று வீசின காற்று ஜன்னல் வழியாக உள்ளேயும் வீசத் தொடங்கிற்று...

முற்றும்